
மறந்து போக
மறுக்கும் மனசு
மூனா

மூனா

# மறக்க மறுக்கும் மனசு

மனஓசை

Muunaa

# Marakka Marukkum Manasu

First Edition: September 2019
Language: Tamil
Copyright : September 2019 Manaosai Verlag
Published by Manaosai Verlag, Germany
Printed in Stuttgart, Germany

Copyright: Muunaa
Compilation: Chandravathanaa
Cover Design: Muunaa

ISBN:-978-3-9813002-8-4

நான் பார்த்தது, படித்தது, கேட்டது, அநுபவித்தது என்பவற்றில் இருந்து சிலவற்றைத் தெரிவு செய்து இதில் பதிந்திருக்கிறேன்.

படித்துப் பாருங்கள் .

அன்பன்
மூனா

*மறக்க மறுக்கும் மனசு மணஓசையின் ஒன்பதாவது வெளியீடு.*

*'நெஞ்சில் நின்றவை' என்ற தொகுப்பில் தாயகத்தின் நினைவுகளை பதிந்திருந்த மூனா, 'மறக்க மறுக்கும் மனசு' தொகுப்பில் தான் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நிலத்தின் நினைவுகளைப் பதிந்துள்ளார்.*

*இது மூனாவின் மூன்றாவது தொகுப்பு.*

## உள்ளடக்கம்


1. சொர்க்கமே என்றாலும் ஷோபாபோல் வருமா? ................07
2. அலாரிப்பும் அங்கலாய்ப்பும் ................................................11
3. யார் சொல்லுவார்?.......................................................17
4. ஒரு இசையும் கதையும் ................................................21
5. கூடையில் ரெலிபோன் ..................................................27
6. மரணத்தைத் தேடி.........................................................33
7. முடிவு என்பது அடக்கம் ...............................................37
8. குமாரியான குழந்தை .....................................................41
9. இன்னுமொரு வழக்கு......................................................44
10. அரோஹரா, ஆறுமுகா ..................................................49
11. இலவசமாக கொஞ்சம் ஹைரஜன்சல்பைட் தரவா.............53
12. எங்கே அவன் தேடுதே சனம்..........................................57
13. அந்தக் கரித்துண்டைத் தூக்கி அங்காலை எறியுங்கோ......62
14. படம் பார்த்துக் கதை சொல்லு.........................................69
15. எப்போதான் சொல்லுவீங்கள்?........................................73
16. நான் சிறுத்துப் போனேன் ...............................................78
17. செத்துப்போன கருவாடு.................................................. 81
18. காணி நிலம் வீடு............................................................ 85
19. பிழைக்கத் தெரிந்தவள் ...................................................87
20. தேரு பார்க்க வந்திருக்கும் சித்திரப் பெண்ணே..................89
21. நேரம் நல்ல நேரம்...........................................................91
22. மாலை சூட வா...............................................................93
23. குண்டுச் சட்டியும் குதிரை ஓட்டமும்................................95
24. இல்லாமை நீங்க வேண்டும் ..........................................100
25. சட்டத்தின் முன்னால் ...................................................103
26. மடியில் ஒளிந்திருக்கும் துளி விசம் ...............................106
27. தனி ஒரு மனிதன் திருந்திவிட்டால்................................109

# சொர்க்கமே என்றாலும் ஷோபா போல் வருமா?

என்ன வேலைகள் இருந்தாலும் அவற்றை எல்லாம் சற்றே ஒதுக்கி வைத்துவிட்டு மாதத்தில் ஒரு தடவை தங்கள் குடும்பத்துடன் எல்லாப் பிள்ளைகளும் வீட்டுக்கு வந்து எங்களுடன் உணவு உண்டு உரையாடி விட்டுப் போவார்கள்.

அப்படியான ஒரு சமயத்தில், ‘‘நீங்கள் ஏன் தமிழாக்கள் நடத்துற விழாக்களுக்கு போறதில்லை’’ என்று அதி உச்சமான ஒரு கேள்வியை எனது இளைய மகன் கேட்டான். மூத்தவனும் அவனது கேள்விக்கு ஒத்து ஊதியதால் பிரச்சனை விவாதத்துக்கு வந்தது.

அவர்கள் உட்பட எனக்கும் இரண்டு பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கான அழைப்பிதழ்கள் வந்திருந்தன. அதனால்தான் இளைய மகன் அப்படிக் கேட்டான் என் பதைப் புரிந்து கொண்டேன். என்ன சாட்டுச் சொன்னா லும் அதை அவர்கள் ஏற்க மாட்டார்கள் என்பதில் எனக் குத் தெளிவு இருந்தது. சும்மா ஒப்புக்காக ‘‘நேரமில்லை’’ என்றேன்.

‘சும்மா ஷோபாவிலை படுத்துக் கொண்டு ரீவி பாக்கிறதுக்கே அப்பாவுக்கு நேரம் காணாது’’ மூத்தவனி ட ம் இருந்து ஒரு நக்கல் வந்தது. கூடவே ‘களுக்’ என்ற மருமகள்மாரின்ரை சிரிப்பும் சேர்ந்து வந்தன.

கொஞ்ச நேரக் கலந்துரையாடலுக்குப் பிறகு சொன்னேன், ‘‘ஓகே வாற சனிக்கிழமை நடக்கிற பிறந்த நாள் விழாவுக்குப் போவோம்’’ அந்தப் போவோம் என்ற வார்த்தைகளில் நான் அவர்களையும் மெதுவாக சேர்த்து விட்டிருந்தேன்.

வெள்ளை மேசை விரிப்பு. அதன் மேலே அலங்காரம் என்ற பெயரில் காகிதத்தாலான சில வேலைப்பாடுகள். அவற்றின் மத்தியில் பிளாஸ்ரிக் கப்புகள், கோலா, பன்ரா, ஸ்பிரைட் என்று ஒன்றரை லீற்றர் போத்தல்கள்... என மேசை நிறைந்திருந்தது. உளுந்து வடை ஒன்று கடலைப்பருப்பு வடையுடன் ஜோடி சேர்ந்து சம்பலோடு எங்கள் மேசைக்கு வந்தது. பக்கத்தில் இருந்த மனைவியிடம் "வடை எப்பிடி?" என்று கேட்டேன். கேட்கவில்லை என சைகையால் பதில் தந்தாள். எட்டு ஊருக்கும் கேட்கும்படி தமிழ்ப்பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

"உங்கடை வீட்டை வரோணும் எண்டிருந்தன். இஞ்சை கண்டது நல்லதாப் போட்டுது." அடுத்த பிறந்த நாள் விழாவுக்கான அழைப்பிதழ் எங்களுக்கு அங்கேயே கிடைத்தது. நான் எனது பிள்ளைகளைப் பார்த்தேன். அவர்கள் தங்களுக்குத் தரப்பட்ட அழைப்பிதழ்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தூரத்தில் இருந்த தெரிந்தவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். எனது வாய் பேசாமல் இருந்திருக்கலாம். அதுவும் பதிலுக்குச் சிரித்து விட என்னைப் பார்த்துச் சிரித்தவர் பேனையை எடுத்து எதையோ கிறுக்கி விட்டு என்னை நோக்கி எழுந்து வந்தார். அவரது கையில் வெள்ளை என்வெலப் தெரிந்தது. இன்னுமொரு அழைப்பிதழ் நடந்து வருகிறது என்பது தெரிந்தது.

சாப்பிடும் போது எனக்குள் ஒரு கேள்வி பிறந்தது. கொத்துறொட்டிக்கு வெங்காயம் போடுகிறார்கள் தானே! பிறகுஎதற்கு லீக்ஸையும் சேர்க்கிறார்கள்? எதற்கு வம்பு என்று எதுவுமே கேட்காமலே சாப்பிட்டேன்.

ஏற்கெனவே அடுத்த கிழமைக்கான பிறந்தநாள் விழாவின் அழைப்பிதழ் வீட்டில் இருக்கிறது. இப்பொழுது இன்னும் இரண்டு சேர்ந்திருக்கிறது. சும்மா சொல்லக் கூடாது ஒரு விழாவுக்குள் இன்னொரு விழா வந்து இடைஞ்சல் தராமல் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்

*கிழமைகளையும் உனக்கு எனக்கு என்று ஒற்றுமையாக பிரித்து எடுக்க எங்களுக்குத் தெரிந்திருக்கிறது.*

*“எங்கடை காரிலை இடமிருக்கு. சனிக்கிழமை நான் வந்து உங்களைப் பிக்கப் பண்ணுறன்” என்று மூத்தவன் சொல்லி இருந்தான். அவன் சனிக்கிழமை வந்த போது நான் ஷோபாவில் அமர்ந்திருந்தேன்.*

*“இன்னும் வெளிக்கிட இல்லையோ?” என்று கேட்டான். அவனது கேள்வியில் பட்டும் படாமலும் எரிச்சல் இருந்தது தெரிந்தது.*

*“காலிலை சுளுக்கிப் போட்டுது” என்று காலில் சுற்றி இருந்த பன்டேஜைக் காட்டினேன். தாயைப் பார்த்தான்.*

*“அப்பா வராமல் நான் தனியாக வாறது நல்லா இருக்காது” தாய் சொன்னதும் “வரயில்லை எண்டால் ஒரு எஸ்.எம்.எஸ் ஆவது அனுப்பி இருக்கலாமே. நான் மினக்கெட்டு இஞ்சை வந்திருக்கத் தேவையில்லை” என்று சலித்துக் கொண்டான். வேலை இடத்துக்கு நேரே போய் இருமி, தும்மி, பம்மிக் காட்டித்தானே சுகமில்லை எண்டு லீவு எடுக்க வேண்டி இருக்கு. அது போலத்தான் பன்டேஜைக் காட்டினால்தானே உனக்கும் விளங்கும் என்று எனது மகனுக்குச் சொல்ல நினைத் தேன்.*

*மூத்தவன் போகும்போது, “அப்பான்ரை பேரிலை ஐம்பது யூரோ குடுக்கிறன். அப்பாட்டை வேண்டி வையுங்கோ” என்று தாயிடம் காசை நினைவு படுத்தி விட்டுப் போனான்.*

*கடைக்குப் போய் அடுத்த கிழமைக்கான பொருட் களெல்லாம் வாங்கி வந்து, வார விடுமுறையில் செய்வ தற்கென ஒதுக்கி வைத்திருந்த வேலையில் இருபத் தைந்து வீத வேலையைமட்டும் முடித்துவிட்டு சாப்பிட்டு ‘அப்பாடி’ என்று ஷோபாவில் அமர்ந்து ஐந்து நிமிடம்*

*கூட ஆகி இருக்காது பிறந்தநாள் விழாவுக்குப் போன பிள்ளைகள் விழா முடிந்து திரும்பி வந்தார்கள்.*

*ஷோபாவில் அமர்ந்திருந்த என்னைப் பார்த்த மூத்தவனின் கண்களில் ''நான் போற பொழுதே ஷோபா வில்தான் இருந்தாய். திரும்பி வருர போதும் அதிலேயே இருக்கிறாய். ஐஞ்சாறு மணித்தியாலமா ஒரே இடத்தி லேயே இருக்கிறியே…'' என்ற ஏளனம் தெரிந்தது.*

*சின்னவனின் கையில் வெள்ளை என்வெலப்பு கள் இருந்தன. நான் அவனது கையைப் பார்ப்பதைப் புரிந்து கொண்ட அவன், ''இன்னும் மூன்று விழாக் க ளுக்கு அழைப்புக் கிடைச்சிருக்கு, உங்களுக்கும் தந்தவை யள்´'' என்றான்.*

*கதைத்து முடிந்து அவர்கள் போன பிறகுதான் பார்த்தேன், என்னுடைய அழைப்பிதழ்களுடன் அவர் களுக்குக் கிடைத்த அழைப்பிதழ்களும் கலந்து என் மேசையில் ஒன்றாக இருந்தன.*

*ஷோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டேன்.*

***10.02.2018***

# அலாரிப்பும் அங்கலாய்ப்பும்

*தாய் சிக்கன், தந்தூரிச் சிக்கன், பட்டர் சிக்கன், சிக்கன் பூரி, கிட்னி பிரை ஸ்மால் சிக்கன், நண்டுக்கறி, இறால் குழம்பு, இறால் பிரட்டல், கணவாய்ப் பிரட்டல், சுறாக் குழம்பு, சுறாப் பொரியல், ஆட்டுக்கால் குழம்பு, ஆட்டிறைச்சிக்குழம்பு, ஆட்டிறைச்சிப்பிரட்டல், உருளைக் கிழங்குப்பிரட்டல், மரவள்ளிக்கிழங்குப் பிரட்டல், சொதி, பச்சை மிளகாய்ச் சம்பல், சிவத்த மிளகாய்ச் சம்பல், கொத்தமல்லித் துவையல், இடியப்பம், பிட்டு, நூடில்ஸ், மரக்கறி நூடில்ஸ், பூநகரிக் குத்தரிசிச் சோறு, ஜஸ்மின் அரிசிச் சோறு, பஸ்மதிஅரிசிச் சோறு, பிரியாணி...*

*இதை எல்லாம் ஏன் இங்கே வரிசைப் படுத்துகி றேன் என்று பார்க்கிறீர்களா? ஒருவேளை சமையல் குறிப்புகள் எழுதும் நோக்கமா என ஐயப் படுகிறீர்களா?*

*பயப்படாதீர்கள் அப்படியான அஜீரண வேலை களை நான் செய்யப் போவதில்லை. பிறகு எதற்காக என்றா கேட்கிறீர்கள்? பின்னர் சொல்கிறேன்.*

*எனக்கு அருகில் இருந்த பொதுமகன் நெளிந்து வளைந்து நிறையவே சிரமப் பட்டுக் கொண்டிருந்தார். அவரின் இவ்வாறான அசைவுகளால் மேடையில் நடந்து கொண்டிருந்த அரங்கேற்றத்தில் என்னால் அதிகம் கவனம் செலுத்த முடியாமல் இருந்தது. மரியாதை நிமித்தம் மிகப் பொறுமையாகப் பேசாமல் இருந்தேன்.*

*ஆனால் வரவர பொதுமகனின் அசைவுகள் அதிக மாகிக் கொண்டே போனது. ஒரு கட்டத்தில் மேடையில் நடக்கும் அரங்கேற்ற முத்திரைக்கான அசைவுகளை விட இவரது அசைவுகள் அதிகமாகி விடுமோ என்ற பயம் எனக்கு வந்து விட்டது. பொறுமையை இழந்து விட் டிருந்தேன்.*

*„ஏன் என்னாச்சு?' நிகழ்ச்சிக்கு இடையூறு வராத வண்ணம் பொதுமகனைப் பார்த்து மெதுவாகக் கேட்டேன்.*

*„ஒன்றும் இல்லை' என பொதுமகன் கண்களால் ஜாடை காட்டினார்.*

*„பிறகு எதுக்கு இருக்கையில் இருந்து அங்கேயும் இங்கேயுமாக நெளிந்து கொண்டிருக்கிறீங்கள்?'*

*„கொஞ்சம் கூட இறுக்கிப் போட்டன்'*

*அரங்கேற்றத்திற்கு வந்திருந்தவர்களுக்கு மதிய உணவு தந்திருந்தார்கள். வெள்ளித் தட்டின் நடுவே வாழையிலை போட்டு அதன் மேல் சோறு, பருப்பு வைத்து அவற்றைச் சுற்றி ஒன்பது வெள்ளிக் கிண்ணங் களில் விதவிதமான கறிகளுடன் வடகம், அப்பளம், மோர் மிளகாய்ப் பொரியலுடன் வடை, பாயாசம் என மதியச் சாப்பாடு பலமாக இருந்தது.*

*அதைத்தான் பொதுமகன் கொஞ்சம் கூடவாக இறுக்கிப் போட்டார் எனப் புரிந்தது.*

*காற்றில் ஏதோ ஒரு வாடை. பொதுமகனின் உபயமோ? ஐயம் கொண்டு அவரைப் பார்த்தேன்.*

*„மூச்சுக்காற்று உள்ளே போகாமாலும், வெளியே வராமலும் சரியான கஸ்ரமா இருந்தது. ஏவறை விட்டாப் போலைதான் ஆறுதலா இருக்கு'*

*பொதுமகன் ஏப்பம் விடவும் இடைவேளை வரவும் சரியாக இருந்தது.*

*மண்டபத்திற்கு வெளியே பலவிதமான கேக்கு கள், தேநீர், கோப்பி, குளிர்பானங்கள் என அமர்க்கள மாக இருந்தது. அவற்றிற்கு நடுவே பொதுமகனின் நட மாட்டம் தெரிந்தது. என்னைக் கண்டவுடன் ஒரு நமட்டுச் சிரிப்பைக் காட்டி விட்டு அவர் தனது கடமை*

*யிலேயே கண்ணாக இருந்தார்.*

*மண்டபத்திற்கு வெளியே நிற்கையில் குளிர் காற்று இதமாக இருந்தது. காற்றும் சுத்தமாக இருந்தது. நேரம் போனது தெரியவில்லை.*

*„அரங்கேற்றம் துடங்கீட்டுது"*

*ஆரவாரங்கள் கேட்டு மண்டபத்திற்குள் வந்து அமர்ந்தேன்.*

*பொதுமகனைப் பார்த்தேன்.*

*கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தார். தூங்கும் நிலைக்கு வந்து விட்டார் எனத் தெரிந்தது.*

*மெதுவாகச் செருமினேன்.*

*திரும்பி என்னைப் பார்த்தார். „நான் நினைச்சன் நீங்கள் வீட்டை போயிட்டீங்கள் எண்டு'*

*„நிகழ்ச்சி முடிய ஆக்களைக் கண்டு சொல்லிப் போட்டுப் போறதுதானே முறை'*

*'அதுதான் எனக்கும் உள்ள பிரச்சினை. அரங் கேற்றம் முடிஞ்சாப்போலை மொய் குடுத்து, போட்டோ வுக்குப் போஸ் குடுக்காட்டில் வந்தது போனது தெரியா மல் போயிடும். மொய் குடுத்த உடனை பறந்திடுவன்'*

*'அப்ப இரவுச் சாப்பாட்டுக்கு நிக்கேல்லையோ?'*

*'இரவுச் சாப்பாடும் இருக்கே?'*

*'அழைப்பிதழைச் சரியாப் பாக்கேல்லைப்போலை'*

*பொதுமகனின் முகம் கொஞ்சம் மாறிப் போனது. இரவுச் சாப்பாட்டுக்கு வயிற்றில் இடமிருக்குதோ என்ற*

கவலை அவரைப் பிடித்துக் கொண்டது.

அப்பொழுதுதான் நான் இந்தப் பத்தியின் ஆரம் பத்தில் குறிப்பிட்ட தாய் சிக்கன் தொட்டு... இரவுச் சாப்பாட்டுக்கு இருந்த அயிட்டங்களை அவர் காதுக்குள் சொன்னேன்.

'என்னது இவ்வளவுமா? சொல்லவேயில்லை' பொதுமகனுக்குச் சங்கடமாக இருந்தது. 'எல்லாமாக நாற்பத்தியேழு ஐயிட்டங்கள் வரும் போலை'

நான் அதை ஆமோதித்தேன்.

'என்ன செய்யலாம்' என்று பொதுமகன் என்னிடம் கேட்டார்

'நான் ஒரு கதை சொல்லவா?'

'இப்பவா? எதுக்கு?'

'சொல்லுறன் கேளுங்களேன்'

'பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அரசன் ஒருவன். அவன் ஒரு சாப்பாட்டுப் பிரியன். எப்பொழுதும் சாப் பிட்டுக் கொண்டே இருப்பான். ஒவ்வொரு முறையும் சாப்பிட்டு முடிந்தவுடன் வாய்க்குள் இரண்டு விரல்களை விட்டு வாந்தி எடுத்து விட்டு அடுத்த சாப்பாட்டுக்குத் தயாராகி விடுவான்'

பொதுமகன் கதை சொல்வதை நிறுத்தும் படி ஜாடை காட்டினார்.

'இரண்டு விரல் விட இடமிருந்தால் இன்னும் இரண்டு கேக் துண்டை உள்ளே தள்ளி இருக்க மாட்டேனா?'

பொதுமகனின் இந்தக் கேள்விக்குப் பிறகு என்

னால் மேற்கொண்டு வாயைத் திறக்க முடியவில்லை. மௌனமாகி விட்டேன்.

நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்தேன். தூரத்தில் பொதுமகன் நடக்க முடியாமல் சிரமப்பட்டு நடந்து போவது தெரிந்தது. கூப்பிட்டுப் பார்த்தேன். அவர் திரும்பிப் பார்க்கவும் இல்லை. நிற்கவும் இல்லை. ஓடிச் சென்று இடை மறித்தேன்.

„என்ன மூச்சிரைக்க ஓடிவாறீங்கள்?' பொது மகன் என்னிடம் கேட்டார்.

„கனதரம் கூப்பிட்டன். நீங்கள் நிக்கேல்லை'

„எனக்குக் கேக்கேல்லை'

பசியில் காது அடைக்கும் என்பார்கள். இவருக்கு அதிகம் புசித்ததால் அடைத்திருக்கிறது.

'நிகழ்ச்சி எப்பிடி இருந்தது?' கேட்டேன்.

'அசத்திப் போட்டான். ஒரு நிகழ்ச்சியிலையும் இப்பிடி ஒருத்தரும் சாப்பாடு போடேலை'

'கன சாப்பாடு மிஞ்சிப் போட்டுதாம்' எனது கவலையைச் சொன்னேன்.

'அதுக்குத் தண்ணியும் தந்திருக்கோணும். வழிச்சு துடைச்சிருப்பம்'

'அப்ப நிகழ்ச்சியைப் பற்றி..?'

'அதுதானே சொன்னன் அசத்திப் போட்டான். ஒரு நிகழ்ச்சியிலையும் இப்பிடி ஒருத்தரும் சாப்பாடு போடேலை எண்டு'

பொதுமகனுக்கு எரிச்சல் வந்திருக்க வேண்டும். அவரது பேச்சில் அது தெரிந்தது. மேற்கொண்டு கதைக்

*கும் நிலையில் அவர் இல்லை என்பது புரிந்தது.*

*அவரைச் சந்தித்ததில் மகிழ்ச்சி என்று சொல்லி விட்டு மீண்டும் மண்டபத்திற்குள் வந்தேன்.*

*கொட்டிச் சிதறிக் கிடந்த உணவுகளைக் கூட்டி அள்ளிக் கொண்டிருந்தார்கள்.*

*பயிருக்குப் போக வேண்டிய நீரை நாங்கள் திசை மாற்றிப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறோம்.*

*நாங்கள் எளிதில் எல்லாவற்றையும் மறந்து போகிறவர்களா?*

***03.10.2014***

# யார் சொல்லுவார்?

*83,84ம் ஆண்டுக்காலங்களே தமிழர்கள் அதிகமாக யேர்மனிக்குப் புலம் பெயர்ந்த காலங்களாக இருந்தன. ஈழத் தமிழர்களுக்கு வடக்குத்தான் அதிகம் பிடிக்குமோ என்னவோ, பல ஈழத்தமிழர்கள் யேர்மனியின் வட திசை சார்ந்த மாநிலமான Nordrhein-Westfalen இலேயே அப்பொழுது தங்கிக் கொண்டார்கள்.*

*புலம் பெயர்ந்து வந்த போதும் தாங்கள் சார்ந்த போராட்டக்குழுக்களை யேர்மனியில் காலூன்ற வைப்ப தற்கு அவற்றின் அபிமானிகள் அன்று பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். இதில் தெற்கு யேர்மனியில் விடுதலைப்புலிகளின் அபிமானிகள் சிலர் அடிதடிகளில் இறங்க, அவர்கள் யேர்மனியக் காவல்துறையினரால் கைதாகிப் போனார்கள். அதில் சிலர் சிறைக்கும் போய் வந்தார்கள். அதன் பின்னர் இயக்கங்களின் பெயரால் புலம் பெயர் தமிழர்களுக்கு மிரட்டல்கள், பிரச்சனைகள் ஏதாவது வந்தால் தங்களுக்குத் தகவல் தரும்படி யேர் மனியக் காவல்துறை மஞ்சள் நிறத்தில் துண்டுப் பிரசுரம் ஒன்றை தமிழில் அச்சடித்து புலம்பெயர் தமிழர்களின் வீடுகளுக்கு அனுப்பியும் வைத்திருந்தது. இந்த நிகழ்வு யேர்மனியில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர் களுக்கு அன்று பெரும் பின்னடைவாகிப் போயிருந்தது.*

*இந்த நிலமையைச் சீர் செய்வதற்காக, பழ. நெடுமாறனும் தோழர்.மணியரசனும் தொண்ணூறில் யேர்மனிக்கு வந்தார்கள். (அல்லது அனுப்பி வைக்கப் பட்டார்கள்). இவர்களது வருகையின் போது யேர்மனி யில் தோற்றம் பெற்றதுதான் உலகத் தமிழர் இயக்கம். இந்த உலகத்தமிழர் இயக்கம், ஈழப்போராட்டத்தை சற்று ஓரமாக வைத்துவிட்டு புலம்பெயர்ந்தோருக்கான தமிழ்க் கல்வி, தாயகத் தமிழர்களுக்கான புனர்வாழ்வு இரண்டை*

*யும் முன்னிலைப் படுத்தியது. இந்த இரண்டில் உலகத் தமிழர் இயக்கத்தின் (தமிழாலயம்) நிர்வாகியாக இரா. நாகலிங்கம் மாஸ்ரரும், தமிழர்புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பொறுப்பாளராக உ.பிரபாகரனும் தெரிவாகியிருந்தார் கள். தமிழாலயமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் புலம் பெயர் தமிழர் மத்தியில் தங்களை வெளிக்காட்ட கலை நிகழ்ச்சிகளை நடாத்தத் தொடங்கின. பொங்கல் விழா, வாணிவிழா என தமிழாலயங்களும், இன்னிசை இரவு என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தங்களுக்குள் வரையறுத்துக் கொண்டு யேர்மனியின் முக்கிய நகரங் களில் கலை நிகழ்ச்சிகளை நடாத்தின.*

*இவ்வாறான கலை நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கும் அவர்களது உறவுகளுக் கும் மட்டுமே மேடைகள் தரப்பட்டன. அப்படியான ஆதரவாளர் ஒருவரின் மகள்தான் சுஜிதா. அப்பொழுது நடந்த அநேக கலைநிகழ்ச்சிகளில் சுஜிதாவின் நடனங் கள் மேடைகளை அழகு படுத்தின.*

*Nordrhein-Westfalen மாநிலத்தின் Linnich நகரில் உள்ள யேர்மனியப் பாடசாலை ஒன்றில் சுஜிதா படித்துக் கொண்டிருந்தாள். 26.08.1993 அன்று மாலை சுஜிதா வின் பெற்றோர் அவளது பாடசாலைக்குச் சென்று தங்களது மகள் "சுஜிதா இன்னும் வீட்டுக்குத் திரும்ப வரவில்லை?" என்று அறிவித்திருக்கிறார்கள். "அவள் இன்று பாடசாலைக்கே வரவில்லையே" என்ற பதில் தான் பெற்றோருக்குக் கிடைத்தது. அவளது பெற்றோர் கள் உடனடியாக காவல்துறையிடம் சென்று தங்கள் மகளைக் காணவில்லை என முறைப்பாடு செய்தார்கள். சிறார்களைக் காணவில்லை என்று முறைப்பாடு வந்தால், முதலில் அயலவர்கள், நண்பர்கள், உறவினர்க ளிடம் போய் விசாரியுங்கள் என்று காவல்துறை ஆலோ சனை தரும். அத்துடன் தங்கள் தரப்பு விசாரணை களையும் அவர்கள் மேற்கொள்வார்கள்.*

*சுஜிதா காணாமல் போன காலகட்டத்திலே மேலும் இரண்டு சிறுமிகள் காணாமல் போயிருக்கிறார்*

கள். ஒன்று, *Hessen* நகரில் லெபனான்நாட்டைச் சேர்ந்த 12 வயதான அபீர் என்ற சிறுமி. மாலை ஐந்துமணிக்கு கடைக்குச் சென்றவள் வீடு திரும்பவில்லை. மற்றையது அபீர் வீட்டின் அயலில் வசித்த பொஸ்னியா நாட்டைச் சேர்ந்த மரியானா என்ற ஒன்பது வயதுச் சிறுமி. இந்த இரண்டு சம்பவங்களையும் சுஜிதா காணாமல் போனதையும் ஒன்றிணைத்து இது வெளிநாட்டவர்களின் மீதான நாசிகளின் செயற்பாடுகள் எனப் பேச்சு வேகமாகக் கிளம்பியது.

ஒரு கிழமை கடந்தும் காணாமல் போன சுஜிதா வீட்டுக்குத் திரும்ப வரவேயில்லையென்று செப்ரெம்பர் 2ந் திகதி, சுஜிதாவின் பெற்றோர்கள் ஒரு சட்டத்தரணியை அணுகினார்கள்.

சுஜிதா காணாமல் போய் பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு, 07.09.1993 அன்று *Nordrhein-Westfalen* மாநிலத்தில் உள்ள *Mindergangelt* என்ற காட்டுப் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வழிப்போக்கர் ஒருவர் காட்டின் நடுவே தீ எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு காவல்துறைக்கு அறிவித்திருக்கிறார். அங்கு எரிந்து கொண்டிருந்தது சுஜிதாவின் உடல்தான் என்பதை காவல்துறை பின்னர் உறுதிப்படுத்தியது.

13 வயதான சுஜிதாவின் மரணம் புலம்பெயர்ந்து யேர்மனியில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

அப்பொழுது விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளராக இருந்த லோரன்ஸ் திலகர் முன்னிலையில் நடந்த அவளது இறுதி நிகழ்வில், தங்கள் சொந்த மகளையே பறிகொடுத்தது போன்ற துயரத்தோடு, இயக்க வேறுபாடுகள் இன்றி பல தமிழர்கள் கிடைத்த வாகனங்களில் ஏறி தூர இடங்களில் இருந்தெல்லாம் பயணம் செய்து வந்து பங்கு பற்றியிருந்தார்கள்.

அரைகுறையாக எரிந்த சுஜிதாவின் உடலை,

*தடவியல் நிபுணர்கள் ஆராய்ந்து, எரிப்பதற்குச் சற்று முன்னர்தான் அதாவது செப்டம்பர் 7 ம் திகதிதான் அவள் இறந்திருக்கிறாள் என அறிக்கை தந்தார்கள்.*

*போதிய நாட்கள் இருந்தும் காவல்துறையின் அலட்சியப் போக்கினால்தான் தங்களது மகளைக் கண்டு பிடிக்க முடியாமல் போய் விட்டது என அவளது பெற் றோர்கள் காவல்துறை மீது குறை சொன்னார்கள்.*

*தங்கள் மீது எந்தத் தவறும் கிடையாது என்றும் தாங்கள் மேற்கொண்ட விசாரணைகளில் சுஜிதாவுக்கு ஒரு ஆண் நண்பன் இருந்திருக்கிறான் என்பதும், அந்த நட்பை அவளது பெற்றோர் ஏற்கவில்லை என்பதும் தெரிய வந்திருக்கிறது. அத்துடன் இந்து முறைப்படி சடங்குகள் செய்து மட்குடம் உடைத்து, தீ மூட்டியே அவளது உடல் எரிக்கப் பட்டிருக்கிறது. ஒரு கொலைக் குப் பின்னர் கொலையாளி, தடயங்களை அழித்து, தான் தப்பிக்கப் பார்ப்பானே தவிர, கொலையுண்ட வரின் உடலை எடுத்துப் போய் இறுதிச் சடங்குகள் செய்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று. கூட்டிக் கழித்துப் பார்த்தால், அவளது மரணத்துக்குப் பொறுப் பேற்க வேண்டியவர்கள் அவளின் பெற்றோரே என்று காவல்துறை தாங்கள் சேகரித்த ஆதாரங்களோடு சொன்னது.*

*2018 உடன் சுஜிதாவின் மரணம் நிகழ்ந்து இருபத்தைந்து வருடங்களாகின்றன. கொலையாளி யார்? யார்தான் சொல்லப் போகிறார்கள்?*

***03.04.2018***

# ஒரு இசையும் கதையும்

*ஏறக்குறைய இரண்டு வருடங்களாக எனக்கு அவனைத் தெரியும். வேலைக்கு நான் பயணிக்கும் அதே ரெயினில்தான் அவனும் பயணிக்கிறான்.*

*காலையில் ரெயினில் பயணிப்பவர்கள் பலர் தூங்கி வழிந்து கொண்டிருப்பார்கள். சிலர் தினசரிப் பத்திரிகைகளிலோ அல்லது புத்தகங்களிலோ ஆழ்ந்து இருப்பார்கள். ஒரு சிலர் காதுக்குள் வயர்களை மாட்டிக் கொண்டு கைத்தொலைபேசியில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படியான சூழலில் நான் அவனு டன் பேசிக் கொள்வதில்லை. பொதுவாகவே மெது வாகப் பேசிப் பழக்கப்படாதவர்கள் நாங்கள். எங்களது உரையாடல்கள் அந்த அதிகாலையில் நித்திரைத் தூக்கத் தோடு பயணிப்பவர்களுக்கு எரிச்சல்களையும் உடல் நெளிவுகளையும் தந்து விடக் கூடாது என்பதற்காகவே ரெயினில் பயணிக்கும் பொழுது நான் அவனுடன் உரை யாட விரும்புவதில்லை. அவனும் அதைப் புரிந்து கொண் டிருந்ததால், இருவரும் ரெயினில் சந்திக்கும் பொழுது களில் வெறும் நலன் விசாரிப்புகளிலேயே நிறுத்திக் கொள்வோம். ரெயினை விட்டு இறங்கிய பிறகு ஏதாவது என்னிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டி இருந்தால் நின்று உரையாடுவான். இல்லாவிட்டால், "அண்ணை வேலைக்கு நேரமாச்சு" என்று சொல்லி விட்டு தன் வழியே பறந்து விடுவான்.*

*எனது நண்பன் கணேசனின் நிறம்தான் அவனுக் கும் என்பதால் இங்கே அவனுக்கு கணேசன் என்று பெயரிடுகிறேன். நாட்டில் இருக்க முடியாமல் பெரும் செலவு செய்து 2014 இல் கணேசன் எப்படியோ யேர்மனிக்கு வந்து விட்டான்.*

*கணேசனது அரசியல்தஞ்சத்துக்கான விசாரணை இன்னமும் நடைபெறவில்லை. அவனது விண்ணப்பத்தை*

*வாங்கி வைத்துக் கொண்டு, "போய் ஏதாவது வேலை யைத் தேடிச் செய்" என்று அனுப்பி விட்டார்கள். தனது அரசியல் தஞ்சத்துக்கான விசாரணைக்கான அழைப்பிதழ் விரைவில் வந்துவிடும் என்ற நம்பிக்கையில் இன்று நாளை என்று நாட்களை இரண்டு வருடங்களாக எண்ணிக் கொண்டிருக்கிறான். விசாரணை நடந்தால் தனது அரசியல் தஞ்சம் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு மொழி தெரியாத நாட்டில் விழி பிதுங்கி இப்பொழுது வேலை செய்து கொண்டிருக்கின்றான்.*

*அன்று ரெயினால் இறங்கி, வேலைக்குப் போக நான் எத்தனித்தபோது, கணேசன் சற்றுக் கலக்கத்துடன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்ததை அவதானித்தேன்.*

*வழமையாக "அண்ணை வேலைக்கு நேரமாச்சு" என்று சொல்லி விட்டு, சிட்டாகப் பறந்து விடும் அவன் இன்று தயங்கி நிற்பதில் ஏதோ ஒரு காரணம் இருப்பது விளங்கியது. ஆனாலும் வேலைக்குப் போகும் என்னை இடைமறிக்க அவன் தயங்குகிறான் என்பதை அவனது முகம் காடிக் கொடுத்தது.*

*நானே அவனிடம் பேச்சை ஆரம்பித்தேன்.*

*"வழக்கமாக அவசரமாக ஓடுவீர் இண்டைக்கு என்ன வேலைக்கு லீவோ?"*

*"ஓமண்ணை"*

*"லீவ் எண்டால் என்னத்துக்கு ரெயினிலை இவ்வளவு தூரம் வந்தனீர்?"*

*"ரெயினிலை கதைக்கிறது கஸ்ரம். அதுதான்... நீங்கள் அவசரமா வேலைக்குப் போகோணுமோ?"*

*வேலைக்கு அவசரமாகப் போவதைவிட வேலை க்கு நேரத்துக்குப் போவதையே பல வருடங்களாக நான்*

கடைப்பிடித்து வருகிறேன். இன்று கணேசனின் முகத்தில் இருந்த கலக்கம் என்னைத் தடுத்து விட்டது.

"அண்ணை ஒரு பிரச்சினையிலை மாட்டுப் பட்டிருக்கிறன். என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை"

கணேசனது பேச்சில் இருந்து அவன் என்னிடம் இருந்து ஆலோசனையையோ அல்லது உதவியையோ எதிர்பார்க்கிறான் என்பது தெரிந்தது.

அவன் தனது கதையின் ஆரம்பத்தைச் சொல்லத் தொடங்கினான்.

இந்த நாட்டில் அரசியல் தஞ்சம் கோருவதற்கான முழுத்தகமைகளும் அவனிடம் இருந்தன என்பது அவனது பேச்சில் இருந்து தெரிய வந்தது. நேற்று கணேசன் வங்கிக்குச் சென்று பணம் எடுக்க முற்பட்ட போது, அவனது கணக்கில் பணம் இல்லை என்றிருக்கிறார்கள். ஆனால் தனது வங்கிக் கணக்கில் பணம் இருப்பதாக கணேசன் அடம் பிடித்த பொழுது, அந்த மாதத்திற்கான அவனது வங்கிக் கணக்கை பிரதி எடுத்து அவனது கையில்கொடுத்து “வீட்டுக்குப்போய் ஆறுதலாக இருந்து உனது கணக்கைப் பார்“ என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். தனது வங்கிக் கணக்கைப் பார்த்த பொழுதுதான் கணேசனுக்கு தலை சுற்றி இருக்கிறது.

Amazon நிறுவனம் அவனது வங்கியில் இருந்து 390யூரோக்களை எடுத்திருந்தது. இத்தனைக்கும் Amazon நிறுவனத்தில் கணேசன் எந்தப் பொருட்களும் வாங்குவதேயில்லை. இது விடயமாக வங்கியில் கதைப்பதற்கு கணேசனுக்கு மொழி ஒரு தடங்கலாக இருந்திருக்கிறது. இப்பொழுது அவன் என்னைச் சந்தித்துக் கதைக்க வந்ததற்கான காரணம் இதுதான்.

Amazon நிறுவனத்தால் ஒரு தடவைதான் பணம் எடுக்கப்பட்டதா? அல்லது முன்னரும் இப்படி நடந்திருக்கிறதா? என்று முதலில் அறிய வேண்டும், வீட்டுக்குப்

போய் அவனது வங்கியின் மாதாந்தக் கணக்குகளைத் தேடி எடுத்துச் சரி பார்த்துவிட்டு எனக்கு அறிவிக்கச் சொன்னேன்.

"சரி அண்ணை" என்று சொல்லி விட்டு மீண்டும் ரெயின் ஏறி திரும்பிப் போய்விட்டான்.

அன்று மதியம் நான் வேலையில் இருந்த பொழுது கணேசனின் அழைப்பு வந்தது.

"அண்ணை கனதரம் காசு எடுத்திருக்கினம். எல்லாமா கூட்டிப் பாத்தால் 2472 யூரோக்கள் வருகுது" என்றான்.

தனது வங்கிக் கணக்கையே பார்க்க முடியாதள வுக்கு நாள்முழுதும் கணேசன் ஓடியோடி வேலைசெய்து கொண்டிருக்கிறான். அப்படியான நிலையில் கணேசன் மட்டுமல்ல யேர்மனியில் பல தமிழ் இளைஞர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். யேர்மனிக்கு வருவதற்கு வாங்கிய கடன், ஊரில் தங்கையரைக் கரை சேர்க்கும் தமையனின் கடன், ஒரு பிள்ளையாக பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடன் என்று அவன் முன்னால் நிறையவே கடன்கள் குவிந்திருக்க நித்திரை க்கே நேரமில்லாது இருப்பவனுக்கு வங்கிக் கணக்கைப் பார்க்க எங்கே நேரம் இருக்கப் போகிறது?

அடுத்தநாள் வேலைக்கு விடுமுறை எடுத்துக் கொண்டேன். கணேசனுக்கு ஒருநாள் உழைப்பு இல் லாமல் போனது. அவனது வங்கியில் பெற வேண்டிய தகவல்களை எடுத்துக் கொண்டு பொலீஸில் இந்த விடயத்தை முறைப்பாடு செய்து கொண்டோம்.

பொருள் எந்த முகவரியில் விநியோகிக்கப் பட்டிருந்தது என்ற தகவல் அங்கிருந்து கிடைத்தது. முகவரியைப் பார்த்தவுடன் கணேசன் சொன்னான், "இங்கை தானண்ணை நான் ஆறு மாசங்களுக்குக் கிட்ட இருந்தனான்"

*நான் பேசாமலேயே நின்றேன்.*

*கணேசனே தொடர்ந்தான்.*

*"யேர்மனிக்கு வந்த புதுசிலை இந்த அட்ரஸ் ஸிலை இருக்கிற வீட்டிலைதான் தங்கி இருந்தனான். ஊர்க்காரர். எனக்கு பாங்கிலை எக்கவுண்ட் எல்லாம் திறந்து தந்தவையள்..." கணேசன் சொல்லிக் கொண்டே போனான் எல்லாவற்றையும் என் காதுகளில் நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் தவறு எங்கே நடந் திருக்கிறது என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது.*

*„இனி இந்தப் பிரச்சனையை பொலிஸ் பார்த்துக் கொள்ளும்''*

*கணேசனை அமைதிப் படுத்தி விட்டு அவரவர் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டோம். மறுநாள் பொலிஸ் நிலையத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. கணேசனை அழைத்துக் கொண்டு அங்கே போனேன்.*

*"உங்களுடைய நாட்டுக்காரர்தான். ஆனால் தான் இதைச் செய்யவில்லை என்று மறுக்கிறார். தனது 15 வயது மகன்தான் விளையாட்டாகச் செய்து விட்டான் என்கிறார். ஆனாலும் அமற்ஸோன் நிறுவனத்தில் வாங் கிய பொருட்கள் எல்லாம் 15 வயதுச் சிறுவனுக்கு அவசியமில்லாதவை. எல்லாமே பெரியவர்கள் பாவிக்கக் கூடியவை. நாங்கள் அதிகாரபூர்வமாக நடவடிக்கை எடுத்தால், அந்தப் பையனது மேற்படிப்புக்கும் வேலைக் கும் இந்தக் குற்றச்செயற்சான்றிதழ் நாளைக்கு இடை யூறாக இருக்கலாம். அடுத்த பத்து வருடங்களுக்கு பொலீஸ் பதிவில் இது இருக்கும்" பொலீஸ் அலுவலர் தனது அப்பிப்பிராயத்தையும் சேர்த்துச் சொன்னார்.*

*"அண்ணை, நான் இப்ப சட்ட நடவடிக்கை எடுத்தால் அந்தப் பெடியன்ரை வாழ்க்கை பிழைச்சுப் போகலாம்"*

*தனது மகனின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொள்ளாது தான் தப்பிக்க நினைக்கும் ஒரு தந்தையை எண்ணிப் பார்த்தேன். கணேசனது மதிப்பு என்னுள் உயர்ந்து இருந்தது.*

*"உங்களது பணத்தை அடுத்த ஆறுமாத காலத் திற்குள் சிறிது சிறிதாகவோ, முழுவதுமாகவோ தந்து விடுவதாக அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். அப்படி நடக்காத பட்சத்தில் நீங்கள் எங்களிடம் வந்து மீண்டும் முறையிடலாம் என அலுவலகர் சொன்னார்"*

*ஆறு மாதங்கள் காத்திருப்பதில் தனக்குப் பிரச் சனை இல்லை என்று கணேசன் சொன்னான்.*

*அடுத்தநாள் வேலைக்குப் பயணிக்கும் பொழுது ரெயினில் கணேசனைக் கண்டேன். அவனைக் கண்ட வுடன் எனக்கு இரண்டு சினிமாப் பாடல்கள் நினைவுக்கு வந்ததன.*

*ஒன்று, தாய் சொல்லைத் தட்டாதே என்ற படத் தில் இருந்து சௌந்தரராஜன் பாடிய "போயும் போயும் மனிதனுக்கிந்தப் புத்தியைக் கொடுத்தானே…" என்ற பாடல்.*

*மற்றையது, நீதிக்குத் தலை வணங்கு திரைப்படத் தில் ஜெயச்சந்திரன் பாடிய "எத்தனை மனிதர்கள் உலகத்திலே அம்மா எத்தனை உலகங்கள் இதயத்திலே.." என்ற பாடல்.*

*ரெயினில், நான் வாசித்துக் கொண்டிருந்த புத்த கத்தை மூடி வைத்துவிட்டு இணையத்தில் அந்த இரண்டு பாடல்களையும் தேடி எடுத்துக் கேட்டுப் பார்த்தேன். கவிஞர்கள் அனுபவித்துத்தான் அந்தப் பாடல்களை எழுதினார்களோ என்ற எண்ணம் வந்தது.*

***19.11.2016***

# கூடையில் ரெலிபோன்

*“சனிக்கிழமை ரெஸ்ரோரண்டுக்கு சாப்பிடப் போறம். நீயும் வருறாய்” றொனி உரிமையோடு என்னிடம் சொன்னான்.*

வேலை இடத்தில் றொனிதான் இளைஞன். மற்றவர்கள் எல்லாம் நான் உட்பட அரை நூற்றாண்டைக் கடந்தவர்கள். இளைஞனாக இருந்தாலும் வயது வித்தியாசம் பார்க்காமல் றொனி எங்கள் எல்லோருடனும் நண்பன் போலவே பழகுவான். அதனால் வேலை இடத்தில் அவனை எல்லோருக்கும் பிடிக்கும்.

எங்கள் வயதுக்கு வேலை முடிந்து வீட்டுக்குப் போய் ஷோபாவில் ஆசுவாசமாகச் சாயந்திருந்தாலே சொர்க்கம் மிக நெருக்கத்தில் இருப்பது போல் இருக்கும். அதுவும் வார இறுதியில் அந்த இரண்டு நாட்களும் சொர்க்கமே கைக்குள் அடங்கி இருக்கும். அந்த இரண்டில் ஒரு நாளில்தான் றொனி என்னை ரெஸ்ரோரண்டுக்குச் சாப்பிட அழைக்கிறான்.

என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன், நான் என்ன நினைக்கிறேன் என்பதைப் புரிந்து கொண்டான். “சனிக்கிழமை பகல் முழுதும் ஓய்வெடுத்துக் கொள். இரவுதானே ரெஸ்ரோரண்டுக்குப் போறம். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை முழுவதும் ரெஸ்ற். இங்கே ஒரு பிரச்சினையும் இல்லையே”

அடுத்து நான் என்ன சொல்லப் போகிறேன் என்பது அவனுக்குத்தேவையில்லாதது. போய்விட்டான்.

பேச்சோடு பேச்சாக “கிறீஸ் ரெஸ்ரோரண்டுக்குத்தான் சாப்பிடப் போறம். சைனா சாப்பாடும் அங்கே கிடைக்கும். அனேகமாக சாப்பாட்டுக்கு ஒருத்தரும் காசு

குடுக்க வேண்டி வராது'' என்று றொனி எல்லோருக்கும் ஆசையையும் ஏற்படுத்தி விட்டதால், வேலை இடத்தில் சனிக்கிழமை ரெஸ்ரோரண்டுக்கு சாப்பிடப் போக அனைவரும் உடன் பட்டுக் கொண்டோம். ஆனால் எதற்காக இந்தச் சாப்பாட்டுக்கான ஏற்பாடு என்பதை மட்டும் றொனி யாருக்கும் சொல்ல மறுத்து விட்டான்.

றொனி கிறீஸ் நாட்டைச் சேர்ந்தவன். இன்னமும் திருமணம் ஆகவில்லை. பெற்றோரை விட்டு விலகி வந்து தனது காதலியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான். துடியாட்டமானவன். ஏதாவது புதுமையாகச் செய்ய வேண்டுமென்று நினைப்பவன். இந்தவருடக் கோடைக்கு நான்கு கிழமைகள் காதலியோடு தனது நாட்டுக்குப் போவதற்குத்திட்டமிட்டிருந்தான். அலுவலகத்தில் வேலை அதிகமானதால் அதிக பட்சம் இரண்டு கிழமைகள்தான் இம்முறை விடுமுறை தர முடியும் என்று அறிவித்து விட்டார்கள். றொனியைக் காத்துக் கொண்டிருக்க அவனது காதலி தயாராக இல்லை. ஏற்கெனவே தனது விடுமுறைக்கு, திட்டமிட்டபடி சென்ற கிழமையே அவள் கிறீஸிற்கு பறந்துவிட்டாள். றொனி தனித்து விட்டான்.

தனது விடுமுறைக்கு இன்னும் இரண்டு கிழமைகள் காத்திருக்க வேண்டிய நிலையில்தான் வருகின்ற சனிக்கிழமை ரெஸ்ரோரண்டுக்கு சாப்பிடப் போவதற்கான ஏற்பாட்டை றொனி அறிவித்திருக்கிறான்.

சனிக்கிழமை மாலை ரெஸ்ரோரண்டில் சந்தித்துக் கொண்டோம். எங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்த மேசையில் பிளாஸ்ரிக்கால் செய்த ஒரு பெரிய கூடை இருந்தது.

எதுக்கு அந்தக் கூடை என்று ஆராய எங்களுக்கு அவகாசமே தராமல் றொனியே காரணமும்சொன்னான்.

''முதலிலை நாங்கள் எல்லோரும் எங்களின்ரை ரெலிபோன்களை இந்தக் கூடைக்குள்ளை போட்டு வைப்பம்''

*சொல்லிவிட்டு எல்லோரையும் பார்த்தான். ஏன் என்ற கேள்வி எங்கள் முகங்களில் தெரியத் தொடங் கியது. அதை அவன் எதிர்பார்த்து இருக்க வேண்டும். அவனே தொடர்ந்தான்.*

*"பயப்படாதையுங்கோ. சாப்பிட்டு முடிஞ்சு போகக்கை அவரவர்கள் தங்களுடைய ரெலிபோன்களை எடுத்துக் கொண்டு போகலாம்"*

*'சாப்பிடுற போது இடைஞ்சல் இருக்கக் கூடாது என்று நினைக்கிறியா?" எனக்கருகில் இருந்த பவுலோ, றொனியைக் கேட்டான்.*

*"அதுதான். அந்த இடைஞ்சல் இருக்கக் கூடாது என்றதுக்குத்தான் இந்தத் திட்டம்" றொனியிடம் இருந்து உடனேயே பதில் வந்தது.*

*"கூடைக்குள்ளை இருக்கிறதாலே ரெலிபோன் மணி அடிக்காமல் விடுமா என்ன?" இது எனது கேள்வி யாக இருந்தது.*

*"அடிக்கும். அப்பிடி அடிச்சால் பிரச்சினையாப் போயிடும்" றொனி சொல்லி முடிக்கு முன்னரே பல குரல்களில் "ஏன்?" என்ற வார்த்தை அங்கே ஒலித்தது.*

*"ஏனென்றால்... யாருடைய ரெலிபோன் முத லிலை அடிக்குதோ அவர்தான் இண்டைக்கான முழுச் செலவையும் ஏற்கோணும்"*

*கோடையானாலும் வெளியே இடி மின்னலோடு மழை பெய்து கொண்டிருந்தது. அதில் ஒரு இடி யன்ன லூடாக வந்து என்னருகில் விழுந்தது போல் இருந்தது. இவ்வளவு பேரும் குடித்து, சாப்பிட்டு மீண்டும் குடித்து இதுக்கு மேல் இயலாது எனும் நிலை வந்து, இனிப் போதும் என்று எழுந்திருக்கும் போது பல நூறு யூரோக் கள் ஆகிவிடுமே. இரவு நல்ல சாப்பாடு கிடைக்கும் என்பதால் மதியம் ஒரு துண்டு பாணோடு நிறுத்தி*

வயிற்றில் தனியாக இட ஒதுக்கீடும் செய்து வைத்திருந் தேனே. இப்போது நிம்மதியாகச் சாப்பிட முடியுமா?

"எனக்கு காய்ச்சல் குணமா இருக்கு" என்று சொல்லி விட்டு எழுந்து போய்விடலாமா என்று கூட ஒரு எண்ணம் வந்தது. "ஒரு பனடோலை போட்டுட்டு ஓரமாக இரு. ஒருவேளை உன்னுடைய ரெலிபோன் முதலிலை அடிச்சால் காசை கட்டிட்டு வீட்டுக்குப் போ" என்ற பதில் கண்டிப்பாக றொனியிடம் இருந்து வரும் என்பது எனக்குத் தெரியும்.

எனது எண்ண ஓட்டத்தைக் காட்டிக் கொள்ளா மல் முகத்தில் புன்னகையை ஒட்டிக் கொண்டு மற்றவர் களைப் பார்த்தேன். ஈரல் பறி போய்விடுமோ என்று பயத்துடன் முதலையின் முதுகில் குந்தியிருந்த குரங்கின் நிலையிலேயே அவர்களும் இருந்தார்கள். வந்து விட் டோம். வருவதை எதிர் கொள்ளத்தானே வேண்டும்.

சாப்பாடுகள் மேசையில் இருந்தன. சாப்பாடுக ளின் நடுவே கூடைக்குள் "மணி அடித்து விடுவேன்" என்று பயமுறுத்திக் கொண்டு எனது கைத்தொலைபேசி ஒய்யாரமாகப் படுத்திருந்தது.

பொதுவாக நான் எங்கே யாவது வெளியே போனால், "எங்கே இருக்கிறாய்? எப்போ வந்து சேருவாய்?" என்று அடிக்கடி தொலை பேசி எடுத்துத் தொல்லை கொடுக்கும் ஆள் இல்லை எனது மனைவி. வீட்டை விட்டு வெளியே போனவ னுக்கு வீட்டுக்குத் திரும்ப வருவதற்கான வழி தெரியும் தானே என்பது அவளது எண்ணம். ஒருவேளை 'கொஞ்ச நேரத்துக்கு கிழடின் தொல்லை விட்டது எதுக்கு ரெலிபோன் அடிச்சு அதை ஏணி வைச்சுக் கூப்பிட வேணும்' என்ற எண்ணமாகவும் இருக்கலாம். எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆனாலும் சிறிதான ஒரு பயம் ரெலி போனைப் பார்க்கும் போதெல்லாம் வந்து கொண் டிருந்தது. கூடுமானளவு ரெலிபோனைப் பார்ப்பதைத் தவிர்த்து உணவில் கவனம் வைக்க ஆரம்பித்தேன்.

நேரம் நள்ளிரவையும் கடந்து விட்டிருந்தது. கைத்தொலைபேசிகள் எல்லாம் கூடைக்குள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தன.

“நேரமெல்லே போய்க் கொண்டிருக்குது. எப்ப நாங்கள் வீட்டை போறது? பேசாமல் செலவுகளைப் பங்கு போட்டு ஆளாளுக்குப் பிரிச்சுக் கட்டிடுவம்” ரெக்காடோ சொன்னதில் எல்லோருக்கும் உடன்பாடு இருந்தது. முழுசா நனைவதிலும் பார்க்க சொற்பமாக நனைத்தால் துவட்டிக் கொள்வது சுலபம்தானே?

றொனி எதுவுமே சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே பியர் குடித்துக்கொண்டிருந்தான்.

பொறுமைகளை நாங்கள் முற்றாக இழந்து விடுவதற்கு முன்னர் ஒருவாறு தூக்கம் கலைந்து ஒரு கைத்தொலைபேசி சிணுங்கியது. எனக்குப் பரிட்சயமான மணியோசை. அது என்னுடைய தொலைபேசியின் அழைப்புமணி. விசயம் தெரியாமல் நள்ளிரவிலே என் வீட்டிலே வில்லங்கம் விழித்துக் கொண்டு விட்டதே என்று நினைத்துக் கொண்டேன்.

தொலைபேசியை எடுப்பதற்காகக் கூடைக்குள் கை வைக்கப்போன என் கையைத் தட்டிவிட்டு றொனி தன்னுடைய தொலைபேசியை எடுத்துக் கொண்டான். இதுவரை மணி ஒலித்து, அழுது கொண்டிருந்தது அவனது தொலைபேசிதான் என அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. என்னுடைய அழைப்புமணியைப் போலவே அவனது அழைப்பு மணியும் இருந்ததால் நான் தடுமாறிப் போயிருந்தேன்.

நிறைய பியர்களை உள்ளே தள்ளியும் மாறாமல் இருந்த றொனியின் முகம் இப்பொழுது மகிழ்ச்சியை மறந்து இறுக்கமானதாக மாறியிருந்தது. பிள்ளையா ரைப் பிடிக்கப் போய் குரங்கைப் பிடித்த நிலையிலேயே அவன் தொலைபேசியைப் பிடித்திருந்தான். றொனியின் காதலி கீறிஸ் நாட்டில், கடற்கரையை ஒட்டிய ஏதோ

*ஒரு ரெஸ்ரோறண்டில் இருந்து கதைக்கிறாள் என்று தெரிந்தது.*

*அவள் கதைப்பது சத்தமாக இருந்தது. ''இங்கே எல்லாம் சந்தோசமாகப் போகுது. அங்கை எப்பிடி? எந்தக் கிழடு காசு கட்டினது?'' அவளது கேள்வி எல்லோருடைய காதுகளிலும் கேட்டது. ஆனாலும் அவள் கதைப்பதைக் கேட்டதாக யாருமே காட்டிக் கொள்ளவில்லை.*

*எது எப்படியோ சனிக்கிழமை சாப்பாட்டுக்கு அழைக்கும் போது, „அனேகமாக சாப்பாட்டுக்கு ஒருத்தரும் காசு குடுக்க வேண்டி வராது" என்று றொனி சொன்னது மட்டும் உண்மையாகிப் போனது.*

*ரெஸ்ரோரண்டை விட்டு வெளியே வரும் போது, „…அறுபதை இருபது வெல்லுமா உலகிலே" என்று கௌரவம் படத்தில் சிவாஜி மாதிரி சத்தமாகப் பாட வேண்டும் போல ஒரு எண்ணம் எனக்குள் வந்து போனது.*

***23.08.2017***

# மரணத்தைத் தேடி

*மனநிலை பாதிக்கப் பட்ட தனது 18 வயது மகனை கருணைக் கொலை செய்யக் கோரி தாயே தமிழ்நாட்டுக் காவல் நிலையத்தில் மனு அளித்த செய்தி ஒன்றை வாசித்தேன். அதிர்ச்சியாக இருந்தது. அதே வேளை மனதில் ஒரு சுமையும் சேர்ந்து கொண்டது. மக்களின் மேல் அதிக அக்கறை இல்லாத அரசாங்கங் களின் செயற்பாடுகளின் விளைவுகளே இவை. மன நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்புகள், பரா மரிப்புகள், அவர்களுக்கான தேவைகள் என செய்ய வேண்டிய அனைத்துப் பொறுப்புகளும் சமூக சேவை நிறுவனங்களுக்கு மேலாக அரசாங்கங்களுக்கே இருக் கின்றது. ஆனால் இங்கே மக்கள் புறந்தள்ளப் பட்டு அரசியல்வாதிகள் தங்களை முன்னிறுத்தியே செல்கின் றனர். பக்கத்து நாட்டில் தமிழர்கள் அவலமாகச் செத்துக் கொண்டிருக்கும் பொழுது, கடற்கரையில் காலையில் காலாற நடந்து செல்கையில் சட்டென்று அந்தத் தமிழர்கள் நினைவுக்கு வர, நாற்காலியை வரவழைத்து உடனேயே உண்ணாவிரதம் இருந்து ஊடகங்களுக்குச் சொல்லி அனுப்பிய தலைவர்கள் இருக்கும் நாட்டில் மனநிலை பாதிக்கப் பட்டவர்களை கவனிக்க எங்கே நேரம் இருக்கப் போகிறது?*

*இங்கே கீழே நான் சொல்லவருவதற்கும் மேலே உள்ள தாயின் நிலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. கருணைக் கொலை என்ற ஒற்றை வார்த்தை ஒன்றே பொருந்தியிருக்கிறது. அந்தத்தாயின் செய்தியை வாசித்த பொழுது சமீபத்தில் நான் வாசித்த ஒரு செய்தியே நினைவில் வந்தது. ஏனோ இந்தச் செய்தியும் என்னுள் சில காலமாக நிலை கொண்டிருக்கிறது. கொஞ்சம் இறக்கி வைத்து விடலாம் என்று பார்க்கிறேன்.*

*“ஆயிரம் கிலோ மீற்றர் தாண்டி மரணத்தைக் காண வந்திருக்கிறேன். 28ந் திகதி ஒக்ரோபர், திங்கட் கிழமை காலை 11 மணிக்கு இறந்து விடுவேன்” அமைதி*

யாகச் சொன்னார் கேர்னோ. அவரது வார்த்தைகள் தெளிவில்லாமல் இருந்தாலும், அவரது மரணத்தில் அவர் தெளிவாகவே இருந்தார்.

69வயதான கேர்னோவை லிம்ப்கோம்(Lymphome) என்ற நோய் தாக்கியிருந்தது. அவரது முதுகெலும்புகள் வலு விழுந்து சிதைந்து விட்டிருந்தன. விழுந்து விடாது இருக்க அவரது முதுகெலும்புகள் ஆணிகள் கொண்டு பொருத்தப் பட்டிருந்தன. இனிவாழ முடியாது, உடல் வலிகளைத் தாங்கிக் கொள்ள முடியாது என்ற நிலை வந்த பொழுது தனது மரணத்தை வரவேற்க கேர்னோ ஆயத்தமானார்.

தன்னை அழித்துக் கொள்ள, கேர்னோ தனது நண்பரான அன்ரியாஸிடம் ஒரு துப்பாக்கி கேட்டிருந் தார். அவர் தர மறுத்து விட்டார். வைத்தியசாலையில் படுக்கையில் இருந்து எழுந்திருக்க முடியாத நிலையில், தனது மரணத்திற்கான வழி என்ன என்று தெரியாமல் தவித்தவருக்கு இப்பொழுது விடை தெரிந்து விட்டது. அது கருணைக் கொலை. யேர்மனியில் அது சாத்தியம் இல்லை. சட்டம் அதை முற்றாக மறுக்கிறது. ஆனால் அயல் நாடானா சுவிற்சலாந்தில் அது சாத்தியமாகிறது. அதனால்தான் கேர்னோ சுவிற்சலாந்து வந்திருக்கிறார். இவரது வைத்தியச் செலவுக்கு எவ்வளவு வேண்டுமானா லும் தருகிறோம். இவரது மரணத்திற்கான செலவைத் தரமாட்டோம் என்று மருத்துவக் காப்புறுதி மறுத்துவிட சொந்தச் செலவில் சாவதற்காக தனது நண்பன் அன்ரியாஸின் உதவியுடன் ஆயிரம் கிலோமீற்றர் தூரம் காரில் பயணித்து வந்திருக்கிறார்.

புத்தகங்களோ, படங்களோ, மலர்க் கொத்து களோ எதுவுமே இல்லாமல் இவரது அறை வெறிச் சோடிக் கிடக்கிறது. அவை எதுவுமே இவருக்குத் தேவைப் படவில்லை. ஒரே ஒரு பெட்டி மட்டும் இவரது படுக்கையின் பக்கத்தில் இருந்தது. அந்தப் பெட்டி ஒன்றுதான் அவரது சொத்து. அந்தப் பெட்டிக்குள் பதி னெட்டுப் புகைப்பட அல்பங்கள் இருந்தன. அவை

எல்லாம், வலிமை இருந்த பொழுது இவர் செய்த சாதனைகளின் சாட்சிகள்.

காலகளால் மிதித்துச் செலுத்தும் படகில் ரூமேனி யாவைச் சுற்றி வந்திருக்கிறார். சிறிய கார் ஒன்றை மட்டும் பயன் படுத்தி ஆப்கானிஸ்தான் எல்லைவரை பயணித்திருக்கிறார். ஒற்றைத் திமில் கொண்ட ஒட்டகத் தில் சகாராவைக் கடந்திருக்கிறார். இன்னும் எத்த னையோ விடயங்களைச் செய்ய நினைத்தவரை லிம்ப் கோம் எனும் முதகெலும்பைத் தாக்கும் புற்றுநோய் இடை நிறுத்தி விட்டது. அதிக காலங்கள் இல்லை மிஞ்சிப் போனால் பத்து வருடங்கள்தான் என வைத்தியர்கள் 1994இல் சொன்ன பொழுது, கேர்னோ பயந்து விடவில்லை. அந்தப் பத்து வருடங்களைப் பயனுள்ளதாக்க வேண்டும், அத்தோடு தனக்கு வந்திருக் கும் நோய்க்கு எதிராகப் போராட வேண்டும் என நினைத்துக் கொண்டார்.

முதலில் உலகநாடுகளைச் சுற்றிப் பார்க்க வேண்டும். இந்தியாவில் இமயம் ஏற வெண்டும் என்ற முடிவோடு பயணங்களை ஆரம்பித்தார். இந்தியா, இலங்கை, தாய்லாந்து, கனடா எனப் பல்வேறு நாடு களுக்குப் பறந்தார். கனடாவில் யூகோன் நதியில் படகு வலித்துப் பயணிக்கையில் துடுப்பு உடைந்து விட, தனது பயணங்களையும் முடித்துக் கொண்டார்.

28ந் திகதி ஆயிற்று. காலை பதினொரு மணி. மரணத்துக்கான தனது விருப்பத்தைத் தெரிவிக்கும் பத்திரத்திலும் ஏற்கெனவே கேர்னோ கையெழுத்துப் போட்டுவிட்டார். இனி மருந்து தருவார்கள். குடித்து விட்டு நிரந்தரமாக உறங்கி விடலாம். வாழ்ந்த வாழ்க் கையை மட்டுமல்ல தனது சாவையும் நிச்சயிக்கும் உரிமை தனது கையில் இருக்கின்றதென்ற உறுதி அவ ரின் முகத்தில் இருந்தது.

மரணத்திற்கான மருந்தை மருத்துவர் அவரிடம் நீட்டினார். அதை வாங்கிப் பற்றிக் கொள்ளும் பலத்தை

*அவரது கைகள் இழந்து விட்டிருந்தன. உறிஞ்சிக் குடிப்பதற்கு ஸ்ரோவை மருந்துள்ள கலவையில் வைத்துக் கொடுத்தார்கள். ஆர்வமாக அதை உள்ளிழுக்க முற்பட்ட பொழுதுதான் தெரிந்தது கேர்னோ உறிஞ்சும் சக்தியையும் இழந்து விட்டிருந்தார் என்பது.*

*„தனக்குப் பருக்கி விடு' என்ற பாணியில் கேர்னோ தனது நண்பர் அன்ரியாஸைப் பார்த்தார். அது சாத்தியம் இல்லை என்று அன்ரியாஸ் தலையாட்டி னார். அங்குதான் சட்டம் கேர்னோவுக்கு இடையூறாக நின்றது. அவரது மரணத்திற்கான மருந்தை அவராகவே அருந்த வேண்டும். யாராவது ஊட்டி விட்டாலோ, உதவி செய்தாலோ அது கொலைக் குற்றம் ஆகி விடும். கைக்கு எட்டியது வாய்க்கு வந்தது. வாய்க்கு வந்தது வயிற்றுக்குள் இறங்க முடியாமல் போனது. உடல் தளர்ந்தது போல் கேர்னோ உள்ளம் தளர்ந்து போனார். இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என வைத்தியர் அறிவித்து விட்டார்.*

*மீண்டும் மரணம் எப்பொழுது என்று தெரியாத தவிப்பு, உடலில் தாங்க முடியாத வலி, உணவோ, தண்ணீரோ அருந்த முடியாத நிலை. கேர்னோ ஏக்கத் துடன் படுத்திருந்தார். அவரது உடல் வலியை அவர் உணராமல் இருக்க மருத்துவர் ஊசி மருந்து செலுத்தி யிருந்தார். „நீண்ட நாட்களுக்கு அவரது உடல் தாங் கிக் கொள்ளாது. சில தினங்கள்தான். அவரது வலியில் இருந்து அவர் விடுதலை அடைந்து விடுவார்' என அன்ரியாஸிடம் வைத்தியர் சொன்னார். வைத்தியர் சொன்னதைக் கேட்கும் சக்தியையும் கேர்னோ தற் பொழுது இழந்திருந்தார்.*

*நவம்பர் இரண்டாம் திகதி. வலிகள் தெரியாமல் கேர்னோ படுத்திருந்தார். அவரது உடல் வெள்ளைத் துணியால் மூடி இருந்தது. கேர்னோவிற்கான இறுதி வேலைகளை அன்ரியாஸ் செய்து கொண்டிருந்தார்*

***10.10.2014***

# முடிவு என்பது அடக்கம்

அன்று புதன் கிழமை, வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பொழுது பக்கத்து வீட்டில் இருந்து வந்த துர்நாற்றம், என்னை எங்கேயாவது ஓடிப் போய்விடு என்று விரட்டியது. இரண்டு போலிஸ் வாகனங்களும் ஒரு அம்புலன்ஸ் வாகனமும் வாசலில் நின்றிருந்தன. என்ன நடந்திருக்கும் என்று நிதானிப்பதற்குள் மைக்கல் என்னை நெருங்கி வந்தான். மைக்கல் ஒரு பொலிஸ் காரன். எனக்குத்தெரிந்தவன். அவன் என்னை நெருங்கி வரும்போதே தனது நெஞ்சில் சிலுவை வரைந்து காட்டி னான். பக்கத்துவீட்டு ஸ்ராபில் செத்துப் போய்விட்டார் என்று புரிந்தது.

„அவர் செத்து நாளாயிற்றுது. துர்நாற்றம் வருறதாக தகவல் கிடைச்சதாலே வந்தோம். மாடன்புழு *(maggots)* வந்திட்டுது. அதுதான் இந்த நாற்றம்'' மைக்கல் சொல்லும் போதே ஸ்ராபில் வீட்டு யன்னலைப் பார்த் தேன். இலையான்கள் தங்கள் பரம்பரைகளோடு வந்து கூட்டமாக மொய்த்துக் கொண்டிருந்தன.

வாழ்நாளில் தனிமையை விரும்பி வாழ்ந்த ஒருவன் வீட்டில் இன்று கூட்டமாக மாடன் புழுக்களும், இலையான்களும் குடியேறி விட்டன.

எனது மூக்கைப் பிடித்து, தாங்க முடியாத துர் நாற்றத்தை மைக்கலுக்கு சாடையால் காட்டிய பொழுது, ''கன நேரமாக இங்கே நிற்கிறன். இசைவாக்கம் பற்றி கேள்விப் பட்டிருக்கிறாய்தானே?'' என்று அவன் பரிதாப மாகச் சொன்னான்.

''உங்கள் சம்பிராதயம் எல்லாம் முடிய நேரம் எடுக்கும் போலே?''

„எல்லாம் முடிஞ்சு வாகனம் வந்து உடலை

*எடுத்துக்கொண்டு போக எப்பிடியும் இரவு பன்னிரண்டு மணியாயிடும். அதுக்குப் பிறகுதான் வீட்டுக்கு சீல் வைச்சிட்டு நாங்கள் போகலாம்''*

*மைக்கல் ,நாங்கள்' என்று சொல்லும் போது தான் பொலிஸ் வாகனத்தைப் பார்த்தேன். வாகனத்துக் குள்,'' இனியும் இந்த வேலையைத் தொடரவேண்டுமா?'' என்ற பாணியில் தலையில் கை வைத்துக் கொண்டு இன்னும் ஒரு பொலிஸ்காரன் உட்கார்ந்திருந்தான்.*

*,,வீட்டுக்கு எதுக்கு சீல் வைக்க வேணும்?''*

*,,பிரேதபரிசோதனை இருக்கெல்லோ. சாவுக்கான காரணம் தெரிஞ்ச பிறகுதான் அவருக்கு வேண்டப் பட்டவர்கள் உள்ளே போகலாம். பிரேத பரிசோதனை முடிய எப்பிடியும் ஒரு கிழமையாவது பிடிக்கும்''*

*மைக்கலிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டேன்.*

*அன்று குளிக்கும் போது, ,,புறந்தோல் போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச்செய்ய..'' என்று பாடசாலைமண்டபத்தில் நின்று அன்று வெள்ளிக் கிழமைகள்தோறும் பாடிய சிவபுராணம்தான் நினைவுக்கு வந்தது.*

*ஸ்ராபில் ஒரு ஓய்வு பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர். எழுபத்தியெட்டு வயது. அவருடைய அறிவுக்கும், ஆற்றலுக்குமாக அரசாங்கத்திடம் இருந்து பல விருதுகள் கிடைத்திருக்கிறது. சில புத்தகங்கள் கூட எழுதி வெளியிட்டிருந்தார். நான் அறிந்த காலத்தில் இருந்து வாசிப்புதான் அவருடைய முழு வேலையாக இருந்தது. வாசித்த புத்தகங்களை எறியவும் மாட்டார். யாருக்கும் கொடுக்கவும் மாட்டார். தன் வீட்டுக்குள் ளேயே அரண் போல அடுக்கி வைத்திருப்பார். தன்னிடம் இருக்கும் புத்தகங்களை வைப்பதற்கு தன் வீட்டில் இடம்*

*போதாமல் இருப்பதாக என்னிடம் ஒரு தடவை ஆதங் கப்பட்டிருக்கிறார். „வாசித்த புத்தகங்களை வாசிக சாலைக்கு கொடுத்து விடுங்களேன். இடம் மிச்சமாகும்‟ என்று நான் சொன்ன போது அதெல்லாம் பாவமான செயல் என்பது மாதிரி மறுத்து, தலையாட்டி விட்டுப் போனார். இத்தனைக்கும் நான்கு அறைகள் கொண்ட விசாலமான வீடு அவருடயது.*

*அடுத்த புதன்கிழமை வேலையிலிருந்து வீட்டுக்கு வந்த பொழுது ஸ்ராபிலின் வீட்டு வாசலில் ஒரு ஆணும் பெண்ணும் நின்றிருந்தார்கள். பல வருடங்களாக நான் அங்கேதான் குடியிருக்கிறேன். அவர்களை இதற்கு முன்னர் நான் அறிந்திருக்கவில்லை. பொலிஸ் சீல் அகற்றப்பட்டு ஸ்ராபிலின் வீட்டுக் கதவு திறந்திருந்தது. ஸ்ராபிலின் சகோதரியின் மகள் என்று அந்தப் பெண் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். அருகில் நின்றவன் அவளது கணவன். நிறைய சிகரெட் புகைப் பவன் என்பதை அவனிடம் இருந்து வந்த நெடி சொல்லிற்று. அடுத்த நாள் வந்து தேவையில்லாத பொருட்களை அகற்றப் போவதாகச் சொன்னார்கள்.*

*மறுநாள் மாலையில் பார்த்தேன். மூன்று கொண்டெயினர்கள் ஸ்ராபிலின் வீட்டின் முன்னால் இருந்தன. ஸ்ராபிலின் வீட்டின் யன்னலூடாக அந்த கொண்டெயினர்களுக்குள் புத்தகங்கள் விழுந்து கொண் டிருந்தன. புத்தகங்களில் என்ன விடயங்கள் அடங்கி இருக்கின்றன என்றெல்லாம் அவர்கள் அக்கறை காட்டி யதாகத் தெரியவில்லை. அதற்குள் பணம் ஏதாவது இருக்கிறதா என்ற பாணியில் அவர்களது தேடல் இருந்ததை அவதானிக்க முடிந்தது. என்னைக் கண்ட போது „மிச்ச மீதிப் புத்தகங்களுக்கு மேலும் இரண்டு கொண்டெயினர்களாவது தேவைப்படும்‟ என்றார்கள்.*

*„ஸ்ராபிலின் நல்லடக்கம் எப்போ?‟ என்று அவர்களிடம் கேட்டேன். „இப்போதைக்கு இல்லை. அம்மா விடுமுறைக்கு பிறேசில் போயிருக்கிறார். நாங்க ளும் அடுத்த கிழமை விடுமுறைக்கு தென் ஆபிரிக்கா*

*போகிறோம். விடுமுறை முடிந்த பிறகுதான் நல்லடக்கம். செப்ரெம்பர் நடுப்பகுதியில் நல்லடக்கத்துக்கு தேதி கேட்டிருக்கிறோம்.'' என்று ஸ்ராபிலின் மருமகளிடம் இருந்து பதில் வந்தது.*

*அந்த வீட்டுக்கு குடிவரும் எண்ணம் அவர்களுக்கு இல்லை என்பதும் அதை நல்ல விலைக்கு விற்பதே அவர்கள் நோக்கம் என்பதும் அவர்களின் பேச்சில் இருந்து அறிய முடிந்தது.*

*அவர்களிடம் இருந்து நான் விடைபெறும் போது ஸ்ராபிலின் சாவுக்கு அவர்களுக்கு கவலை தெரிவிப்பதா அல்லது அவர்களது விடுமுறைக்கு வாழ்த்துத் தெரிவிப் பதா என்று எனக்குள் ஒரு குழப்பம்.*

*வெறுமனே ''மீண்டும் சந்திப்போம்'' என்று சொல்லி விட்டு வந்து விட்டேன்.*

*பக்கத்து வீட்டுக்காரன், அத்துடன் அவருடன் ஏற்பட்ட பழக்கம் இரண்டுக்குமாக ஸ்ராபிலின் நல்லடக் கத்துக்காக நான் காத்திருக்கிறேன்.*

***16.07.2017***

# குமாரியான குழந்தை

ஒருவரை ஒருவர் வேலைத்தளத்தில் கிண்டல் அடிப்பது வழமைதான். ஆனாலும் மேற்கத்தைய நாடு களில் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் ஆசிய நாட்டவரைக் கிண்டலடிப்பது கொஞ்சம் கூடத்தான்.

யேர்மனியின் ஸ்ருட்கார்ட் விமான நிலையத்தில் மற்றைய விமான நிலையங்களில் உள்ளது போன்று நவீன தொழில்நுட்பத்தில் கழிப்பிட அறைகள் இருக்கின் றன. அந்தக் கழிப்பிட அறைகளின் வரிசையின் இறுதி யில் ஆசியநாட்டவருக்கென பிரத்தியேகமாக வடிவமைக் கப்பட்ட கழிப்பிட அறை ஒன்றும் இருக்கிறது.

“ஸ்ருட்கார்ட் எயார்போட்டுக்குப் போனால், நீ கடைசி ரொயிலற்றுக்குத்தானே போவாய்?” என்று வேலையிடத்தில் என்னைச் சீண்டிப் பார்ப்பது அவர்க ளுக்கு அன்று இனிமையாக இருந்தது.

‘குந்தி இருப்பதே மலம் கழிப்பதற்கான சிறந்த முறை’ என்ற ஆய்வுத் தகவலைத் தேடி எடுத்து வந்து அவர்களுக்குக் காட்டியதற்குப் பிறகு அவர்கள் ஸ்ருட் கார்ட் எயார்போட்டை மறந்தே போய் விட்டார்கள்.

சமீபத்தில் வந்த ஒரு பத்திரிகைச் செய்தியை சென்ற கிழமை எனது பார்வைக்குத் தந்து “குழந்தைப் பருவத்தில்தான் மனிதனின் எதிர்கால ஆரோக்கியம் நிச்சயிக்கப் படுகிறது. குழந்தையாக இருக்கும் போது, விரைவாகக் கற்கும் திறன் அதனிடம் இருக்கிறது. ஒரு குழந்தை வளர்வதற்கு பெற்றோரின் பங்கு மிக முக்கிய மானது. இதை எல்லாம் யோசிக்காமல் மதங்களின் பெயரால் ஏன்தான் குழந்தைகளின் வாழ்க்கையை வீணடிக்கிறார்களோ? இவர்களை எல்லாம் குழந்தைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்” என்று காதுக்குள் கத்தி விட்டுப் போனார்கள்.

*நாய்க்கு எங்கே அடித்தாலும் அது காலைத்தான் தூக்கும். இவர்களுக்கு என்னைக் கிண்டலடிக்க ஏதோ ஒன்று கிடைத்து விட்டது என்பது புரிந்தது. "பாரம் பரியம் என்று எல்லா மதத்தவர்களும் தேவையில்லாத சில விடயங்களைத் தலையில் தூக்கிக்கொண்டுதான் திரிகிறார்கள்" என்று சொல்ல எத்தனித்தேன். ஆனாலும் „முதலில் செய்தியை வாசி" என்று உள்ளுணர்வு சொல்ல பத்திரிகையைக் கையிலே எடுத்தேன்.*

*நேபாள நாடு ஏறக்கக்குறைய யேர்மன் நாட்டின் பாதி நிலப்பரப்பைக் கொண்டது. இங்கேதான் உலகின் மிகப் பெரிய மலையான இமயமலையின் பெரும்பகுதி இருக்கிறது.*

*நேபாளத்தில் காட்டமண்டு நகரத்தில் தலேயூ பவானி (Taleju Bhawani) என்ற ஆலயம் உள்ளது. இது 1564இல் மகேந்திர மாலா என்ற அரசனின் ஆட்சியில் அரச குடும்ப வழிபாட்டுக்காக கட்டப் பட்டிருக்கிறது. வருடத்திற்கு ஒருமுறைதான் வெளியார் தரிசனத்துக்காக இந்த ஆலயம் திறக்கும்.*

*இந்த ஆலயத்துக்கு அவதார கடவுளாக குமாரி தேவி என்ற சிறுமி ஒருவரைத் தெரிவு செய்து வழிபடும் பாரம்பரிய முறை ஒன்று அங்கே இருக்கிறது.*

*பற்கள், குரல், விழியின் நிறம், தொடைகளின் அழகு*... *என்று 32 அங்க இலட்சணங்களும் ஒருங்கே பெற்ற ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தில் பிறந்த சிறுமியே குமாரிதேவியாக தெரிவு செய்யப் படுவார். இந்தச் சிறுமியான குமாரிதேவி, குமரியாகும் நேரத்தில் அவதார தெய்வம் எனும் தகுதியை இழந்து விடுவார்.*

*கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டால், அல் லது காயங்கள் ஏற்பட்டு அதிக இரத்தம் வெளியேறும் நிலை வந்தால் மட்டுமே குமரியாகும் முன்னரே குமாரி தேவி கடவுள் என்ற நிலையில் இருந்து நீக்கப்படுவார். அதுவரை அவரை அவரது பெற்றோர்களே நெருங்க*

*முடியாது.*

*குமாரிதேவி வணங்குதலுக்குரிய கடவுளானாலும் அவருக்குக் கல்வி கற்பிக்க ஒரு ஆசிரியர் நியமிக்கப் படுவார். „நான்கும் மூன்றும் எவ்வளவு?" என்று ஆசிரியர் கேள்வி கேட்கும் போது குமாரி „பதினேழு" என்று பதில் சொன்னால் அதற்கு ஆசிரியர் சரியென்று தான் தலையாட்ட வேண்டும். விடை பிழையானது என்று சொன்னாலோ அல்லது இதுதான் சரியானது என்று திருத்திச் சொன்னாலோ அது தெய்வக் குற்றமாகி விடும். இப்படி ஆசிரியரே பணிந்து போகும் நிலை இருந்தாலும் பெற்றோர்களுடன் இணைந்து வாழ குமாரி தேவியால் அவர் பூப்படையும் காலம் வரை முடியாது.*

*அதேநேரம் வெளியாருடனான தொடர்புகளும் கிடையாது. குமாரிதேவியின் கால்கள் கூட நிலத்தில் படுவதற்கு அனுமதி இல்லை.*

*வருடத்தில் நடக்கும் பதின்மூன்று புனித நாட்க ளில் மட்டுமே குமாரிதேவியின் தரிசனம் மக்களுக்குக் கிடைக்கும். அதோடு செப்டெம்பரில் நடக்கும் ஒன்பது நாள் விழாவில் (நான் நினைக்கிறேன் ஒருவேளை அது நவராத்திரி விழாவாக இருக்கலாம் என்று) நகைகள் அணிந்து தேரில் பவனி வருவார்.*

*இந்த வருடம் செப்ரெம்பரில் ரிஸ்ணா சக்யா (Trishna Shakya) என்ற மூன்று வயதுக் குழந்தை குமாரி தேவியாகத் தெரிவு செய்யப் பட்டிருக்கிறாள்.*

*"தமது குழந்தையின் வாழ்வை வளப்படுத்துவது தானே பெற்றோரின் கடமையாக இருக்க வேண்டும்" என்று இந்தத் தடவை எனது வேலையிடத்தில் அவர்கள் என்னைக் கேட்ட பொழுது என்னால் அவர்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.*

***3.10.2017***

# இன்னுமொரு வழக்கு

*தொலைக்காட்சியைப் போட்டால், இப்பொழுது அதிகமாக வருவது துயரமான செய்திகள்தான்.*

*இரத்தங்களையோ காயப்பட்டவர்களையோ யேர்மனியத் தொலைக்காட்சியில் பெரிதாகக் காட்டாத காலம் அப்போது இருந்தது. ஆனால் நிலைமை இப் பொழுது மாறிவிட்டது. பரீஸில், யேர்மனியில், லண்ட னில், அமெரிக்காவில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள், காபூலில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல், சிரியாவில் இரசாயனக்குண்டு, இந்தனேசியா, எகிப்து, சோமாலியா பலஸ்தீனம் என்று... அவலமான செய்திகள்தான் அநேக மாக தொலைக் காட்சிகளில் ஆரம்பச் செய்திகளாகப் போய்க் கொண்டிருக்கின்றன.*

*கையில் சாப்பாட்டுத் தட்டை வைத்துக்கொண்டு தொலைக்காட்சியை ருசித்துப் பார்த்த காலம் போய் விட்டது என்றே நினைக்கிறேன். எது எப்படியானாலும், வேலையில் இருந்து வீடு வந்ததும், ஷோபாவும், ரீவி ரிமோற்றும்தான் முதன்மை பெறுகின்றன.*

*அன்றும் அப்படித்தான். தொலைக்காட்சியில் செய்தி பார்த்துக் கொண்டிருந்தேன்.*

*இங்கே நான் சொல்ல வருவது ஒன்றரை வருடங்களுக்கு முந்திய சம்பவம்.*

*Carolinக்கு வயது 27. திருமணமானவள். யேர்ம னியில் Endingen என்ற நகரில் வசித்துக் கொண் டிருந்தாள். ஒவ்வொரு நாளும் மாலையில் தவறாமல் jogging செய்பவள். வெயில், மழை, பனி, காற்று, இருள், பகல் எதுவுமே அவளது joggingக்கு இடைஞ்சலாக இருந்ததில்லை. ஒருநாள் அதற்கும் ஒரு முடிவு வந்தது.*

*06.11.2016 அன்று joggingக்குப் போன Carolin வீட்டுக்குத் திரும்பி வரவேயில்லை.*

*தொலைக்காட்சிகளில் அவளது படத்தைக்காட்டி, ‘‘இவளைக் காணவில்லை. யாராவது பார்த்திருக்கிறீர்களா? தகவல் தெரிந்தால் அறிவியுங்கள்’’ என்ற செய்தி ஒளிபரப்பானது.*

*நான்கு நாட்கள் கழித்து அவளது உடல் ஒரு காட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டது. வன்புணர்வு செய்யப்பட்டு அதன் பின்னர் தலையில் பலமாகத் தாக்கப்பட்டு அவள் கொல்லப் பட்டிருக்கிறாள்´ என பின்னர் அறிவித்திருந்தார்கள்.*

*யேர்மனிக்குள், பெருமளவிலான அகதிகளின் வருகைதான் இப்படியான குற்றங்கள் நடப்பதற்கான காரணம் என உடனடியாகவே பலமாகக் குரல்கள் எழ ஆரம்பித்தன.*

*அதிலும் அர்த்தம் இருக்கிறது. 2016 இல் 900,000 அகதிகள் யேர்மனிக்குள் வந்ததன் பின்னால் குற்றச் செயல்களும் பெருமளவு அதிகரித்துத்தான் இருக்கின்றன. அதிலும் பெண்கள் மீதான பாலியல் தொல்லைகள் கூடி இருக்கின்றன. கொலைகளும் கூட நடந்திருக்கின்றன. ஆகவே எங்காவது அசம்பாவிதங்கள் நடந்து விட்டால் அதை உடனடியாக அகதிகளுடன் இணைத்துப் பார்த்தார்கள். Carolin இன் கொலையிலும் அப்படியான ஒரு பார்வையே இருந்தது.*

*ஆனால் பலர் நினைத்தது போன்று இல்லாமல் கொலையாளி ஒரு ஐரோப்பியனாகவே இருந்தான்.*

*யேர்மனியில் நடந்த பல கொலைகள் பற்றிய முடிச்சுகள் இன்னமும் அவிழ்க்கப் படாத நிலையில் அதுவும் கைல்புறோன் நகரில் பகல் வேளையில் மக்கள் நடமாடும் பகுதியில் பெண் பொலிஸ் கொல்லப்பட, மற்றைய பொலிஸ் படுகாயம் அடைந்த சம்பவம் பத்து*

*வருடங்களாகியும் முடிவுக்கு வராத நிலையில் Carolin இனின் கொலையாளியை மிக விரைவாக பொலிஸ் கண்டுபிடித்தது ஆச்சரியமாக இருந்தது.*

*பொலிஸார் கொலையாளியை எப்படிக் கண்டு பிடித்தார்கள் என்பது பற்றிய அறிக்கை வெளியாகி இருந்தது.*

*Carolin கொலையைப் பற்றிய விபரங்களை பொலிஸார் ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது ஒஸ்ரிய நாட்டில் Kufstein நகரில் தை மாதம் 2014இல் நடந்த ஒரு பெண்ணின் கொலையைப் பற்றிய சில தகவல்கள் அவரகளுக்குக் கிடைத்திருக்கின்றன. கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெயர் Lucile. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவள். பிரான்ஸின் Lyon நகரத்தில் இருந்து படிப்பதற்காக ஒஸ்ரியாவுக்கு வந்திருந்தவள். ஒரு மாலையில் தனது நண்பியைப் பார்க்கப் போன வளை யாரோ கொலை செய்து விட்டார்கள்.*

*Lucileவின் கொலையும் Carolinது கொலையும் ஒரே முறையில் நடத்தப்பட்டிருந்தன என்பதை அதாவது இரு பெண்களும் வன்புணர்வு செய்யப்பட்டதன் பின்னர் தலையில் தாக்கப்பட்டே கொலை செய்யப் பட்டிருந் தார்கள் என்பதை பொலிஸார் கவனத்தில் எடுத்துக் கொண்டார்கள். அத்தோடு Carolin இன் கொலைக்குப் பாவிக்கப் பட்ட ஆயுதமான வாகனத் தூக்கியை (lifting rod) கொலை நடந்த இடத்தில் பொலிஸார் கண்டு பிடித்திருந்தனர்.*

*இரண்டு பெண்களின் கொலையும் நடந்த இடத்திற்கான இடைவெளி 400 கிலோ மீற்றர்கள். இரண்டு கொலைகளும் அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு அருகிலே அதுவும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்திருந் தன.*

*இதனால் நீண்ட தூரம் பயணிக்கும் ஒருவரே கொலையாளியாக இருக்க முடியும் என்பது பொலீ ஸாரின் கணிப்பாக இருந்தது. அதிலும் பார ஊர்திகள்*

*தரித்து நிற்கும் இடத்திற்கு அருகாமையில்தான் கொலைகள் நடந்திருக்கின்றன. அதனால் பொலீஸாரின் தேடுதல் வெளிநாடுகளில் இருந்து யேர்மனிக்குள் நுளையும் பார ஊர்திகளின் பக்கமாகப் போனது.*

*இதற்காக ஒஸ்ரியாவினூடாக யேர்மனிக்குள் வரும் சுமார் 8,000 பார ஊர்திகளைப் பற்றிய தகவல்களைப் பொலீஸார் சேகரித்தனர். அந்த 8000 பார ஊர்திகளின் பயணங்களுக்கான பதிவுகள் மட்டும் 45,000க்கு மேல் இருந்தன. 8000 பார ஊர்திகளில் ஒன்றில்தான் கொலையாளி பயணித்திருக்கிறான் என்ற எண்ணத்தில் 45,000 பதிவுகளுக்குள் தேடுதல் ஆரம்பமானது.*

*வாகனத்தூக்கி(lifting rod), எந்தப் பாரஊர்திக்குச் சொந்தமானது என்பதைத் தெரிந்தகொண்டால் தேடுதல் சுலபமாகி விடும் என்ற எண்ணம் வந்தவுடன் அதைப் பற்றி ஆராய இன்னொரு குழு தயாரானது.*

*அப்படி ஆராய்ந்ததில் 285 பார ஊர்திகள் அவ்வாறான lifting rod களைப் பாவிப்பது தெரிய வந்தது. அதிலும் ஈவ்கோ பார ஊர்திகள்தான் அதை அதிகமாகப் பயன் படுத்துகின்றன என்பதால், யேர்மனிக்குள் நுளையும் ஈவ்கோ பார ஊர்திகளுக்கு முன்னுரிமை கொடுத்து, பதிவேடுகளில் அவற்றை ஆராய்ந்தார்கள்.*

*அதிலிருந்து, பதின்மூன்று ஈவ்கோ பார ஊர்திகள் யேர்மனிக்குள் நுளைவதைக் கண்டு பிடிக்க முடிந்தது. போலந்தில் இருந்து ஆறு, ருமேனியாவில் இருந்து நான்கு, ஒஸ்ரியாவில் இருந்து இரண்டு மற்றும் செக் குடியரசில் இருந்து ஒன்று என்ற கணக்கு இப்பொழுது பொலீஸாரின் கைகளில் இருந்தது.*

*பதின்மூன்று பாரஊர்திகளிலும் ஓட்டுனர் உட்பட பயணித்தவர்கள் பற்றிய விபரங்களை அந்தந்த நிறுவனங்களில் இருந்து பொலிஸார் கேட்டு வாங்கிக் கொண்டார்கள். அதிலிருந்து ருமேனியாவில் இருந்து வரும் ஒரு பாரஊர்தியில் ஓட்டுனர் மட்டும் தனியாகவே*

*பயணித்திருப்பது தெரிய வந்தது.*

*அவரது கைத்தொலேபேசியின் இலக்கங்களை ஆராய்ந்ததில், Carolin கொலை செய்யப்பட்ட இடத்தில் அவர் தனது தொலைபேசியைப் பாவித்தது பதிவு செய் யப் பட்டிருப்பது தெரிய வந்தது.*

*கொலையாளியான ருமேனியாவைச் சேர்ந்த Catalin கைது செய்யப் பட்டார்.*

*Carolin கொலையுண்ட இடத்தில் பொலீஸார் சேகரித்த 430 தடயங்கள் மற்றும் டீஎன்ஏ பரிசோதனை எல்லாவற்றிலும் Catalin சித்தி அடைந்ததால் இவர்தான் கொலையாளி எனப் பொலிஸார் அவரை மன்றில் நிறுத்தினார்கள்.*

*"எனது கட்சிக்காரரான Catalin பாலியல் நோக்கத்திற்காக இந்தக் கொலையைச் செய்யவில்லை. அவரின் மன உளைச்சலின் விளைவே இது" என அவனின் சட்டத்தரணி மன்றில் எடுத்துச் சொன்னார்.*

*குற்றங்கள் நிரூபணம் ஆனதால் Catalinக்கு ஆயுள் தண்டனை தந்து நீதிபதியான Eva Kleine-Cosack தீர்ப்பு அளித்தார்.*

*மூன்று பிள்ளைகளின் தந்தையான நாற்பது வயது Catalinக்கு ஓஸ்ரியாவில் Lucileஐ கொலை செய்ததற்கான இன்னுமொரு வழக்கு காத்திருக்கிறது.*

***15.05.2018***

# அரோஹரா, ஆறுமுகா

*அந்தக் கூட்டத்துக்குள்ளை நேற்று உன்னைக் காணேல்லை'' திங்கட்கிழமை வேலை இடத்தில் மரியா என்னைக் கேட்ட போது, எந்தக் கூட்டத்தை அவள் சொல்கிறாள் என்பது எனக்கு முதலில் புரியவில்லை.*

*அவளே தொடர்ந்தாள். ''இத்தாலியில் வீதியில் வைச்சு ஆளாளுக்கு தக்காளி அடிச்சு ஒரு விளையாட்டு விழா (Tomatina Festival) நடக்குமே அது போலை உங்கடை நாட்டிலையும் தேங்காய் அடிச்சு விளையாடும் ஒரு விளையாட்டுவிழா இருக்குதோ? ''*

*''நீ என்ன சொல்ல வாறாய்?''*

*நேற்று, போக்குவரத்து வீதியை மறிச்சு தடை போட்டிருந்தார்கள். அதனாலை நான் அடுத்தவீதியாலை போகவேண்டி வந்திட்டுது. என்ரை காரைத் திருப்பிக் கொண்டு அடுத்த வீதிக்குப் போற பொழுதுதான் பார்த்தன், உன்ரை நாட்டுக்காரர்கள் நிறையப் பேர் வீதியிலை ஊர்வலம் போலை வந்து கொண்டிருந் தார்கள். பெண்கள் எல்லாம் கலர் கலராக உடுப்புகள் போட்டிருந்தார்கள். முதலிலை உன்ரை நாட்டு 'கார்ணி வேல்' என்றுதான் நினைச்சன். ஆண்களெல்லாம் ஒரு காணிக்குள்ளே தேங்காய்களை போட்டு உடைச்சுக் கொண்டே பெரிசா ஒன்றை தெருவிலே இழுத்து கொண்டு வந்தார்கள். தக்காளி விழாபோலை தேங்கா யாலை ஆளாளுக்கு அடிச்சுக் கொள்ளுவார்களோ என்று முதலிலை பயந்து போனன்'*

*மரியா சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தான் புரிந்தது, அவள் குறிப்பிடுவது எங்களது தேர்த் திருவிழா என்று.*

*''கூடு' என்று நீங்கள் மேரி மாதாவைக் ஊர்வல*

*மாகக் கொண்டு போவீங்களே, அதுபோலத்தான் நாங்களும் எங்கடை கடவுள்களை வீதியிலை ஊர்வலமாகக் கொண்டு போவம். எத்தனை காலத்துக்கு எங்கடை சாமிகள் கோயிலுக்குள்ளையே அடைபட்டுக் கிடக்கிறது. அவையளும் காத்து வாங்க வேண்டாமோ?" மெதுவாகச் சமாளித்துக் கொண்டேன்.*

*"தேங்காய் 1.70க்கு கடையிலை விற்கிறார்கள். அந்த விலைக்கு வாங்கி இப்பிடித் தெருவிலை போட்டு உடைக்கோணுமோ?"*

*"நீ சொல்லுற விலை சுப்பர் மாக்கெற்றில். எங்கடை நாட்டுக் கடைகளுக்குப் போய்ப் பார், ஒரு யூரோவுக்கு கிடைக்கும்"*

*"தெருவிலை போட்டு வீணாக உடைக்கிறதுக்கு ஒரு யூரோ என்றாலும் அதிகம்தான்"*

*நாட்பட்ட தேங்காய்களை தட்டி விடுவதற்கு கடைக்காரர்களுக்கு ஒரு வாய்ப்பாக தேர்த்திருவிழாவை, கடவுள் தேர்ந்தெடுத்து இருக்கலாம் என்று எனக்குள் ஒரு எண்ணம் வந்தது.*

*மரியா கேட்டதிலும் அர்த்தம் இருந்தது. இவ்வளவு விலை கொடுத்து எதற்காக தேங்காய்களை தெருவில் போட்டு உடைக்க வேண்டும்? மணலில் தேரினது மரச்சில்லுகள் உருளுவதில் இருக்கும் சிக்கலைத் தவிர்ப்பதற்காக எமது முன்னையவர்கள் எங்களது நாட்டில், தேரின் முன்னால் தேங்காய்களைப்போட்டு உடைத்தார்களோ தெரியவில்லை. சரியான காரணத்தைப் புரிந்து கொள்ளாமல் நாங்கள்தான் யேர்மனியிலும் தேங்காய்களை வீணே சிதறடித்துக் கொண்டிருக்கிறோமா?*

*கடவுளை மரத் தேரில் வைத்து இழுப்பதற்காக நாங்கள் Audi, Mercedes, BMW கார்களில் வந்து கோவிலின் வாசலில் இறங்கிக் கொண்டிருக்கிறோம். காலங்காலமாக பாவப்பட்ட ஜென்மமாக கடவுள் மட்*

*டும் மரத்தேரில் பவனிக்க வேண்டி இருக்கிறது என்பதை நினைக்கையில் நெஞ்சு வெம்புகிறது. அதுவும் மனிதன் இழுத்தால்தான் கடவுள் அமர்ந்திருக்கும் தேரே நகர வேண்டிய நிலையும் இருப்பது கடவுளின் கையாலாகாத் தனம்.*

*போர் முடிந்து ஒன்பது வருடங்களாகின்றன. புலம் பெயர்ந்தவர்கள் வழங்கும் நிதியை நேரடியாகப் பெற்று, அந்த நிதியைப் பயன்படுத்தி பாதிக்கப் பட்டவர்களது வாழ்வை மேம்படுத்தவோ,தொழில் வாய்ப் புகளை ஏற்படுத்தவோ, யாரிலும் தங்கியிராது சுயமாக வாழும் நிலையை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக் கவோ முடியாதவகையில் மாகாணசபையை சிறீலங்கா அரசு கட்டிப்போட்டு வைத்திருக்கிறது.*

*ஒரு பொது அமைப்பை தாயகத்தில் உருவாக்கி அதனூடாக உலகத்தமிழர்கள் ஒருங்கிணைந்து உதவி களைச் செய்ய விடாமலும் சிங்கள அரசு தடுக்கிறது. போரினால் பாதிக்கப் பட்டவர்கள் மேலும் மேலும் துன்பத்துக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் சிந்திக்க வேண்டிய நாங்கள் பக்திக்குள் பரவசம் காண நினைக்கிறோம்.*

*'கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் வயிற்றுக்குள் இருக்கும் கருவுக்கும் ஈசன் உணவளிப்பான்' என்று, தெரியாமல் படித்து விட்டோம். அதனால்தான் எல்லா வற்றையும் தூரப்போட்டுவிட்டு கடவுள்களுக்கு இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் கோயில்களை உருவாக்கி அர்ச்சனைகள் செய்து கொண்டிருக்கிறோம்.*

*இதற்குள், கோவில்களில் எரியும் விளக்குகளுக்கு தாங்களும் எண்ணெய் விடுகிறோம் என்று ஒரு ஊடகம் 'ஆன்மீகத் தொலைக்காட்சி' ஒன்றை 2018, மார்ச் 10ம் திகதி தொடங்கி பக்தியுடன் நிகழ்ச்சிகளை நடத் திக் கொண்டிருக்கிறது.*

*மக்களின் பிரச்சனைகளை பேச்சுக்கு மென்று துப்பிக்கொண்டு அந்த ஊடகம் மோடியின் ஆன்மீகத்*

*துக்குள் வந்து விட்டதோ என்ற அச்சம் ஏனோ தானா கவே வருகிறது.*

*இப்படியே போனால், ''படைத்தவன் இருக் கிறான். பார்த்துக் கொள்வான்'' என்று சொல்லிக் கொண்டு, தாயகம், சுதந்திரம் என்று சத்தமிட்ட குரல் களெல்லாம், 'அரோஹரா, ஆறுமுகா'' என்று ஒலிக்க ஆரம்பித்து விடும்.*

***06.03.2018***

# இலவசமாகக் கொஞ்சம் ஹைரஜன்சல்பைட் தரவா?

*கெமிரிக் எனது வேலையிடத்து நண்பன். ஒரு நாள் திடீரென எழுந்து நின்று தனது வலது கை மோதிரவிரலை நீட்டி ''இழு'' என்று கண்களால் சாடை காட்டினான். விரல்களில் வலி ஏற்பட்டால் விரலை இழுத்து நெட்டி முறிக்கும் பழக்கம் எனக்கு இருந்தது. ஒருவேளை கெமிரிக்குக்கு விரலில் வலி ஏதாவது ஏற்பட்டிருக்கலாம் என்ற எண்ணத்தில் அவனது விரலை பிடித்து இழுத்தேன். அவ்வளவுதான் அவன் பின் பக்கம் இருந்து ''புர்..புர்..'' என்ற சத்தம் வரத் தொடங்கியது. நான் திகைத்துப் போனேன். சொர்க்கம் பக்கத்தில் வந்தது போல் கண்ணை மூடி கெமிரிக் சுகம் கண்டு கொண்டிருந்தான்.*

*சத்தம் அடங்கிய பின் கண்களைத் திறந்து, ''வயித்திலை நீண்ட நேரமா ஒரு அழுத்தம் இருந்தது. இப்போ அது சரியா போச்சுது. நன்றி'' என்றான்.*

*இது கெமிரிக்கின் ஒரு விளையாட்டு என்பதை பின்னர் மற்றவர்களிடம் இருந்து அறிந்து கொண்டேன். திடீர் திடீரென எழுந்து நின்று ''யாராவது விரல்களை இழுத்து விடுங்கள்'' என்பான். நாங்கள் மறுத்து விட்டால் தானே தனது விரலை இழுத்து, பயம் காட்டுவான். அவனது இந்தச் செயல் பழகிப் போனதால் இப்பொழுது எங்களில் யாருமே அவனது மோதிர விரலை மறந்தும் தொட்டுப் பார்ப்பதில்லை.*

*ஆனாலும் ''புர் புர்... ''சத்தம் அவனிடம் இருந்து வந்து கொண்டுதான் இருந்தது.*

*இன்னும் ஒரு நாள் வேலை இடத்தில் மதியம்*

*சாப்பிட்டு விட்டு லிப்றில் நான்காம் மாடியில் இருந்து வந்து கொண்டிருந்தோம். மூன்றாம் மாடியில் ஒரு ஆணும் நான்கு பெண்களும் லிப்றுக்காகக் காத்து நின்றார்கள். "போதுமான இடம் இல்லை. கொஞ்சம் காத்திருங்கள். லிப்ற் திரும்ப வரும்" என்று கெமிரிக் அவர்களிடம் பணபாகச் சொன்னான்.*

*கெம்ரிக் சொன்னது அங்கே நின்று கொண்டி ருந்த ஆணுக்குப் பிடிக்கவில்லை. அந்த ஆண் லிப்றுக் குள்ளே எட்டிப் பார்த்து விட்டு, "16 பேர்கள் பயணிக் கலாம் என்று போட்டிருக்கு. உள்ளே ஒன்பது பேர் தானே நிற்கிறீர்கள்" என்று சொல்லிவிட்டு நான்கு பெண்களுடன் உள்ளே நுளைந்து விட்டான். லிப்ற் தாங்கும் எடையை வைத்தே எத்தனை பேர்கள் பயணிக் கலாம் என்று குறிப்பிட்டிருப்பாரகள். ஆனால் உண்மை யில் அத்தனை பேரும் ஒருங்கே நின்று பயணிப்பது என்பது சிரமமான சூழ்நிலையாகவே இருக்கும்.*

*கெமிரிக்குக்கு அந்த ஆண் அப்படி நடந்து கொண்டது பிடிக்கவில்லை. "பொம்பிளைகளுக்கு விலா சம் காட்டுறான் போலை. ஏதாவது இவனுக்குச் செய்ய வேணும் போலை இருக்கு. நேற்று ராத்திரி பூளுமன் கோவும் (cauliflower) உருளைக்கிழங்கும் பன்றிச் சிங்கனும் (ham) சேர்ந்த சாப்பாடுதான் சாப்பிட்டனான். இப்ப மத்தியானமும் நல்லா வெட்டினதாலை வயித்திலை பயங்கர அழுத்தமா இருக்கு. யாராவது என்ரை மோதிர விரலை தயவு செய்து இழுங்கோ" என்று எங்களுக்கு மட்டும் கேட்கும் வண்ணம் சொன்னான்.*

*எங்களுக்கு வந்த சிரிப்பை அடக்க முடிய வில்லை. சிலர் சாதாரணமாகச் சிரித்துக் கொண்டோம். நடக்கப் போவதை அதீதமாகக் கற்பனை செய்து கொண்டு சிலர் அடக்க முடியாமல் பலமாகச் சிரித்தார் கள். ஆனாலும் நல்ல வேளையாக லிப்றுக்குள் எது வும் நடக்கவில்லை. தன்னை ஏதோ கேலி செய்கிறார் கள் என்று அந்த ஆண் மட்டும் குழம்பிப் போயிருந்தான் என்பது அவனது முகத்தில் இருந்து தெரிந்தது.*

சமீபத்தில் நான் வசித்த சிறிய செய்தி ஒன்று எனக்கு கெமிரிக்கின் மோதிரவிரலை நினைவு படுத்தி யது. Medicinal Chemistry Communications என்ற ஆய்வுப் பத்திரிகையில் வெளியாகி இருக்கும் பிரித்தானியப் பல்கலைக்கழக பேராசிரியர் Matt Whiteman. ஆய்வு செய்து வெளியிட்ட அறிக்கையே அது.

விவாகரத்துக்கான காரணங்கள் பல சொல்லப் பட்டிருக்கின்றன. குறட்டை, குசுக்கள் விடுதல் கூட அந்தக் காரணங்களுக்குள் அடங்கி இருக்கிறன. கட்டுப் படுத்த முடியாமல் அதுவும் இரவில் படுக்கையறையில் உடலில் இருந்து வெளியேறும் வாயுவும் இல்லற வாழக்கையின் முறிவுகளுக்கு இங்கே ஒரு பிரதான காரணியாக இருக்கிறது.

உணவுப் பழக்க வழக்கங்கள், இயற்கையாகவே அமைந்துவிட்ட உடலமைப்புகள் என்று பல விசயங்கள் வாயு வெளியேற்றத்துக்கான காரணிகளாக இருக்கின்றன.

ஆனால் உடலில் இருந்து வெளியேற்றப்படும் வாயு மனதளவில் வெறுப்பை ஏற்படுத்தினாலும் அது வாழ்க்கைத் துணைவருக்கு சில நல்ல விளைவுகளையே தருகிறது என பேராசிரியர் Matt Whiteman அறிவித் திருக்கிறார். நீண்ட காலம் வாழ்வதற்கான காரணியாக அது இருக்கிறது என அவர் தனது ஆய்வில் மேலும் தகவல் தந்திருக்கிறார்.

உடலில் இருந்து வெளியேற்றப்படும் அந்த வாயுவில் அதிகளவு ஹைறஜன்சல்பைட் இருக்கிறது. அந்த வாயு, நோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்க உதவுகிறது. அத்தோடு சிறிய அளவிலான மின்அதிர்வை உடலின் செல்களில் அது ஏற்படுத்தி விடுகிறது. புற்று நோய், பக்கவாதம் மற்றும் இதயத் தாக்குதல்கள் போன்றவைகளிலும் இருந்து பாதுகாப்பதோடு முதுமை, அதனூடாகவரும் ஞாபகமறதி போன்றவற்றில் இருந்தும் தப்பிக்க உதவுகிறது என அவரது ஆய்வின் முடிவாகப்

*பதிவிட்டிருக்கிறார்.*

*ஆக பேராசிரியர் Matt Whiteman அறிவித்திருப் பதைப் பார்த்தால், இல்லற வாழ்க்கையில் கணவனும் மனைவியும் தங்களை அறியாமலே ஆளாளுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என விளங்கிக் கொள்ள முடிகிறது.*

*எல்லோரும்தான் குசு விடுகிறார்கள். ஆனால் அதைப்பற்றி வெளிப்படையாகக் கதைக்கத்தான் தயங்கு கிறார்கள். இது ஒரு இயற்கையான விடயம்தான். வெட்கம் மற்றும் சங்கடம் அதை மற்றையவரகள் முன் செய்ய, பேச அவர்களைத் தடுக்கிறது.*

*யேர்மனியில் எழுத்தாளர் Jan Rein வெளியிட்ட 304 பக்கங்கள் கொண்ட Das Pups-Tabu என்ற புத்தகம், குசு பற்றிய அவரது அனுபவங்களைப் பேசு கிறது, 9,99 யூரோ விலை கொண்ட அந்தப் புத்தகம் யேர்மனியில் நல்ல விற்பனையில் இருக்கிறது*

***24.11.2017***

# எங்கே அவன் தேடுதே சனம்

*அவரை எல்லோரும் நாட்டாமை என்றுதான் அழைப்பார்கள். மற்றவர்கள் அவரை நாட்டாமை என்று அழைப்பதில் அவருக்கு நிறைந்த மகிழ்ச்சி. கலியாண வீடா? சாமத்தியச் சடங்கா? பிறந்தநாள் விழாவா? இல்லை செத்தவீடா? எங்கள் நகரத்தில் தமிழர்க ளுடைய எந்த நிகழ்வானாலும் நாட்டாமையே பிரதம விருந்தினர்.*

*புலம் பெயர்ந்து யேர்மனிக்கு வந்த காலத்தில் வேலை செய்வதற்கான அனுமதி எங்களுக்குக் கிடை யாது. அப்படியான நிலையிலேயே நாட்டாமை, பூ விற்றுக் காசு சேர்த்தவர். பூ விற்பவர் என்பதால் அவரது பெயரோடு 'பூ' என்பது அடைமொழியாயிற்று. அதாவது 'பூ சபா' என்றாயிற்று. சேர்த்த பணம், அதனால் வந்த அங்கீகாரம் அதோடு இணைந்த ஆணவம் எல்லாம் சேர்ந்ததால் காலம் செல்லச் செல்ல அவர் நாட்டாமை ஆகிப் போனார்.*

*நாளடைவில் நாட்டாமை பணமுதலையாகவும் ஆகிப் போனார். அங்கும் இங்கும் அலையாமல், இருந்த இடத்தில் இருந்துகொண்டே சீட்டுப் பிடிக்க ஆரம்பித்து பிறகு வட்டிக்குப் பணம் கொடுத்து வருவாயைப்பெருக்கி தன் உடலையும் பெருப்பித்துக் கொண்டார்.*

*நாங்களும் சாதாரணமானவர்கள் கிடையாது. புத்தக வெளியீட்டு விழா என்றால் நாங்கள் முதலில் போய்ப் பார்ப்பது நாட்டாமையைத்தான். மேடையில் அவரது பெயரை அறிவித்து, முதல் பிரதியை அவரிடம் நீட்டினால் 500யூரோவை தட்டில் வைத்து விட்டு புத்தகத்தை எடுத்து, வஞ்சகமில்லாமல் போட்டோவுக்கும் சிரித்து, வாழ்த்திவிட்டும் போவார். ஆனால் 200பேருக்கு குறைவான பார்வையாளர்கள் வரும் மேடைகளுக்கு அவர் வர விரும்புவதில்லை.*

அந்த நாட்டாமையைத்தான் கொஞ்சக் காலமாக நகரத்தில் காணக் கிடைக்கவில்லை.

விசாரித்ததில் கிடைத்தது இதுதான்.

சமீபத்தில் நாட்டில் இருந்து புலம் பெயர்ந்து வந்த புதியவர்களுக்கு நாட்டாமைதான் எல்லாமே. தனக் குத் தெரிந்வர்கள் மூலம் அவர்களுக்கு வேலை எடுத்துக் கொடுப்பது "காசை வீணாக்காதீங்களடா" என்று அறி வுரை சொல்லி அவர்களை தன்னிடம் சீட்டுப் போட வைப்பது என்று அவரது பொதுநலம் ஏராளம். வந்த, வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்க அவர்களில் யாராவது சீட்டு எடுக்க முற்பட்டால், "உனக்கென்ன விசரே? இப்ப கனக்கக் கழிவு போகுது. கடைசித் துண்டு வரக்கை பாக்கலாம். இப்ப உனக்கு எவ்வளவு காசு வேணும் சொல்லு. நான் தாறன்" என்று பணத்தைக் கொடுத்து பிறகு அதற்கு வட்டியும் வாங்கிக்கொள்வார்.

ஒரு தடவை, புதிதாக வந்த ரவி என்ற நபரின் மனைவிக்கு அடிவயிற்றில் இடைவிடாத நோ வந்தது. அவர்களின் குடும்ப மருத்துவர், அவர்களை *gynecology* ஐ போய் பார்க்கும் படியும், யேர்மனிய மொழி தெரிந்த ஒருவரைக் கூட்டிக் கொண்டு போவது நல்லது எனவும் சொல்லியிருக்கிறார்.

தம்பதிகள் நேராக ஆபத்தாண்டவர் நாட்டாமை யைப் போய்ப் பார்த்தார்கள். "இதென்ன பெரிய விசயமே? ரெலிபோனிலையே விசயத்தைச் சொல்லி யிருக்கலாம்தானே. இதைக் கேக்கிறதுக்கு மினக்கெட்டு 'ட்ராம்' எடுத்து வந்தனீங்களே. எப்ப எண்டு சொல்லுங்கோ. நான் வாறன்" நாட்டாமை உரிமை எடுத்துச் சொன்னார்.

அந்த நாளும் வந்தது. ரவி தனது மனைவியுடன் மருத்துவரின் நிலையத்துக்கு நேரத்துக்கே போய்க் காத்திருந்தான். சொன்ன நேரத்துக்கு நிமிடம் பிந்தாமல் நாட்டாமையும் வந்து சேர்ந்தார்.

*“மூன்றுபேரும் ஒண்டா உள்ளை போறது நல்லா இருக்காது. நீங்கள் கூட்டிக் கொண்டு போங்கோ” ரவி ஒதுங்கிக் கொண்டான்.*

*மருத்துவரிடம் உள்ளே போன நாட்டாமையும் அந்தப் பெண்ணும், இருப்புக் கொள்ளாது ரவி தவிப்புக் கொள்ளும் நேரத்தில் திரும்பி வந்தார்கள்.*

*காத்திருந்த ரவியிடம் “பிரச்சினை ஒண்டும் இல்லையடாப்பா. மருந்து விட்டிருக்கினம். பிள்ளை விளக்கமாகச் சொல்லுவாள்” சொல்லிய நாட்டாமை விடைபெற்றுக் கொண்டார்.*

*ரவி மனைவியின் முகத்தைப் பார்த்தான். அவள் முகம் பொலிவிழந்திருந்தது.*

*வீட்டுக்குப் போன பிறகுதான் நடந்தது என்ன என்பதை ரவி அறிந்து கொண்டான். அவளது அடி வயிற்றில் நோ இருந்ததால் அவளை முழுமையாகச் சோதனை செய்ய வேண்டியிருந்தது. அதற்காக அவளை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று உடைகளைக் களைந்து பரிசோதித்திருக்கிறார்கள். நாட்டாமை அந்த அறைக்குள் போக வேண்டிய அவசியமில்லை. அவளின் கணவன்தான் நாட்டாமை என்று நினைத்து அவர்களும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் நாட்டாமை கண் கொட்டாமல் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந் திருக்கிறார்.*

*மனைவி சொல்லச் சொல்ல ரவிக்கு தலைக்கு ஏறி விட்டது. மனைவியின் சகோதரர்களுக்கும், தனது சகோதரர்களுக்கும் போன் எடுத்து “நாட்டாமை இப் பிடிச் செய்து போட்டான்” என அழுதான்.*

*வீடு புகுந்து அடித்தார்கள் என்று செய்திகள் வாசித்திருப்போமே அதுதான் அன்று இரவு நாட்டாமைக் கும் நடந்தது. விழுந்த அடி உதைகளை விட அவரது மனைவி உச்சரித்த அழகான தமிழ் வார்த்தைகள் மிகப்*

*பலமான தாக்குதலாக அவருக்கு இருந்தது.*

*வெளிக்காயங்களை விட உட்காயங்கள்தான் அவருக்கு அதிகம்.*

*வைத்தியசாலைக்குப் போனால் கேள்விகள் கேட்டு, மாட்டி பொலீஸ்வரை போய் விடலாம் என்ற பயத்தில் அடுத்த நாள் காலையில் முதல் வேலையாக குடும்ப வைத்தியரிடம் போனார்.*

*''படி ஏறும் போது தடுக்கி விழுந்து விட்டேன்'' என்று வைத்தியரிடம் நாட்டாமை பொய் சொன்னார்*

*''என்ன ஒவ்வொரு படியிலும் துள்ளித் துள்ளி விழுந்திருக்கிறீங்கள் போலை'' என்று வைத்தியர் கேட்டது காயங்களுக்குப் போட்ட மருந்தின் எரிச்சலை விட நாட்டாமைக்கு அதிகமாக இருந்தது.*

*பிரபலமானவர்கள் சிரித்தாலே பெரிய செய்தி யாக்கும் நாங்கள் நாட்டாமை விடயத்தை சாதாரண மாக விட்டு விடுவோமா என்ன?*

*நாட்டாமையின் நடமாட்டம் வீட்டுக்குள்ளேயே மட்டுப்படுத்தப் பட்டு விட்டது.*

*வெள்ளிக்கிழமைகளில் தங்கம் மின்ன கோயிலில் நிற்கும் நாட்டாமையைக்காணாமல் ஐயருக்கு அர்ச்சனை உச்சரிக்க நாக்கு ஒத்து வரவில்லை.*

*சனிக்கிழமைகளில் சாமத்தியச் சடங்குகளிலும், பிறந்தநாள் விழாக்களிலும் கூட்டமாக நின்று கதைத்துக் கொண்டிருக்கும் எங்களவர்களின் மத்தியில் நடுநாயக மாக இருக்கும் நாட்டாமையை எங்கும் காணக் கிடைக்க வில்லை.*

*Audi காரில் வலம்வரும் நாட்டாமை தம்பதிகளின் தரிசனத்தை நகர்வீதி இழந்திருந்தது.*

*இந்தச் சோக நிலைகளுக்கு நடுவே சீட்டுக்குக் காசு கட்டுபவர்கள்தான் முதலில் அந்தச் செய்தியை அவிட்டு விட்டார்கள். அது "நாட்டாமையைக் காண வில்லை" என்ற செய்தி.*

*மாதத்தில் கடைசிச் சனிக்கிழமைதான் சீட்டுக் கூறும் நாள். இந்த முறை நாட்டாமை ஒருத்தருக்கும் முன் அறிவித்தல் தரவில்லை. சீட்டுக் கூறும் நாள் போய்ப் பார்த்தால், நாட்டாமையின் வீட்டில் ஒருத்தரும் இல்லை.*

*நாட்டாமை குடும்பமாக லண்டனுக்குப் போனாரா, பரிஸ்க்குப் போனாரா? இல்லை யேர்மனியி லேயே வேறொரு நகரத்துக்கு இடம் மாறிவிட்டாரா? என்பது யாருக்கும் தெரியவில்லை*

*சீட்டை ஏற்கெனவே எடுத்தவர்களும், வட்டிக்கு அவரிடம் பணம் வாங்கியவர்களும் நிறைந்த மகிழ்ச்சி யாக இருக்கிறார்கள்.*

*"கழிவு நல்லாப் போகோணும்" என்று சீட்டின் கழிவை ஏற்றி, கட்டுக் காசை வெகுவாகக் குறைத்து கடைசிச் சீட்டெடுக்க காத்து நின்ற சிலர் மட்டும் "எங்கே அவன் தேடுதே சனம்" என்று கவலை கொண்டிருக்கிறார்கள்.*

***07.04.2018***

# அந்தக் கரித்துண்டைத் தூக்கி அங்காலை எறியுங்கோ

*கார்ல் ஒல்கா ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தபோது என்னுள் இருந்த வழமையான கலகலப்பு இல்லாமல் போயிருந்தது.*

*குமாரசாமி அண்ணன் எனது வேலையிடத்துத் தோழன். தோழன் என்று ஒருமையில் சொல்வது அவ்வ ளவு நன்றாக இருக்காது தோழர் என்று அழைப்பது தான் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால் குமாரசாமி அண்ணன் என்னைவிட ஆறு வயதுகள் மூத்தவர். ஆனால் குமாரசாமி அண்ணன் வயது வித்தியாசத்தை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு ''செல்வா..செல்வா..'' என்று சொல்லி ஒரு சம வயது நண்பனாகவே என்னுடன் பழகிக் கொண்டிருந்தார்.*

*''கத்தரிக்காயை நல்ல மெல்லிய துண்டுகளாகச் சீவி சின்னன் சின்னனா வெட்டி எண்ணையிலை போட்டு 'கலகல' எண்டு பொரிச்செடுத்து வைச்சிட்டு ஊர் வெங்காயத்தையும் பிஞ்சுமிளகாயையும் குறுணியா வெட்டிப் பொரிச்ச கத்தரிக்காய்க்குள்ளை போட்டு, அதுக்குள்ளை தேங்காய்ப்பால், மிளகு, சின்னச் சீரகத் தூள், உப்பு, தேசிக்காய்ப்புளி விட்டு கையாலை நல்லா பிசைஞ்சு சாப்பிட்டுப் பார், அந்த மாதிரி இருக்கும். அந்தக் கத்தரிக்காய்ச் சம்பல் ஒண்டு போதும் இரண்டு கோப்பை சோறு சாப்பிடலாம். கொஞ்சமா தண்ணி அடிச்சிட்டாய் எண்டால், கோழி நெஞ்சிறைச்சியை சின்னஞ் சின்னதா வெட்டி, பொரிச்சு, பிசைஞ்சு வைச்சிருக்கிற கத்திரிக்காய்க்குள்ளை போட்டு குழைச்சுச் சாப்பிட்டுப் பார் தண்ணி அடிச்ச வாய்க்கு அமிர்தமா இருக்கும்''குமாரசாமி அண்ணன் சொல்லித் தந்த ஒரு சமையல் குறிப்பு அது. அவர் சொன்ன அந்தக் கத்தரிக் காய்ச் சம்பலின் ருசி வீட்டில் எல்லோருக்கும் பிடித்துப்*

போனது. இன்று எனது வீட்டில் நடக்கும் விசேசங்களில் எல்லாம் கத்திரிக்காய்ச் சம்பல் கண்டிப்பாக இடம் பிடித்திருக்கும். ஒவ்வொரு தடவையும் கத்திரிக்காய்ச் சம்பல் செய்யும் போது அவர் முகம் மனதில் வரும்.

இன்று ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் அவரைப் பார்க்கத்தான் வந்திருந்தேன். கார்ல் ஒல்கா ஆஸ்பத்திரியில் இருந்து எனது வீடு பெரிய தூரம் என்றில்லை எண்பத்தியொரு கிலோ மீற்றர்கள்தான், நெடுஞ்சாலையினூடாகப் பயணித்தால் ஒரு மணித்தியாலத்துக்குள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடலாம். ஆனாலும் ஆஸ்பத்திரியின் வாசலில் கொஞ்சம் இருந்து விட்டுப் போகலாம் என்ற எண்ணம் வர வெளியே யாருமே இல்லாமல் தனியாக இருந்த வாங்கிலில் போய் அமர்ந்து கொண்டேன்.

தனியாக இருக்கலாம் என்று நினைத்தால் அந்த வாங்கிலை ஒரு இளம் சோடி வந்து பங்கு போட்டுக் கொண்டது.

வேலை இடத்தில் விழுந்தானா, இல்லை கால் பந்து விளையாடி காலை முறித்துக் கொண்டானா தெரியவில்லை. அந்தச் சோடியின் இளைஞன் உள்ளங் காலில் இருந்து தொடை வரை பெரிய கட்டுப் போட்டிருந்தான்.

“ஆஸ்பத்திரிக்கு வந்தும் சிகரெட்டை உன்னாலை விட முடியேல்லை” பெண் அவனை செல்லமாகக் கோபித்துக் கொண்டது என் காதில் கேட்டது. அவள் சொன்னது அந்த இளைஞன் காதில் தெளிவாகக் கேட்டிருக்கும். ஆனாலும் அவன் தன்பாட்டுக்கு புகையை உள் இழுத்து வெளியே தள்ளிக் கொண்டிருந்தான்.

இப்பொழுது எனது மனது பதினைந்து வருடங்களுக்குப் பின்னால் போய் நின்றது.

உள்ளே புகை பிடிக்க அனுமதி இல்லாததால்

வேலையிடத்தில் அடிக்கடி வெளியே போக வேண்டி இருந்தது. அன்றும் வேலைநேரத்தில் வெளியே போட்டி ருந்த வாங்கிலில் இருந்து சிகரெட் பிடித்துக் கொண் டிருந்தேன்.

"உன்னை அங்கை காணேலை எண்டவுடன் இஞ்சைதான் இருப்பாய் எண்டு நினைச்சன்"

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு குமார சாமி அண்ணன் எனக்குப் பக்கத்தில் வந்து இருந்தார்.

"என்ன புதினம் செல்வா?"

"இண்டைக்கு உங்கடை பிறந்தநாள்"

"ஓமடா நேற்று படுக்கைக்குப் போகக்கை நினைச்சனான். காலைமை எழும்பக்கை அதை மறந்து போனன். பார் என்ரை மனுசியும் எனக்கு நினைப் பூட்டேல்லை"

"பின்னேரம் நீங்கள் வீட்டை போகக்கை சில நேரம் ஒரு சேர்ப்பிரைஸ் பார்டி இருக்கலாம்"

"இருக்கும் போலைத்தான் கிடக்குது. காலைமை என்னைப் பார்த்து மனுசி கொடுப்புக்குள்ளை சிரிக் கக்கை, என்ரை முகத்தைப் பார்த்து சிரிக்கிறதுக்கு என்ன இருக்கு எண்ட நினைப்புத்தான் வந்தது. பிறந்த நாளைப் பற்றி யோசனையே வரயில்லை. அது போகட்டும் என்ரை பிறந்த நாளுக்கு நீ என்ன தரப் போறாய்?"

"ஒரு பக்கெற் சிகரெட்?"

"சிகரெட்டோ? இந்தக் கோதாரியை எப்ப விடலாம் எண்டிருக்கிறன்"

"எனக்கும்தான் அந்த நினைப்பு இருக்கு"

"இதை விட்டால் நல்லதுதாண்டா. உடுப்பு, உடம்பு எல்லாம் சிகரெட் மணம்தான். வீட்டிலையும் அப்பப்ப அர்ச்சனையும் விழும். மனுசி மட்டுமில்லை பெட்டைகளும் பேசுவாளுகள்"

"அப்ப விட்டிடுங்கோ"

"பேய்க்கதை கதைக்கிறாய். நாற்பது வருசமா பத்துறன். உடனை விடேலுமே? வேணுமெண்டால் ஒவ்வொண்டாகக் குறைச்சுக் கொண்டு வந்து..."

"இது நடக்கிற காரியமா இருக்காது. விடுறது எண்டால் ஒரேயடியா விடோணும்"

"அதெல்லாம் பேச்சுக்கு சரிவரும் ஆனால்..."

"மனசுதானண்ணை எல்லாம்"

"இவ்வளவு கதைக்கிறாய் உன்னாலை இதை விடேலுமோ?"

"ஓகே. நான் விடுறன். உங்கடை பேர்த்டே அண்டு, சிகரெட் பிடிக்கிறதில்லை எண்டு முடிவெடுப்பம்"

"நீ விடுறதெண்டால் நானும் ரெடி"

குமாரசாமி அண்ணன் அப்படிச் சொன்னதும் பத்திக் கொண்டிருந்த எனது சிகரெட்டை பாதியிலேயே அணைத்தேன்.

"நீ நூத்தால் நானும் நூப்பன்" என்னைப் பார்த்து தனது சிகரெட்டையும் குமாரசாமி அண்ணை அணைத்துப் போட்டார்.

என் பொக்கெற்றுக்குள் இருந்த சிகரெட் பக் கெற்றை எடுத்து அருகில் இருந்த குப்பை வாளிக்குள்

*போட்டேன்.*

*“புதுப் பக்கெற் போலை இருக்கு?”*

*“ஓம். இப்பதான் வேண்டினனான். ஒண்டுதான் அதுவும் பாதிதான், இப்ப பத்தினது” சொல்லிவிட்டு எழுந்து கொண்டேன். குமாரசாமி அண்ணனும் என்னுடன் கூட வந்தார்.*

*இரண்டு நாள் கழித்துப் பார்த்தால் வேலை இடத்தில் வெளியே போட்டிருந்த வாங்கிலில் இருந்து குமாரசாமி அண்ணன் சிகரெட் பத்திக் கொண்டிருந்தார்*

*“என்னண்ணை திரும்பத் தொடங்கிட்டீங்களே?”*

*“விட்டால்தானே திரும்பத் தொடங்கிறதுக்கு. நீ சிகரெட் பக்கெற்றை ‘பின்’னுக்குள்ளை போட்டுட்டுப் போட்டாய். அநியாயமா ஒரு சிகரெட் பக்க்கெற்றை எறிஞ்சது மனசுக்கு ஒரு மாதிரி இருந்துது. திரும்ப வந்து எடுத்து என்ரை சேர்ட் பொக்கெற்றுக்குள்ளை வைச்சிட்டன். சேர்ட் பொக்கெற்றுக்கும் வாய்க்கும் கனக்கத் தூரமில்லைப் பார்”*

*“சரி அந்தப் பக்கெற் முடிஞ்சதுக்குப் பிறகு புதுசு வேண்டிப் போடாதையுங்கோ”*

*“அடப் போடா. இது அதுக்குப் பிறகு இரண்டாவது பக்கெற்”*

*இழுக்க இழுக்க இன்பம் தந்த சிகரெட்தான் குமாரசாமி அண்ணனை இப்பொழுது ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுக்க வைத்திருக்கிறது.*

*“மனுசியிட்டை தேத்தண்ணி போடச் சொல்லிப் போட்டு கதிரையிலை இருந்தனான். திடீரென கண் இருட்டிக் கொண்டு வந்துது. மேசையிலை அப்பிடியே படுத்திட்டன். நல்ல வேளை மூத்தமகள் கண்டிட்டு*

*உடனை அம்புலன்ஸுக்கு அடிச்சிட்டாள். ஐஞ்சு நிமிசத் துக்குள்ளை வந்திட்டாங்கள். அவங்கள் வந்து "நித்திரை கொள்ளாதை நித்திரை கொள்ளாதை" எண்டு கன்னத் திலை அடிச்சடிச்சு அம்புலன்ஸிலை என்னை ஏத்தின ஞாபகம். சத்தி எடுத்தனான் எண்டும் சொல்லிச்சினம். பிள்ளைகளும் மனுசியும் நல்லா பயந்து போட்டினம் செல்வா"*

*"இப்ப எப்பிடி இருக்கண்ணை?"*

*"பாக்கேல்லையே. உடம்பெல்லாம் வயறுகள். 24 மணித்தியாலமும் கொம்புயூற்றரிலை கவனிப்பாம்"*

*"சாப்பிட ஏலுமா இருக்குதுதானே?"*

*"வட்டம், நீள் வட்டம், சிவப்பு, வெள்ளை எண்டு கொஞ்சக் குளிசைகள் காலமையிலை கொணந்து தருவாங்கள். அதை விழுங்கி, தண்ணியும் குடிச்சால் வயிறு 'புல்'. அதுக்கு மேலை காலமைச் சாப்பாடு எண்டு பெரிசா எல்லாம் தேவையில்லை.*

*சும்மா சொல்லக் கூடாது மத்தியானம் உண்மை யிலை நல்ல சாப்பாடுதான். என்ன Input, Output எல் லாம் படுக்கையிலை எண்டபடியால் கொஞ்சம் கூச்சமா இருக்கு"*

*"அதுக்காக சாப்பிடாமல் இருக்கேலுமே"*

*"சாப்பாடு முக்கியமெல்லே. சாப்பிடுறன்தான். எண்டாலும் செல்வா, நீ மனசிலை திடமான ஆள்தான். உன்னைப் போலை நானும் அண்டைக்கே சிகரெட்டை விட்டிருக்கோணும்"*

*"இப்ப இங்கை உங்களாலை சிகரெட் இல் லாமல் இருக்க முடியுதுதானே. ஆஸ்பத்திரியை விட்டு வெளியாலை வந்தாப் போலையும் நீங்கள் சிகரெட் இல்லாமல் இருக்கலாம்"*

*“ஆஸ்பத்திரியை விட்டு வெளியாலை வருவேன் எண்டு நினைக்கிறீயே?”*

*“வருவீங்கள். வெளியிலை வந்த உடனை நீங் கள் செய்ய வேண்டிய முதல் வேலை என்னெண்டால், அந்தக் கரித்துண்டை தூக்கி எறியிறதுதான்”*

*குமாரசாமி அண்ணனுக்குச் சொல்லிப் போட்டு வந்திருக்கிறேன். இந்த முறை ஏமாற்ற மாட்டார் என்று நம்புகிறேன்.*

***28.05.2018***

# படம் பார்த்துக் கதை சொல்லு

"படம் பார்த்து கதை சொல்லு" என்று ஏகாம் பரம் மாஸ்ரர் எங்களுக்கு பாடசாலையில் வகுப்பு எடுத்திருக்கிறார்.

அந்த நினைவில் இங்கே நான் ஒரு படம் பார்த்துக் கதை சொல்கிறேன். அதற்கு முன்னர் அந்தப் படத்தைப் பற்றிச் சொல்லி விடுகிறேன்.

சுவிஸ் வாழ் எங்கள் தமிழர்கள் சிலர் பக்தி தலைக்கேறி "தீ மிதித்தல்" நிகழ்ச்சியை நடத்தி இருந் தார்கள். அந்த நிகழ்ச்சிக்கு வந்த ஒரு அன்பர் பிறந்த மேனியாக வந்திருந்ததை Youtubeஇல் பார்க்கக் கிடைத் தது.

அதிலும் அவர் அடிக்கடி கீழே குனிந்து ஏதோ ஒன்றை அடிக்கடி பார்ததுக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியைப் பார்த்த போது நான் முன்னர் கேட்ட ஒரு பழைய கதை நினைவுக்கு வந்தது.

செவி வழி கேட்ட கதைதான் என்றாலும் இங்கே கொஞ்சம் வைச்சுக் கிச்சு அந்தக் கதையை எழுதியிருக்கிறேன். இதில் அதி முக்கியமாக புதுமணலூர் என்ற இடத்தை நானே உருவாக்கி இருக்கிறேன்.

புகையிலைப் பயிர்ச் செய்கையில் கணபதிக்கு அந்த வருசம் நல்ல விளைச்சல். இவ்வளவு புகையிலை யையும் காலிக்கு கொண்டு போய் விற்றால் நல்ல லாபம் பார்க்கலாம் என்று அவரது நண்பர்கள் இவருக்கு ஆசையைக் கிளப்பி விட புகையிலை எல்லாவற்றையும் கட்டிக் கொண்டு கணபதி கொழும்புக்குப் பயணமானார்.

கொழும்பில் வந்து இறங்கிய பின்னர்தான், காலிக்கு இன்னும் ஒரு பயணம் செய்ய வேண்டும் என்று கணபதி அறிந்து கொண்டார்.

*தனியாக நின்று அல்லாடிக் கொண்டிருந்த கணபதியின் நிலை அறிந்து அவருக்கு உதவுவதற்காக சோதி என்பவர் வந்து சேர்ந்தார்.*

*"கொழும்புக்குப் புதுசு போலை... எங்கை போகோணும்?" சோதியின் அன்பான விசாரிப்பில் கணபதி மயங்கிப் போனார்.*

*புகையிலையைக் காலிக்குக் கொண்டு போய் விற்று பணம்பார்க்க இருக்கும் தன்னுடைய விருப்பத்தை சோதியிடம் சொன்னார்.*

*"அப்பிடியா? நான் ஒரு புகையிலைப் புறோக்கர் தான்"*

*"அப்ப நல்லதாப் போச்சுது"*

*"என்ரை ஊர் புதுமணலூர். சின்னனிலை இருந்தே இங்கைதான் இருக்கிறன். எனக்கு காலியிலை யும் வியாபாரிகளை எல்லாம் நல்லாத் தெரியும். வேணுமெண்டால் சொல்லுங்கோ. நான் உங்களை அங்கை கூட்டிக் கொண்டு போறன். நல்ல விலைக்கும் புகையிலையை வித்துத்தாறன்"*

*"நல்லதாப்போச்சு. அந்தக் கதிர்காமக்கந்தன்தான் உங்களை என்னட்டை அனுப்பி வைச்சிருக்கிறான்"*

*"மனுசனுக்கு மனுசன் உதவி செய்யாட்டில் அது என்ன பிறப்பு. நீங்கள் கதிர்காமக்கந்தனைக் கும்பிடுற ஆள் போலக் கிடக்கு. அவரைப் போய்ப் பாக்க ஆசை இருக்கே?"*

*"ஆசை இருக்குக்குத்தான். முதலிலை புகையிலை யை விப்பம். பிறகு போய் கதிர்காமத்தானை பார்ப்பம்"*

*"புகையிலை வித்திட்டு காசோடை கோயில், குளமெண்டு அலையிறதும் நல்லாயிருக்காது"*

*"நீங்கள் சொல்லுறது சரி. அப்ப புகையிலையை என்ன செய்யிறது?"*

*"அது ஒரு பிரச்சினையுமில்லை. எனக்குத் தெரிஞ்ச ஒரு இடம் இருக்கு. அங்கை கொண்டு போய் வைக்கலாம். நானும் உங்களோடை கதிர்காமம் வாறன். பிறகு காலியிலை புகையிலையையும் வித்துத்தாறன். நீங்கள் பாத்து ஏதாவது எனக்குச் செய்யுங்கோ"*

*சோதியின்பேச்சும் பழகும்தன்மையும் கணபதிக்குப் பிடித்துப் போயிற்று. சோதி சொன்ன இடத்தில் புகை யிலைப் பொதிகளை வைத்து விட்டு இருவரும் கதிர் காமம் பயணமானார்கள்.*

*"கதிர்காமம் வந்திட்டு மாணிக்க கங்கையிலை குளிக்காமல் போனால் நல்லா இருக்காது. நான் அடிக் கடி வந்து போறதாலை மாணிக்க கங்கையிலை இந்த முறை இல்லாட்டிலும் அடுத்த முறை குளிச்சிக் கொள்ளு வன். நீங்கள் எப்போதாவது இப்பிடி வாற பொழுது தானே கங்கையிலை குளிக்க முடியும். போய்க் குளியுங்கோ. நான் கரையிலை இருந்து உங்கடை உடைமைகளைப் பாக்கிறன்"*

*தனது ஆடைகளைக் களைந்து கணபதி மாணிக்க கங்கையில்இறங்கி மூழ்கிஎழுந்தால் கரையில் சோதியை காணவில்லை. கழட்டி வைத்த உடுப்புகள், கடிகாரம், பணம் எதுவும் வைத்த இடத்தில் இல்லை.*

*கணபதி சுற்று முற்றும் பார்த்து „சோதி" என்று உரத்த குரலில் பலமுறை அழைத்தும் பலனில்லை .*

*மாணிக்க கங்கையில் நின்றபடியே அண்ணாந்து பார்த்தால் கோபுரத்தில் முருகன் கோமணத்துடன் இருக் கும் சிலைதான் கணபதிக்குத் தெரிந்தது.*

*கணபதி சற்றுக் குனிந்து தன்னிலையைப் பார்த் தார். அவரும் முருகனைப் போலவே கோமணத்துடன்*

*நின்றது புரிந்தது.*

*கணபதியின் வாய் அவரை அறியாமலே முணு முணுத்தது.*

*முருகனைப் பார்த்து*
*„முருகா, நீயுமா புதுமணலூர்க்காரனை நம்பி புகையிலை விக்க வந்தனீ? என்று கேட்டது.*

***25.07.2018***

# எப்போதான் சொல்லுவீங்கள்?

*தொண்ணூறுகளின் ஆரம்பம். தமிழர் புனர் வாழ்வுக் கழகக் கிளையை யேர்மனியில் ஆரம்பித்து இருந்தோம்.*

*கைகளில் அடக்கமான தொலைபேசிகளோ அல் லது மடிக்கணினிகளோ இல்லாத காலம் அது. ஆகவே ஓடியோடித்தான் எங்கள் சேவைகளைச் செய்து கொண்டிருந்தோம்.*

*வீடு, குடும்பம், வேலை என்று எங்கள் தனிப் பட்ட வாழ்க்கையுடன் மல்லுக் கட்டிக்கொண்டுதான் புனர்வாழ்வுக்கான எங்களுடைய சேவைகள் இருந்தன.*

*மக்களை நாங்கள் அணுகும் முறையை விரும்பிய பலர், தாயகத்துக்குச் சேவை செய்ய எங்களுடன் இணைந்து கொண்டார்கள். யேர்மனியில் இருந்த தமிழ் மக்களும் தங்களால் முடிந்த உதவிகளை மனம் விரும்பி வழங்கினார்கள். இவை எல்லாம் எங்களுக்கு வலிமை யான ஊக்க மருந்துகளாகின. அடுத்த கட்டமாக தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கிளையை சட்டரீதியாக யேர்மனி யில் பதிவது என்று முடிவெடுத்தோம். அப்பொழுதுதான் சிக்கலே உருவானது.*

*சட்டப்படி ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக் கிளையைப் பதிவது என்றால் அது தங்களை மீறிப் போய் விடும் என்ற அச்சத்தை யாரோ ஒரு அறிவாளி கிள்ளிப் போட அது யேர்மனியில் இருந்த தமிழர் இயக்கத்துக்குள் பெரும் புகையைக் கிளப்பி விட்டது. அதுவே நீயா நானா என போட்டியாகியும் போனது.*

*ஒட்டு மொத்தமாக புனர்வாழ்வுக்கழக நிர்வாகத் தையே கலைத்துவிட்டு புதியவர்களைப் போடவேண்டும் என அவர்கள் தீர்மானித்தார்கள். அதற்காக அவர்கள்*

பாரிஸில் இருந்த அன்றைய சர்வதேசப் பொறுப்பாளர் லோரன்ஸ் திலகரை நாடினார்கள்.

லோரன்ஸ் திலகரிடம் எல்லோருக்கும் நல்ல மதிப்பு இருந்தது. நிலைமையை அவர் எல்லோருடனும் கலந்து ஆலோசித்து நல்ல முடிவைத் தருவார் என்ற நம்பிக்கை எங்களிடம் இருந்தது. கும்மர்ஸ்பார்க் என்ற இடத்திற்கே அவர் வருவதாக ஏற்பாடு. அது எனது இடத்தில் இருந்து ஏறக்குறைய 450 கிலோ.மீற்றர் தூரத்தில் இருந்தது. என்னிடம் வாகன வசதி அப் பொழுது இருக்கவில்லை. அதனால் என்னை கும்மர்ஸ் பார்க்கிற்கு அழைத்துச் செல்ல வாகனம் ஒன்று ஏற் பாடாகி இருந்தது. ஆனால் வேலைத்தளத்தில் விடுமுறை தர மறுத்து விட்டார்கள். போக முடியாத நிலையில் நான் இருந்தேன். மருத்துவ விடுப்பு எடுக்கலாம் என்றால் அது வேலைக்கும், உடலுக்கும் ஆரோக்கிய மாகப் படவில்லை. மருத்துவ விடுப்பு என்றவுடன் என் நினைவுக்கு வருவது இதுதான். ஒரு முறை எனது நகரில் „இரங்கும் இன்னிசை இரவு' என்ற ஒரு கலை நிகழ்ச்சியை புனர்வாழ்வுக் கழகத்திற்காக ஏற்பாடு செய் திருந்தேன். தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாள ருக்கு அவரது வேலைத்தளத்தில் விடுப்புக் கிடைக்க வில்லை. மருத்துவரிடம் போய் ஏதாவது காரணம் சொல்லி மருத்துவ விடுப்பு எடுக்கலாம் என்று யாரோ அவரிடம் அறிவுரை கூற அவரும் மருத்துவரிடம் போய் முதுகு நோகிறது என்று சொல்லி இருக்கிறார். வலி கடுமையா என்று கேட்டு அதிகமான கோட்டிசோனை ஊசிமூலம் மருத்துவர் ஏற்றி விட வளைந்த முதுகோடும் நிறைந்த வலியோடும் நிகழ்ச்சிக்கு வந்து சேர்ந்தார்.

சரி விடயத்திற்கு வருவோம்.

கழக நிர்வாகத்தில் இருந்தவர்கள் மிகத் திறமை சாலிகள். ஆகவே எல்லாம் நல்லபடியாக நடந்திருக்கும் என்ற மித மிஞ்சிய நம்பிக்கை என்னிடம் இருந்தது. எனது வேலை முடிந்து வந்து கழக அலுவலகத்திற்கு தொலைபேசி எடுத்தேன்.

*தொலைபேசியில் வந்தவரது குரல் எனக்குப் புதி தாக இருந்தது. தமிழர்புனர்வாழ்வுக்கழக யேர்மனிக்கிளை தலைவர், செயலாளர், பொருளாளர் மூவரும் தங்கள் பதவிகளை விட்டு விலகி விட்டதாகத் தொலைபேசியில் அவர் சொன்னார்.*

*நான் இதை எதிர்பார்க்கவே இல்லை. ஏன்? எதற்கு? எனக் கேள்விகள் என்னிடம் இருந்தும் நான் அவரைக் கேட்க விரும்பவில்லை. சரியான பதில் அவரி டம் இருந்து வராது என்பது எனக்குத் தெரியும்.*

*ஆனால் அவரிடம் இருந்து ஒரு தகவல் வந்தது. அது இதுதான். „தலைவர் பதவியை உங்களைப் பொறுப்பேற்றுச் செய்யுமாறு லோரன்ஸ் திலகர் சொல்லியிருக்கிறார். அவர் நாளை காலை பத்துமணி வரை இங்கே இருப்பார். உங்கள் நல்லமுடிவை அறிவியுங்கள்'*

*இதையும் நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நிர்வாகத்தில் இருந்த ஐவரில் மூவர் அந்தப் பதவிகளில் இனி இல்லை. அவர்கள் தாங்களாகவே விலகி விட்ட னரா? அல்லது விலகும் படி நிர்பந்தப் படுத்தப் பட்டார்களா தெரியாது. அடுத்த இருவரில் ஒருவர் நான். பிரச்சாரப் பகுதிக்கான பொறுப்பு என்னிடம் இருந்தது. . மற்றையவர் உதவிச் செயலாளராக இருந் தவர். அவர் யேர்மனியில் மொழி பெயர்ப்பாளராகவும் கடமை ஆற்றிக் கொண்டிருப்பவர். அது யேர்மனிய மக்களிடம் எங்கள் பிரச்சினைகளை எடுத்துச் செல்வதற்கு எங்களுக்குப் பெரிதும் உதவியாக இருந் திருக்கின்றது. போதாததற்கு அப்பொழுது ஏன் இப் பொழுதும் கூட புலம்பெயர் தமிழர்கள் அதிகமாக வாழும் யேர்மனிய வடக்குப் பகுதியிலேயே அவரும் வசித்து வந்தார். ஆதலால் அவரிடம் பொறுப்பைக் கொடுப்பதே நல்லது என்று நான் நினைத்தேன். அதனால் மறுநாள் காலை எனது முடிவை அலுவலகத்திற்கு அறிவித்தேன். அந்தப் பொறுப்பை ஏற்க உதவிச் செயலாளருக்கும் விருப்பம் இருந்தது என்பது அவர்களுக்கும் தெரியும்.*

*ஆனால் முடிவு மட்டும் வேறாக இருந்தது.*

*இது விடயமாக கலந்து உரையாடுவதற்கு எனக்காக ஒரு கூட்டத்தை நான் இருக்கும் மாநிலத்திலேயே ஸ்ருட்காட் நகரிலே ஒரு ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்தார்கள். வாகன வசதி இல்லை, வேலையில் விடுமுறை இல்லை என்று „டிமிக்கி' கொடுக்கிறாயா. இப்ப வா பார்க்கலாம் என்பது போல் அவர்களது கூட்ட ஒழுங்கு இருந்தது.*

*கூட்டத்தில் கடுமையான வாக்கு வாதங்கள். ஒரு கழகத்தின் நிர்வாகக் குழுவை கூட்டி அங்கு கருத்துகளை உள்வாங்கி ஆரோக்கியமான முடிவை எடுக்காமல் எடுத்தோமா கவிழ்த்தோமா என்ற நிலை ஏற்புடையது அல்ல என்ற வாதம் என்னிடம் இருந்தது. குறைந்த பட்சம் அவர்கள் விலகியதையோ அன்றி விலக்கப் பட்டிருந்தாலோ அதற்கான காரணங்களை நிர்வாகக் குழுவுக்கு அறிவிக்க வேண்டும் என்று நான் ஆணித்தரமாக நின்றேன்.*

*எனது பலத்த வாதத்திற்கான இறுதிப் பதில் இப்படி இருந்தது.*

*„இதுதான் முடிவு. அமைப்புக்குள் இருந்து கொண்டு இப்படியான கேள்விகளைக் கேட்கக் கூடாது. அதுக்கு நாங்கள் பதில் தர முடியாது'*

*இந்தப் பதிலோடு எனது தலைக்குள் „சுர்' என்று ஏதோ நுளைந்தது போல் இருந்தது.*

*„அப்படியானால் நானும் விலகிக் கொள்கிறேன்'*

*கூட்டத்தை விட்டு வெளியே வந்து விட்டேன்.*

*கூட்டம் முடிவடைந்தது. கூட்டத்திற்கு வந்தவர்களிடம் விடை பெற்றுக் கொண்டிருந்தேன். கூட்டத்திற்கான பொறுப்பாளர் என்னருகே வந்தார்.*

*„இவ்வளவு கோபம் உங்களுக்குக் கூடாது„ என்றார்.*

*எனது கோபத்திற்கான காரணம் அவரது பேச்சுத் தான். ஆனாலும் பொறுமையை வரவழைத்துக் கொண்டு அவரிடம் கேட்டேன்.*

*„இப்பொழுது நான் விலகி விட்டேன்தானே. எனது கேள்விக்கு என்ன பதில்?'*

*„அமைப்புக்கு வெளியில் இருந்து கொண்டு நிர்வாகம் சம்பந்தமான கேள்விகளைக் கேட்பவர்களுக்கு நாங்கள் பதில் தர முடியாது'*

*ஆடிப்போய் இரண்டு அடி பின்னால் போனேன். ஆனால் அரசியலைப் புரிய ஆரம்பித்தேன்.*

***23.12.2014***

# நான் சிறுத்துப் போனேன்

*அந்தத் தொலைபேசியின் மணி எப்போதாவது தான் ஒலிக்கும். அது எனக்கு மட்டும் உரித்தான எனது வீட்டுத் தொலைபேசி. எனது முக்கிய உறவினர்களுக்கு மட்டும்தான் அந்தத் தொலைபேசி இலக்கம் தெரியும். வேலை, நண்பர்கள், இன்னபிற தேவைகளுக்கு எனது கைத்தொலைபேசியையே பயன்படுத்திக்கொண்டிந்தேன் .*

*அன்று ஞாயிற்றுக்கிழமை. வீட்டுத் தொலைபேசி ஒலித்தது. அழைப்பை ஏற்கும் போது பார்த்தேன், அழைப்பு சிறிலங்காவில் இருந்து வந்திருந்தது. எனது உறவுகள் யாரும் சிறிலங்காவுக்குப் போவதற்கு சாத்திய மில்லையே என்ற நினைப்புடனேயே*

*“ஹலோ” சொன்னேன்.*

*“ஆர் செல்வனே கதைக்கிறது?”*

*அங்கிருந்து கதைப்பது யாராக இருக்கும்? பரம இரகசியமாகப் பாதுகாத்த எனது வீட்டுத் தொலைபேசி இலக்கம் எப்படி சிறிலங்காவில் உள்ளவருக்குத் தெரிந் திருக்கிறது? என்ற கேள்விகள் என்னுள் எழுந்தாலும் “ஓம் செல்வாதான் கதைக்கிறன். நீங்கள்...” என்றேன்.*

*“நான் விமலா. விமலாக்கா. எப்பிடி இருக்கிறாய் செல்வன்?”*

*ஊரில் எனது அயல் வீடுதான் விமலா அக்கா வின் வீடு. அவருக்கும் எனக்கும் உறவென்று இல்லை. பாசத்தோடு பழகியதால் பெயரளவில் எனக்கு அக்கா வாகிப் போனவர். அவரின் ஒரு மகன் இலண்டனிலும், மகள் கனடாவிலும் குடும்பமாக இருக்கிறார்கள்.*

*“எப்பிடி என்ரை ரொலிபோன் நம்பர் உங்களுக் குக் கிடைச்சது?”என்று கேட்க எத்தனித்தேன். அதற்கு*

*சில நொடிகள் கூட ஒதுக்காமலே விமலா அக்காவின் குரல் தொலைபேசியை ஆக்கிரமித்து இருந்தது.*

*அவருடனான உரையாடலில் என்னிடம் இருந்து பணம் எதிர்பார்க்கிறார் என்பது மட்டும் புரிந்தது.*

*“ஏன் பிள்ளைகள் காசு அனுப்புறேல்லையோ?”*

*“அனுப்பினம்தான். மருந்து, அந்தச்செலவு இந்தச் செலவு எண்டு காசு செலவழிஞ்சு போயிடுமடா”*

*கதைத்து முடிக்கும் போது ஒரு தடவைக்கு இரு தடவை தனது வங்கி விபரத்தை விமலா அக்கா என்னிடம் ஒப்புவித்தார். ஆனால் இறுதிவரை எனது தொலைபேசி இலக்கம் தனக்குக் கிடைத்த விதத்தை மட்டும் அவர் எனக்குச் சொல்லவேயில்லை.*

*சம்பளம் வந்த அடுத்த வாரமே, அடுத்த மாதச் சம்பளத்துக்கு இன்னும் மூன்று வாரங்கள் இருக்கே என்று தவிக்கும் இனம் நான். ஆனாலும் விமலா அக்கா கேட்ட போது ´ஏதாவது அவவுக்குக் கொடு‘ என்று உள்ளுணர்வு சொன்னது. பட்ஜெட்டுக்குள்ளே அடங் காத சம்பளத்திலும் 300 யூரோக்கள் விமலா அக்காவுக்கு அனுப்பலாம் என்று கணக்குப் போட்டுக்கொண்டேன்.*

*வருடத் தொடக்கத்தில் பொங்கலுக்கு அன்பளிப் பாக இருக்கட்டும் என்று பணத்தை விமலா அக்காவுக்கு அனுப்பி விட்டு எனது செலவை மேலும் இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் அடக்கிக் கொண்டேன்.*

*பொங்கல் முடிந்து இரண்டு மாதங்கள் ஆயிற்று. பணம் கிடைத்ததா இல்லையா என்பது பற்றி விமலா அக்காவிடம் இருந்து தகவல் ஏதும் வரவேயில்லை.*

*ஒருவேளை வங்கி இலக்கத்தில் நான் ஏதாவது பிழை விட்டு விட்டேனோ என்ற சந்தேகம் எழ விமலா அக்கா வுக்கு நானே தொலைபேசி எடுத்தேன்.*

*“பொங்கல் எப்பிடிப் போச்சுது?”*

*“நானும் மனுசனும் மட்டுந்தானே. பிள்ளைகள் பக்கத்திலை இல்லாததாலை நான் இப்ப பொங்குறது இல்லையடா”*

*“காசு அனுப்பினனான் கிடைச்சதே?” பெருமை யோடு கேட்டேன்.*

*“அது என்னடா கொஞ்சக்காசுதானே. பாங்கிலை கொண்டு போய் மாத்தக்கை 50,000ரூபா மட்டிலைதான் வந்தது” சலிப்போடு சொன்னார்*

*அவரது பதிலைக் கேட்டு நான் சிறுத்துப் போனேன்.*

***17.02.2018***

# செத்துப்போன கருவாடு

*பயிர்ச் செய்கைக்கு அதிகளவு இரசாயன உரங்களைப் பாதிப்பதால், நுகர்வோருக்கு புற்று நோய் ஏற்படும் அபாயம் இருப்பதாக சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருக்கிறது.*

*“சோயாச் செடிகளை, குருவிகள் அழிப்பதில் இருந்து பாதுகாப்பதற்காக பிரேஸில்நாட்டில் செடிக ளின் மேல் தெளிக்கப்படும் இராசயன மருந்து மிகவும் ஆபத்தானது. இந்த மருந்தின் தாக்கம் சோயாவில் இருந்து தயாரிக்கும் ´Tofu' விலும் கண்டறியப் பட்டிருக் கிறது” என்பது சமீபத்திய ஆய்வு அறிக்கை. அப்படி யாயின் புடலங்காய், பயித்தங்காய், முருங்கைக்காய், பாவற்காய் என்று பிளேன் ஏறி எங்களிடம் வந்து சேரும் மரக்கறிகளுக்கு என்னென்ன உரங்களைப் போட்டிருப்பார்கள்? அவற்றால் உடலுக்கு எந்தவிதமான தாக்கங்கள் வருகின்றன என்ற கேள்விகள் எழுகிறது. ஆனாலும் அதைப் பற்றியெல்லாம் நாங்கள் கவலைப் படுவதேயில்லை.*

*வியாழக்கிழமை தமிழ்க்கடைக்குப் போனால் fresh ஆக மரக்கறிகள் வாங்கலாம் என்பது அனேகமாகன யேர்மனியப் புலம்பெயர் தமிழர்களின் மூளைக்குள் பதியப்பட்டு விட்டது. தமிழ்க்கடை என்றால் ஊரின் நினைவு வரவேண்டாமோ? ஊரில் கிராமங்கள் தோறும் உள்ள பெட்டிக் கடைகளில், கோபால் பற்பொடி, தேயிலை, பொரித்த கடலைப்பருப்பு, எள்ளு உருண்டை போன்ற பல பொருட்கள் பக்கெற் பக்கெற்றாகத் தொங்குமே! ஏறக்குறைய அதே பாணியில்தான் இங்கே ஐரோப்பாவில் அனேகமான தமிழ்க்கடைகள் தங்களை வடிவமைத்திருக்கின்றன.*

*கடைக்குள்ளே போனால், முதலாளி யாருடனோ தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருப்பார். அல்லது கைத்தொலைபேசியை நோண்டிக் கொண்டிருப்பார்.*

இதில் அவரது தொலைபேசி உரையாடல் இருக்கே அது எப்போதுமே *full volume* தான்.

கடைக்குள் பெட்டிபெட்டியாக இருக்கும் மரக் கறிகளை ஓரளவு அவதானித்து எடுத்து விடலாம். பச்சைமிளாகாயில்தான் கொஞ்சமாகத் தடுமாற்றம்வரும். முதற்கிழமை மிஞ்சிய, காம்புப்பக்கம் சாடையாக கறுத்து நசிந்து அழுது கொண்டிருக்கும் பச்சை மிளகாய்களையும் புதியவைகளோடு சாமர்த்தியமாகக் கலந்து விட்டிருப் பார்கள். அதை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்க்க நேரம் எங்கே இருக்கிறது? அள்ளிப் போட்டு வங்கிக் கொண்டு போய் வீட்டிலும் வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் இருக்கு.

உள்ளே இருப்பதைக் கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் தேங்காயின் ஓடு இவ்வளவு கடினமாக இருக்கிறதோ என்று நான் சில சமயங்களில் நினைப்பதுண்டு.

“தேங்காய் எப்பிடி நல்லதோ?” என்று ஒரு தடவை கடை முதலாளியிடம் நான் கேட்ட போது, “அது, அவனவனுக்குப் பெண்சாதி வாய்ச்ச மாதிரி” என்று அவர் ஒரு அற்புதமான பதிலைத் தந்து என்னை நிறையவே கவலைப் பட வைத்து விட்டார்.

எங்கள் நாட்டுக் கடலில் பிடிபடும் மீன்கள் செத்தாலும் வீரியம் மிக்கவை. அவைகளை ஒருநாளும் பக்கெற்றுக்குள் அடைத்து வைக்க முடியாது. கடைக்குள் உள்ள குளிர்சாதனப்பெட்டிக்குள் அவை துள்ளிக்குதித்து பக்கெற்றை விட்டு வெளியே வந்து ஐஸ் படிந்து விறைப்பாகவே இருப்பதைப் பார்த்தாலே தெரியும்.

சரி விடயத்துக்கு வருகிறேன்.

எனது நகரில் இருக்கும் தமிழ்க்கடைக்கு போன கிழமை போயிருந்தேன். எனக்கான மரக்கறிகளை எடுத் துக் கொண்டு முதலாளியிடம் காசு கொடுக்கப் போகும்

போதுதான் நான் முதல் நாள் வாங்கிய வெங்காயம் என் நினைவுக்கு வந்தது. மலிவாக இருக்கிறதென்று *Super market* இல் இரண்டரைக் கிலோ வெங்காயம் 89 சென்ற்ஸுக்கு வாங்கியிருந்தேன். “எதுக்கு இவ்வளவு?“ என்று வீட்டில் ஒரு பார்வை பார்த்த போது, “சீனிச் சம்பல் செய்யலாம்” என்ற சமாளிப்போடு தப்பி விட் டேன்.சீனிச்சம்பலுக்கு மாசிக்கருவாடு போட்டால் அதன் ருசியே தனி.

“தம்பி மாசிக்கருவாடு இருக்கே?”

“மாசிக்கருவாடோ? முடிஞ்சுதெண்டு நினைக்கி றன்” சொல்லிக் கொண்டே நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்த முதலாளிக்கு என்னவோ சட்டென்று மனதில் தோன்றியிருக்க வேண்டும். “பொறுங்கோ கீழை இருக் குதோ எண்டு பாத்திட்டு வாறன்”

போனவர், ஒரு கொர்லிக்ஸ் போத்தலுக்குள் இருந்த மாசிக்கருவாட்டுத் துகள்களுடன் வந்தார்.

“உங்களுக்கு அதிர்ஷ்டம் இருக்கண்ணை. ஒரு போத்தல் இருக்கு”

எனக்கான அதிர்ஷ்டம் ஒரு போத்தலுக்குள் இரு ந்த மாசிக்கருவாட்டுத்துகள்களுக்குள் அடங்கிப்போனதில் சற்றுக் கவலை இருந்தாலும் சிரித்துச் சமாளித்தேன்.

முதலாளி மேசையில் வைத்த எனது ‘அதிர்ஷ்ட’ மாசிக் கருவாட்டுப் போத்தலை எதேச்சையாக நான் பார்த்தபோதுதான் அதுசொன்னது, *use before 08.11.2018* என்று.

“தம்பி, கருவாடு செத்து ஒரு வருசத்துக்கு மேலாச்சுது போலை”

“செத்தால்தான் அண்ணை கருவாடு. உயிரோடு இருந்தால் அதுக்குப் பேர் மீன்” முதலாளி அல்லவா.

*பேச்சு அந்த மாதிரி.*

*"டேற் முடிஞ்சுது. 2018 எண்டு போட்டிருக்கு"*

*"ஊரிலை கருவாட்டுக்கு expiry date இருக்கே? இஞ்சை எல்லாத்துக்கும் ஒரு date போடுவாங்கள். சாமான் பழுதில்லை நம்பிக்கையா கொண்டு போங்கோ. இதுன்ரை விலை ஆறு யூரோ. உங்களுக்கு நான் நாலு யூரோ போடுறன்"*

*மலிவு வெங்காயத்துக்கே வீட்டில் ஒரு பார்வை கிடைச்சிருக்கு. ஊசிபோன மாசிக் கருவாட்டுக்காக இன்னொரு பார்வையை எதுக்கு வில்லங்கத்துக்கு வாங்குவான்?*

*"வேண்டாம் தம்பி"*

*முதலாளிக்கு சற்று கோபம் வந்திருக்க வேண்டும். அவரது பார்வை மாறியிருந்தது. அவரைச் சமாளிப்பதற்காக, "நீங்கள் expiry date முடிஞ்சதை கடையிலை வைச்சிருக்கிறதாலை பிரச்சினைகள் வரலாம். கவனம்" என்றேன்.*

*"பிராங்போர்ட்டிலை வேண்டின இடத்திலை இதைக் கொண்டுபோய் திருப்பிக்குடுத்தால் புது லேபிள் ஒட்டி புது expiry date அடிச்சுத் தருவாங்கள். அப்ப சிலநேரம் விலை ஏழு யூரோவா இருக்கும்" சொல்லிக் கொண்டே மாசிக் கருவாட்டுப் போத்தலை பத்திரமாக தன் மைசைக்குக் கீழே வைத்தார்.*

*தமிழ்க்கடையை விட்டு வெளியே வரும் போது 'இந்த வெங்காயத்தை என்ன செய்யலாம்?" என்று என்னைப் பற்றியே யோசித்துக் கொண்டே வந்தேன்.*

***25.02.2018***

# காணி நிலம் வீடு

*சின்னச் சின்னத் தீவுகள்போல் திட்டுத் திட்டாக அவனது கைகளில் அங்கங்கே வீக்கங்கள் தெரிந்தன.*

*எனது பார்வையின் கேள்வியை கணேசன் புரிந்து கொண்டான்.*

*‘‘கிட்னி பெயிலியர் மச்சான். மூன்று நாளுக்கு ஒருக்கால் டயாலிசிஸ் செய்ய வேண்டி இருக்குது. அதனாலை வந்த வீர வடுக்கள்’’*

*நீண்ட நாட்களுக்குப் பிறகு.... இல்லை நீண்ட வருடங்களுக்குப் பிறகு என்பதுதான் சரியாக இருக்கும் அவனை அப்படிப் பார்த்ததில் மனது சிரமப்பட்டது. எனது சங்கடம் அவனுக்கு விளங்கி இருக்கும்.*

*‘‘கிட்னி மாத்திறதுக்கு ஏற்கெனவே கனக்க யேர்மன்காரங்கள் காத்திருக்கிறாங்கள். எங்கள் தரவளி களுக்கு இஞ்சை கிடைக்க வாய்ப்பேயில்லை. ஊரிலை பாக்கலாமெண்டால் ,,காசைத் தந்திட்டு பெட்டியைக் கட்டிக்கொண்டு போ. கிட்னி சட்னி எல்லாம் கிடைக் காது‘‘ எண்ட மாதிரித்தான் பேச்சு இருக்குது’’*

*கதைத்துக் கொண்டு இருக்கும் போதே அவசரப் பட்டான். ‘‘நேரம் போகுது மச்சான். டயாலிசிஸ்க்கு நாலு மணித்தியாலங்கள் தேவை. அதை முடிச்சிட்டுத் தான் வேலைக்குப் போக வேணும். முடிஞ்சால் பிறகு சந்திப்பம்’’*

*பதினைந்து வருடங்களுக்கு முன்பு அவனுக்கு குழந்தை பிறந்திருந்தபோது பரிசுகள் வாங்கிக் கொண்டு எனது குடும்பத்தோடு பார்க்கப் போயிருந்தேன். நாங் கள் வருவதை அவனுக்கு அறிவித்திருந்தாலும் ஏனோ தானோ என்றுதான் வரவேற்றான். பொதுவாக கணேசன் தன்னுடைய வீட்டுக்கு யாரையும் அழைப்ப தில்லை. ‘‘வாற போற ஆக்களுக்கு தேவையில்லாமல்*

*சமைச்சுப் போட்டு காசை ஏன் கரியாக்க வேணும்'' என்ற பரந்த உள்ளம் அவனுக்கு இருந்தது.*

*மதியம் சாப்பாடு தந்தான்.. சாப்பிட்டு விட்டு கை கழுவும் போதுதான் பார்த்தேன் குழாயில் இருந்து தண்ணீர் சிந்திக்கொண்டிருந்தது. சிந்தும் நீரெல்லாம் ஒவ்வொரு துளியாக ஒரு பிளாஸ்ரிக் பாத்திரத்தில் ஒன் றாகி ஐக்கியமாகிக் கொண்டிருந்தன.*

*''கணேசா பாத்ரூமுக்குள்ளை தண்ணி சிந்துது. கவனிக்கேல்லையோ?''*

*''அது நானாத்தான் சிந்த விட்டனான். இப்பிடி துளித் துளியா சிந்தினால் மீற்றர் ஓடாது. இதை வைச்சுத்தான் எங்கடை தண்ணித் தேவைகளை முடிக்கிறனாங்கள்''*

*சூரியவெளிச்சமே வராத நிலத்தடிவீடு. குறைந்த வாடகை . துளித் துளியாக தண்ணீர் சேகரிப்பு. இப்படி இன்னும் எத்தனை வழிகள் இருந்தனவோ அத்தனை வழிகளிலும் கணேசன் காசை மிச்சம் பிடித்தான்.*

*''என்ன பாக்கிறாய்? ஊரிலை தென்னந் தோப் போடை காணி வாங்கி இங்கத்தைய ஸ்ரைலிலை வீடு ஒண்டு கட்டுறன். காசு வேணுமெல்லே''*

*''வீடு கட்டுறதுக்கு யாரைப் பொறுப்பா விட்டிருக்கிறாய்?*

*''மனுசியின்ரை தமையன் அங்கை இருக்கிறார். ஆள் பார்த்துக் கொள்ளும்''*

*இன்று கணேசனைப் பார்த்த பிறகு, நாள் முழுதும் அவன் நினைவுதான். கூடவே 'அந்தக் காணியும், தென்னந்தோப்பும், வீடும் இனி என்னவாகும்' என்ற கேள்வியும் ஏனோ வந்தது.*

***20.10.2018***

# பிழைக்கத் தெரிந்தவள்

*நீண்ட நாட்களுக்குப் பின் சரஸ்வதி ரீச்சரைச் சந்தித்தேன். கையில் பூங்கொத்து வைத்திருந்தார்.*

*அவரது உடலில், பேச்சில் தளர்வு தெரிந்தது.*

*சரஸ்வதி ரீச்சர் பிரதான புகையிரத நிலையத்தில் பூக்கடை நடாத்தி வருகிறார். கடையில் காலையில் இருந்து இரவு வரை வியாபாரத்தைக் கவனிக்க வேண்டி இருப்பதால் அவரை வெளியிடங்களில் காண்பதரிது.*

*" எப்பிடி இருக்கிறீங்கள்?"*

*"என்னத்தைச் சொல்ல..." சரஸ்வதி ரீச்சரின் வார்த்தைஇழுப்பில் அவரிடம் இருந்த அலுப்பு தெரிந்தது.*

*ஆனாலும் நான் கேட்டதுக்கு அவர் உடனேயே பதில் தந்தார்.*

*"கை கொஞ்சக்காலமா விறைக்குது. ஒத்தோப் பேடியிட்டைப் (முறிவு வைத்தியர்) போறன்"*

*" Carpal tunnel பிரச்சினையாக இருக்கலாம்'*

*"அப்பிடித்தான் டொக்டரும் சொல்லுறார். எதுக்கும் முதலிலை Bandage போட்டுப் பார்ப்பம். சரிவரேல்லையெண்டால் ஒப்பரேசன் செய்யத்தான் வேணும்"*

*"அதென்ன கையிலை பூங்கொத்து?"*

*"அது பெரியகதை. போனவருசம் முழங்காலிலை நோ வந்திட்டுது. ஒத்தோப்பேடிக்கு ரெலிபோன் அடிச்சால் இப்ப அப்பொயின்ற்மென்ட் தரேலாது, ஒன்றரை மாசம் பொறுங்கோ எண்டு சொல்லிச்சினம்.*

*நோவோடை எப்பிடி இருக்கிறது?*

*தாங்கேலாமல் நேரே ஒத்தோப்பேடியிட்டைப் போயிட்டன். அப்பொயின்ற்மெண்ட் உள்ளாக்களுக்குத் தான் முன்னுரிமை எண்டு சொல்லி இரண்டு மணித்தியாலமா என்னைக் காக்க வைச்சினம். யோசிச்சுப் பாத்திட்டு அடுத்தமுறை போகக்கை கடையிலை இருக்கிற பூக்களிலை கொஞ்சத்தைஎடுத்து, கொத்தாக் கட்டிக் கொண்டு போய்க் குடுத்திட்டு முழங்காலிலை நோ எண்டு சொன்னன்.*

*இராஜமரியாதை. இப்ப ரெலிபோன் அடிச்சுக் கேட்டால் யார் சரஸ்வதியோ? என்ன பிரச்சினை? உடனை வாங்கோ எண்டினம்"*

*கொடுத்து வேலை வாங்கும் விசயத்தை நாங்கள் யேர்மனியனுக்கும் பழக்கிப்போட்டம்.*

***29.06.2018***

# தேரு பார்க்க வந்திருக்கும் சித்திரப் பெண்ணே!

'ஹம்' தேர்த் திருவிழாவுக்குப் போய்விட்டு வந்த கோகிலாவின் முகத்தில் மகிழ்ச்சியைக் காணவில்லை.

"நாளைக்கு 'ஹம்'முக்குப் போறம். செவ்வாய்க் கிழமைதான் இனி வேலைக்குவருவன். மூன்று நாளைக்கு இந்த வேலை அலுப்பில்லை" என்று சந்தோசமாக வெள்ளிக்கிழமை சொல்லி விட்டுப் போனவளுக்கு என்ன நடந்திருக்கும். வீட்டில் பிரச்சினையா? நீண்ட தூரம் காரில் பயணித்ததால் வந்த களைப்பா? ஏதாவது சுகயீனமா? என்று கவிதா தனக்குள் பல கேள்விகளைக் கேட்டுப் பார்த்தாள்.

அன்று வேலை இடத்தில் அதிக வேலை இருந்ததால் கோகிலாவிடம் நெருங்கிப் போய் கேட்க கவிதாவால் முடியவில்லை. மதிய இடைவேளைக்கு சாப்பிட வருவாள்தானே அப்பொழுது கேட்கலாம் என்று தனது ஆர்வத்தை அவள் அடக்கிக் கொண்டாள்.

மதிய இடைவேளையில் அன்றும் கன்ரீன் நிறைந் திருந்தது. கோகிலா எங்கே இருக்கிறாள் என்று தேடிய கவிதாவுக்கு, கோகிலா தனியாக இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது வசதியாகப் போனது. யாராவது அவ ளுக்குப் பக்கத்தில் அமர்ந்து விடுவார்களோ என்ற அச்சத்துடன் ஓடிப் போய் கோகிலாவுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

"என்னடி கோயிலுக்குப் போட்டு வந்தால் மனசு சுகமாயிடும் எண்டு சொல்லுவினம். உனக்கு என்ன நடந்தது?"

"ஏதோ கடவுள் குற்றம் போலை"

"ஏன்? அப்பிடி என்ன?"

*“நான் கேட்டு ஒரு நாளும் மனுசன் மாட்டன் எண்டு சொல்ல மாட்டார். அப்பிடித்தான் அந்த நெக்லஷையும் நான் கேட்ட உடனையே வாங்கித் தந்திட்டார். நகைகளை எல்லாம் பாங்கிலைதான் வைக்கிறனான். அண்டைக்கெண்டு என்ன கஸ்ர காலமோ, ஹம்முக்குப் போகேக்கை அந்த நெக்லஸை பாங்கிலை இருந்து எடுத்துப் போட்டுக் கொண்டு போனனன். கழுத்திலை இருக்கிற மற்ற நகைகளை விட் டிட்டு அந்த நெக்லஸை மட்டும் குறி வைச்சு அடிச் சிட்டாங்கள்”*

*“ஹம்மிலை நடந்ததோ?”*

*“கனபேரின்ரை நகைகள், பேர்ஸுகள் எல்லாம் அடிச்சிட்டாங்கள் எண்டு கதைச்சினம்”*

*“நகைத் திருட்டு இல்லையெண்டால் அது திரு விழாவா இருக்காது. ஊரிலை இருக்கிறதைப் போலவே எல்லாமும் இஞ்சையும் இருக்க வேணுமெல்லே. உங்க ளிட்டை இல்லாத காசே. உன்ரை மனுசனைக் கேட் டால் இன்னொரு நெக்லஸ் உடனையே வாங்கித் தருவார்”*

*“தேருக்குப் போனால் சாமியைக் கும்பிடுறது தானே, எதுக்கு தேர்மாதிரி அள்ளிப் போட்டுக்கொண்டு போனனீ எண்டு மனுசன் திட்டிப் போட்டு வேலைக்குப் போட்டார். சனிமாற்றம் எனக்கு நல்லா வேலைசெய்து”*

*“வேலையிடத்திலை லீவு கிடைக்கேல்லை. தேருக்கு வரேலாது, மன்னிச்சுக் கொள் எண்டு அம்மன் இருக்கிற பக்கமாப் பாத்து கும்பிட்டு, சாமியிட்டை மன் னிப்புக் கேட்டதாலை தப்பிட்டன். இல்லையெண்டால் என்ரை நகையையுமெல்லே அடிச்சிருப்பாங்கள்” கவிதா மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.*

***05.07.2018***

# நேரம் நல்ல நேரம்

*குமாரசாமி அண்ணன் வேலையில் இருந்து ஓய்வு எடுத்துப் போனதன் பிறகு நீண்ட நாட்களுக்குப் பின் அவரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.*

*“பென்சன் எடுத்தாப் போலை எப்பிடி நேரம் போகுதண்ணை?”*

*“வேலை செய்யிற ஆக்கள், பென்சன் எடுத்த ஆக்களைப் பிடிச்சுக் கேக்கிற வழக்கமான கேள்வி தான்டா இது”*

*“இல்லை அண்ணை, வேலை வேலை எண்டு ஓடிக் கொண்டிருந்தீங்கள். பென்சன் எடுத்தாப்போலை நேரம் போறது கஸ்ரமா இருக்குமெல்லே”*

*“உனக்கு விளக்கம் பத்தாது. சொல்லுறன் கேள். போனகிழமை மனுசியோடை shopping center க்குப் போனன். ஐஞ்சு நிமிசம்தான். திரும்பி வாறன் கார் பிழையான இடத்திலை பார்க் பண்ணியிருக்கு எண்டு பொலீஸ்காரன் fine எழுதிக் கொண்டிருக்கிறான்.*

*“உங்களுக்கு இதுவே வேலையாப் போச்சு. மனுசன் ஆத்திரமந்தரத்துக்கு ஒரு ஐஞ்சு நிமிசம் கூட கார் பார்க் பண்ணக் கூடாது. உடனை எழுதிப் போடுங்கோ. பென்சன் எடுத்த ஆக்களைப் பத்தி கொஞ்சமாவது யோசிச்சுப் பாக்கோணும். இரண்டு யூரோவுக்கு சாமான் வேண்டிட்டு வந்து அவையளாலை இருபது யூரோ fine கட்ட முடியுமே?”*

*நான் அப்பிடிச் சொல்ல, என்னை மேலையும் கீழையும் பாத்திட்டு ஒரு அசுமாத்தமும் காட்டாமல் பொலீஸ்காரன் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறான். எனக்கு வந்த கோவத்துக்கு “கொழுத்த பண்டி” எண்டு திட்டிப் போட்டன். அவன் அதுக்கும் ஒரு கதையுமே கதைக்காமல் “கார் ரயர் நல்லா தேய்ஞ்சு போய் இருக்கு இதுக்கு இன்னுமொரு பைன் போடவேணும்”எண்டு*

*திரும்ப ஒரு பைன் எழுதத் தொடங்கினான்.*

*அவன் இரண்டாவது பைன் எழுதி முடிக்கக்கை “இவங்களுக்கு கொம்பு முளைச்சிட்டுது” எண்டு என்ரை மனுசி சைகையாலை காட்டினாள். கோதாரி விழுவான் அதைக் கண்டிட்டான். திரும்ப எழுதத் தொடங்கினான். ”இப்ப என்ன எழுதுறாய்” எண்டு கேட்டன். “கன நேரம் பார்க் செய்ததுக்கு இரண்டாவது பைன்” என்றான். சரி எவ்வளவுதான் எழுதுறான் பாப்பம் எண்டு நான் பேசாமல் நிண்டன். அவன் எல்லாத்தையும் எழுதி முடிச்சிட்டு வைப்பரைத் தூக்கி அதுக்குள்ளை எழுதின துண்டுகளைச் செருகினான். அவன் எவ்வளவு எழுதியிருப்பான் எடுத்துப் பாக்கலாம் எண்டு யோசிக் கக்கை, நான் போக வேண்டிய பஸ் வந்து நிக்குது. அதை விட்டால் இன்னும் ஒரு அரை மணித்தியாலம் அடுத்த பஸ்ஸுக்கு காத்துக் கொண்டிருக்க வேணும். பேசாமல் மனுசியை இழுத்துக் கொண்டு வந்து பஸ் ஸிலை ஏறிட்டன். அவனோடை சண்டை போட்டதிலை எனக்கு இருபத்தஞ்சு நிமிசம் போட்டுது”*

*எனக்குக் கதை சொன்னதில் குமாரசாமி அண்ண னுக்கு இன்னும் கொஞ்ச நேரம் போயிருக்கும்.*

***12.07.2018***

# *மாலை சூட வா*

*அந்த இளைஞனோடு கதைத்துக் கொண்டிருக் கும் போது எண்பதுகளுக்கே போய் விட்டேன்.*

*ராஜீவ் காந்தியும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போது யேர்மனிக்குப் புலம்பெயர்ந்து வந்தவர்களிடம் ஒரு சலசலப்பு இருந்தது.*

*“அனுப்பிப் போடுவாங்கள் போல இருக்கு”*

*“ஏஜென்சிக்குக் கட்டின காசு அம்போ”*

*“காணி வித்து அம்மா அனுப்பினவ. எப்பிடிப் போய் அவவின்ரை முஞ்சையிலை முழிக்கிறது?”*

*ஆளாளுக்கு இப்படித்தான் ஆற்றாமையைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.*

*ஆனால் தங்கள்நாட்டில் பிரச்சனைகள் எதுவுமே இல்லாமல் அகதிகளாக யேர்மனிக்குள் வந்த பாக்கிஸ் தானியர்கள் சந்தோசமாகவே இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென்றொரு வழியை வைத்திருந்தார்கள். அது paper marrige. பணத்தைக் கொடுத்து ஒரு யேர்மனியப் பெண்ணையோ, ஐரோப்பியப் பெண்ணையோ மணந்து கொண்டு விசாவைப் பெற்றுக் கொள்வது.*

*சிலர் யேர்மனியப் பெண்களைக் காதலித்துத்(?) திருமணம் செய்து கொண்டார்கள். இத்தனைக்கும் அவர்களுக்கு அவர்களது நாட்டில் மனைவி குழந்தைகள் இருந்தார்கள். விசா கிடைத்து, பணமும் சேர்ந்த பின் னர் ‘கழண்டு விடுவார்கள்’.*

*என்னை முப்பது வருடங்களுக்குப் பின்னாடி கொண்டு சென்ற இளைஞன் சொன்னது இதுதான்.*

*“ரிஜெக்ட் பண்ணிப் போட்டாங்கள் அங்கிள். வேறு வழியில்லை கலியாணம் கட்டத்தான் இருக்கு”*

*எண்பதுகளில் இருந்து திரும்பி வந்தேன்.*

*“யாரைக் கலியாணம் கட்டப்போறீர்?”*

*“ஹம்பேர்க்கிலை, இஞ்சை பிறந்து வளர்ந்த பொம்பிளை. அவ வேலை செய்யிறா எண்டு மாமா சொன்னவர்“*

*“நீர், நாட்டிலை இருந்து இப்ப வந்தனீர். அந்தப் பிள்ளை இஞ்சை வளர்ந்தது. பழக்க வழக்கங்களிலை பின்னாலை பிரச்சனை வரலாம்.”*

*“இருப்பு முக்கியம். அதுக்கு விசா முக்கியம்”*

*“அப்போ கலியாணம் விசாவுக்காகத்தான்”*

*இளைஞன் உதட்டில் ஒரு புன்னகை தெரிந்தது.*

***18.02.2018***

# குண்டுச் சட்டியும் குதிரை ஓட்டமும்

ஒரு சனிக்கிழமை கட்டுமானக் கடை ஒன்றில் எனக்குத் தேவையான பொருள் ஒன்று வாங்கச் சென்றிருந்தேன். பெரிதாக ஒன்றும் இல்லை. சமைய லறைத் திரைச்சீலை தொங்க விடுவதற்கான ஒரு `கிளிப்' தான் எனக்குத் தேவைப்பட்டது. நான் தேடிய கிளிப் அங்கே இருந்தது. எனக்குத் தேவைப்பட்டதோ ஒன்றுதான். ஐந்து, பத்து என்றிருந்தால் பரவாயில்லை. ஆனால் அங்கிருந்த கிளிப்புகளோ ஐம்பது சேர்ந்த பொதியாக கடைத்தட்டில் அழகான பெட்டி ஒன்றுக்குள் அடக்கமாக அமர்ந்திருந்தன. அவ்வளவையும் வாங்கி என்ன செய்வது?

வேறேதாவது தட்டுக்களில் தனியாகத் தட்டுப் படலாம் என்ற நம்பிக்கையோடு கடையை வலம் வந்து கொண்டிருந்தேன். பொருட்கள் எல்லாம் அவையவைக் கான தளங்களில் அழகழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந் தன. வலம் வந்து கொண்டிருந்த எனக்கு தூரத்தில் இருந்த ஒரு தளத்தில் உயரமான ஏணியில் நின்று பொருட்களை அடுக்கிக் கொண்டிருக்கும் உருவம் ஒன்று தட்டுப் பட்டது.

பார்த்தவுடன் விளங்கிக் கொண்டேன். ,,அவர் நம்ம ஆள்தான்' என்று.

சரி. அவரிடம் நலம் விசாரித்து, நான் தேடும் கிளிப்பைப் பற்றியும் கேட்டுப்பார்க்கலாம் என்ற நோக்கு டன் அவர் இருக்கும் இடத்தை நோக்கிப் போனேன்.

,,அண்ணை தமிழோ?'

,,ஓமோம்'

சொன்னவர் ஏணியை விட்டு இறங்கி வந்தார்.

*வந்தவர் கேட்க ஆரம்பித்தார்.*

*„உங்களை நான் ஒருநாளும் சந்திக்கேல்லை. புதுசா இந்த நகரத்துக்கு வந்தனீங்களோ?'*

*„இல்லை நான் கனகாலமா இங்கைதான் இருக்கிறன்'*

*„அப்பிடியே. நான் ரண்டு வருசமா இங்கை இருக்கிறன் ஒரு நாளும் காணேல்லை'*

*நான் முப்பது வருசமா இங்கேதான் குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்ல விளைந் தேன். ஆனால் சொல்லவில்லை. கேள்வியை திசை மாற்றினேன்*

*„இந்தக் கடைக்கு கனதரம் வந்திருக்கிறன். உங்களைப் பாக்கேல்லை'*

*„இப்பதான் மூன்று கிழமையா வேலை செய்யிறன்'*

*„ஆ நல்லது'*

*'நீங்கள் ஊரிலை எந்த இடம்?'*

*ஊரைச் சொன்னேன்.*

*„நான் அங்கை வந்திருக்கிறன். கோட்டு வாசல் அம்மன் கோவிலுக்கு அடிக்கடி வாறனாங்கள்'*

*அர்ச்சகராக இருக்குமோ என்ற எண்ணம் தோன்றியது.*

*„கடவுள் கோயில் இரண்டிலும் இருந்து நான் கொஞ்சம் தள்ளி இருக்கிற ஆள்'*

*„ஏன் நாத்திகரோ? நாங்கள் பூசைக்கு நாதஸ் வரம் வாசிக்கிறதுக்கு அங்கை வாறனாங்கள்'*

அவர் நாதஸ்வரம் என்ற சொல்லை உச்சரித்ததும் நண்பர் ஒருவர் என்னிடம் சொல்லி வைத்தது நினைவுக்கு வந்தது.

எனது நண்பர் தனது மகனின் திருமணத்தை அடுத்த வருடம் செய்வதற்குத் தீர்மானித்து இருக்கிறார். அதற்கு „நாதஸ்வரம் இருந்தால் நல்லது. யாரையாவது தெரிந்தால் சொல்லுங்கள்" என்று என் னிடம் சொல்லி வைத்திருக்கிறார். இப்போ கையில் வெண்ணை கிடைத்திருக்கிறது. இங்கே எனக்கு முன்னால் நாதஸ்வரம் ஒன்று சிரித்துக் கொண்டிருக்கிறது.

„இஞ்சை வேலை கொஞ்சம் கஸ்ரம்' எனது நாதஸ்வரச் சிந்தனையை அவர் கலைத்தார். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவரே தொடர்ந்தார்.

„நாலு மணித்தியாலம்தான் வேலை. ரக்ஸ் அது இது எண்டு கழிச்சு ஒரு சனிக்கிழமைக்கு முப்பது முப்பத்தைஞ்சு யூரோதான் கிடைக்கும்'

„இப்பிடியான வேலைக்கு இதுக்கு மேலை தரமாட்டாங்கள். வீட்டிலை சும்மா இருக்கிறதுக்கு இது பரவாயில்லைத் தானே?'

„எங்கை சும்மா இருக்கிறதுக்கு நேரம்? ஆராவது கலியாண வீட்டுக்குக் கேட்டால் நாதஸ்வரம் வாசிக்கப் போயிடுவம். இந்தக் கிழமை ஒண்டும் இல்லாததாலை இஞ்சை நிக்கிறன்.

பழம் நழுவுகிறது. பாலில் விழப் போகிறது. அந்த உணர்வு எனக்கு வந்திருந்தது. விட்டால் அவர் தனது புலம்பலுக்கான கச்சேரியை வாசிக்க ஆரம்பித்து விடுவார். நானே முந்திக் கொண்டேன். அடுத்த வருடம் நடக்க இருக்கும் எனது நண்பனின் மகனின் திருமணத்தைப் பற்றிச் சொன்னேன்.

„ஒரு பிரச்சினையும் இல்லை. எப்ப நாளெண்டு

நேரத்துக்குச் சொல்லிப் போடுங்கோ'

எந்த நாள் திருமணம் என்று நண்பரிடம் கேட்டுச் சொல்வது எனக்கு பிரச்சினையாக இருக்காது. ஆனால் நாதஸ்வரம் வாசிப்பதற்கு அவர்கள் எவ்வளவு வாங்குகிறார்கள் என்பது தெரிந்தால் நண்பருக்குச் சொல்லலாம் என்ற எண்ணம்.

„எவ்வளவு காசு எண்டதை சொன்னீங்க ளெண்டால்...'

„ஒரு கலியாணத்துக்கு நாங்கள் 1200 யூரோ வேண்டுறனாங்கள்' சொல்லி விட்டு என் முகத்தைப் பார்த்தார்.

தொகை நாலு இலக்கத்தில் வந்ததும் எனக்கு கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. மூன்று வருடங் களுக்கு முன்னர் நாதஸ்வரத்துக்கு 350 கொடுத்ததாக இன்னும் ஒரு நண்பர் என்னிடம் சொல்லி இருந்தார். மூன்று வருடத்துக்குள் இவ்வளவு மாற்றமா? அல்லது எனது முகத்தில் ஏதாவது எழுதி வைத்திருக்கிறதா? எனது அதிருப்தியை உடனேயே சொன்னேன்.

„நான் நினைக்கிறன் உங்கடை ரேற் கூட எண்டு. நான் அறிய ஒரு கலியாணத்தக்கு 350க்கு வந்து வாசிச்சவையள்'

„அப்பிடி எண்டால் அது ஒரு செற்றா இருக்கும். நாங்கள் ரண்டு செற்'

„ஒரு கலியாணம்தானே ஒரு செற் போதும் தானே'

„ஓகே அப்பிடி எண்டால் ஐநாறுக்கு வாசிக்கி றம். அதுவும் உங்களுக்காக. இப்ப நாங்கள் ஒரு ஊர்க் காரராயிற்றம் பாருங்கோ'

350க்கு நாதஸ்வரம் வாசித்தார்கள் என்கிறேன். இவரோ எனக்காக ஐநூறுக்கு வாசிக்கலாம் என்கிறார்.

*பத்து நிமிசத்திற்கு முன்னாடி சந்தித்தவருக்கும் என்னைப் பற்றி உடனேயே விளங்கி விடுகிறது.*

*எனது மௌனம் அவரைப் பேச வைத்தது.*

*„மாப்பிளை அழைப்பில் இருந்து தாலி கட்டுற வரைக்கும் நாலு மணித்தியாலத்துக்கு வாசிப்பம். 500 குடுத்தால் போதும். சந்தோசத்துக்கு வேணுமெண்டால் ஒரு மணித்தியாலம் எக்ஸ்ரா சும்மா வாசிச்சிட்டுப் போறம்'*

*எனது குரங்குப் புத்தி உடனேயே கேட்டு வைத்தது.*

*„எக்ஸ்ரா சும்மா வாசிக்கிறதைப் பற்றிச் சொன்னிங்களே. அதை மட்டும் வாசிச்சுப் போட்டு போனால் என்ன?'*

*கண்ணகியே பார்க்காத பார்வை அது. அன்பர் ஏணியில் ஏறி தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.*

*திரைச்சீலைக்கான கிளிப் என் நினைவுக்கு வர உதிரியாகக் கிடைக்குமா எனத் தேட ஆரம்பித்தேன்.*

***10.10.2014***

# இல்லாமை நீங்க வேண்டும்

*யேர்மனியில் செப்ரெம்பரில் நடந்து முடிந்த தேர்தலில், ஆளும்கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்க வில்லை. தேர்தலில் எதிரும் புதிருமாக நின்றவர்களும் வெவ்வேறு கோரிக்கைகளை வைத்து தேர்தலில் போட்டியிட்டவர்களும் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க வேண்டிய சூழ்நிலைதான் இறுதியில் உருவாகி இருக்கி றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்துதல், குடும்பங்களுக்குத் தேவையான உதவி கள், சிறார்களின் வாழ்க்கைத்தரம், முதியவர்கள் பரா மரிப்பு... எனப் பலவிடயங்களில் உடன்பாடு காண்பதில் கட்சிகள் இழுபறிபட்டுக் கொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகள் இப்படி இழுபறி பட்டுக்கொண்டு இருக்கையில் 'யேர்மனியில் ஐந்தில் ஒரு குழந்தை வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறது, ஓய்வூதியம் போதாததால் முதியவர்கள் வறுமையில் வாடுகிறார்கள் என சமீபத்திய கணிப்பு வெளியாகி இருக்கிறது. இந்த நிலையில் சமீபத்தில் நடந்து முடிந்த வழக்கொன்று ஊடகங்களில் முக்கியத் துவம் பெற்றிருக்கிறது.*

*அவர் பெயர் இங்கிறீட். ஒரு தையல்காரராக வேலை பார்த்து ஓய்வு பெற்ற அந்த மூதாட்டிக்கு வயது 84. பல்பொருள் அங்காடி ஒன்றில் உணவுப் பொருட் களை ஐந்து தடவைகள் களவாடியதாக அவர் மேல் வழக்கு ஒன்று பதிவாகி இருந்தது. ஐந்து தடவைகளும் பல்பொருள் அங்காடியில் அவர் களவாடிய பொருட் களின் மொத்த மதிப்பு 70யூரோ 11 சென்ற்ஸ் மட்டுமே. இதில் அந்த மூதாட்டி களவாடி, கண்டுபிடிக்க முடியா மல் போனது எத்தனை தடவைகள் என்பது கணக்கில் இல்லை.*

*'எனக்கான பென்சனே மாதம் 800 யூரோக்கள் தான். இதில் வீட்டு வாடகை, தண்ணீர், மின்சாரக்*

*கட்டணங்கள், மருந்துச் செலவுகள் போக 100 யூரோக் கள்தான் மிச்சமாக எனது கையில் இருக்கும் போது சாப்பாட்டுக்கு நான் என்ன செய்வது? பென்சன் போது மானது என சமூகஉதவித்தொகையும் மறுக்கப் பட்டிருக் கும் நிலையில் எனக்கு வேறு வழி தெரியவில்லை. பட்டினியின் கொடுமையினால்தான் நான் களவாடி னேன். அதற்காக உண்மையில் நான் வெட்கப் படுகி றேன்' என நீதிமன்றத்தில் அவர் தெரிவித்திருக்கிறார்.*

*Bayern மாநிலத்தில் மெம்மிங்கன் என்ற இடத்தில் நடந்த இந்த சம்பவத்துக்கான வழக்கு இப்பொழுது முடிவுக்கு வந்திருக்கிறது. இங்கிறேட்டின் வயது மற்றும் சுகாதார மருத்துவம் போன்றவற்றை கருத்தில் கொண்டு அவருக்கு சட்டத்தின் கருணை கண்களைத் திறக்கும் என்று பலர் நம்பி இருந்த நிலையில் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை தந்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது.*

*உணவு திருடியதற்காக 84 வயதில் ஒரு மூதாட் டிக்கு இந்தத் தண்டனை வழங்குவது நியாயமாகாது எனப் பலரது விமர்சனங்கள் வந்திருக்கிறன. இப்படி யான நிலைமைகள் உருவாகாமல் பார்க்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்ற கருத்துகளும் வந்திருக் கின்றன.*

*சிறைக்குச் செல்லும் போது இங்கிறீட் சொன் னது இதுதான், „பட்டினியால் திருடினேன். அதற்காக நான் மிகவும் வெட்கப் படுகிறேன். நீதிமன்றத்தில் கருணை கிடைக்கும் என எதிர்பார்த்தேன். மாறாக சிறைத்தண்டனை கிடைத்தது, எனக்குத் தாள முடியாத சோகம்“*

*யேர்மனியில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தொகை ஏறக்குறைய 20 மில்லியன்கள். இதில் இங்கிறீட்டைப் போல குறைந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் தொகைதான் அதிகமாக இருக்கிறது. அரசியல் கட்சிகள் ஒவ்வொரு தேர்தலிலும் புள்ளி விபரங்களைச் சொல்லி சத்தமாகப் பேசிக் கொள்கிறார்கள். தேர்தலின் போது மேடைகளில்*

*ஊடகங்களில், தேர்தல் அறிக்கைகளில் சொன்னதை எல்லாம் ஆள வரும் போது மறக்காமல் நிச்சயமாக நிறைவேற்றி விடுவார்கள். ஆனால் மறுபக்கம் எரி பொருள், மின்சாரம், தண்ணீர், பயணக்கட்டணம், உணவுப்பொருட்களின் விலைகள் எல்லாம் சத்தமில் லாமல் சிறிது சிறிதாக வளர்ந்து நிற்கும்.*

*செப்ரெம்பரில் தேர்தல் முடிந்தாலும் ஆட்சி அமைக்க இணக்கம் காண முடியாமல் ஒக்டோபர் முடிவி லும் CDU, CSU, FDP, Gruene ஆகிய நான்கு கட்சி களும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றன.*

*முடிவு நல்லதாக இருக்க வேண்டும். விரைவில் நானும் பென்சனுக்கான வயதுக்கு வந்து விடுவேன். பயமாக இருக்கிறது.*

***1.11.2017***

# சட்டத்தின் முன்னால்

*கடந்த வருடம் ஒக்ரோபரில் யேர்மனியில் எசன் என்ற நகரத்தில் உள்ள டொச்ச வங்கியில் பணம் எடுக்கப் போனபொழுது 83வயதான கார்ல் என்பவர் மயக்கமாகி தரையில் விழுந்து விட்டார். அவர் விழும் போது தரையில் தலை மோதியதால் மூளையில் பாரிய அதிர்வு ஏற்பட்டிருக்கிறது.*

*பணம் எடுக்கும் அந்த இயந்திரத்துக்கு முன்னால் தரையில் நீண்ட நேரமாக கார்ல் மயக்க நிலையிலேயே இருந்திருக்கிறார். பின்னர் தகவல் அறிந்து அம்புலன்ஸ் வந்து அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றது. வைத்தியசாலையில் எவ்வளவோ முயன்றும் ஒரு வாரத்துக்கு மேல் மருத்துவர்களால் கார்லின் உயிரைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. தலையில் ஏற் பட்ட பலமான தாக்குதலால் மூளையில் பாரிய அதிர்வு ஏற்பட்டு அதனால் மரணம் நிகழ்ந்திருக்கிறது என்று மருத்துவர்கள் கார்லின் மரணத்துக்கான அறிக்கையை சமர்ப்பித்தார்கள்.*

*கார்லின் மரணம் இயற்கையானது என்றாலும் அவரது மரணம் தொடர்பான விடயம் தொடர்ந்தது.*

*பணம் எடுக்கும் இயந்திரத்திற்கு முன்னால் இருந்த கமராவில் ஒளிப்பதிவு செய்யப் பட்டிருந்த வீடியோவைப் பார்த்ததில், கார்ல் மயக்கமாக நிலத்தில் இருந்த நேரத்தில் நான்குபேர் அவரைக் கடந்து சென்று, இயந்திரத்தில் பணம் எடுத்தது பதிவாகி இருந்தது.*

*ஐந்தாவதாக வந்தவர் மட்டுமே கார்ல் தரையில் இருப்பதைப் பார்த்து அம்புலன்ஸ்ஸிற்கு அழைப்பைக் கொடுத்துவிட்டு தன்னாலான முதலுதவியை கார்லுக்குச் செய்திருந்தார்.*

*இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியாக 'இது தானா மனிதம்? பணம்தானா பிரதானம்? யேர்மனியில் ஐந்து பேரில் ஒருவருக்குத்தான் மனிதாபிமானம் இருக் கிறதா? 'என விவாதங்கள் தொடங்க, வழக்கு ஒன்று பதிவானது. கார்ல் நினைவிழந்து தரையில் படுத்திருந்த போது அவரைக் கடந்து போன நான்கு பேரையும் இனம் கண்டு நீதிமன்றம் அவர்களை விசாரணைக்கு அழைத்தது. அந்த நால்வரில் ஒருவர் மட்டும் பெண்.*

*'தரையில் படுத்திருந்த ஆண் வீடில்லாத ஒரு அநாதை. குடித்து விட்டு வங்கிக்குள் வந்து படுத்திருப் பதாக நினைத்துக் கொண்டேன்'*

*'இப்படியானவர்களைத் தொடுவதால் ஏதாவது நோய் தொற்றிக் கொள்ளலாம் என்ற அச்சம் இருந்தது.'*

*'எனது தாயார் படுக்கையில் இருக்கிறார். அவரை நான் தான் பராமரிக்கிறேன். வீட்டுக்கு உட னேயே போக வேண்டி இருந்தது'*

*'பல இடங்களில் வீடில்லாதவர்கள் இப்படிப் படுத்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே அன்றும் அதை நான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை' என்று நால்வரும் தங்களுடைய தரப்பு வாதங்களை தங்கள் தங்கள் சட்டத்தரணி மூலம் முன் வைத்தார்கள்.*

*'உடனடியாகக் கார்ல்லை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்திருந்தாலும் அவரை எங்களால் காப்பாற்றி யிருக்க முடியாது. அவ்வளவு மோசமான நிலையிலேயே அவரது உடல் நிலை இருந்தது' என்று மருத்துவரும் தனது சாட்சியத்தை அங்கே பதிவு செய்தார்.*

*வழக்கின் முடிவு 19.09.2017இல் வந்திருக்கிறது.*

*மாலை ஐந்து மணிக்குப் பிறகே இந்தச் சம்பவம் நடந்ததாகப் பதிவாகி இருக்கிறது. அப்பொழுது வங்கி*

*யின் செயற்பாடு வெளியாருக்கு இல்லை என்பதால் கடனட்டை இல்லாமல் வங்கிக்கதவை திறக்க இயலாது. வீடில்லாத ஒரு அநாதையிடம் வங்கிக் கடனட்டை இருப்பது சாத்தியமில்லை. கதவுக்கும் பணம் எடுக்கும் இயந்திரத்திற்கும் இடையில் கார்ல் சுயநினைவு இல்லா மல் விழுந்திருக்கிறார். அவரைக் கடந்துதான் உள்ளே போக முடியும். வெளியே வரமுடியும். நான்கு பேரும் அவரைக் கடந்து போய்த்தான் தங்கள் தேவைகளைச் செய்திருக்கிறார்கள்.*

*விபத்து ஒன்று நடக்குமிடத்தில் சமூக ஒற்றுமை யான செயற்பாடு அவசியம். ஒரு விபத்து நடக்கும் பட்சத்தில் முதலுதவி செய்யாதிருப்பதும் விபத்தில் பாதிப்புக்குள்ளானவருக்கு உதவிகள் கிடைக்கும் வழியை இடைமறித்து நிற்பதும் குற்றமான செயல்கள். மேலும் சூழ்நிலை, பிரதான முக்கிய கடமைகள், உயிராபத்து இவையேதும் இல்லாத பட்சத்தில் பாதிப்புக்குள்ளான வருக்கான முதலுதவி தராமல் போவது, வழிப்பறியைத் தடுக்கும் நடவடிக்கை எடுக்காது இருப்பது, கற்பழிப்பு போன்ற வன்முறைகள் நடக்கும் பட்சத்தில் அவற்றை நிறுத்த செயற்படாமல் இருப்பது என்பன யேர்மனியின் சட்டப்பந்தி 323C யின் படி பிழையான குற்றமாகக் கருதப்பட்டு ஒரு வருட சிறைத்தண்டனையளவில் வழங் கப் படலாம் என நீதிபதி விற்றன்பேர்க் எச்சரித்து 2400 யூரோவிலிருந்து 3600யூரோ வரை நான்கு பேருக்கும் அபராதம் அளித்து தீர்ப்புத் தந்திருக்கிறார்.*

*தினசரி தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதைத்தான் நோக்கமாக கொண்டவர்கள் மட்டும் அல்லர், ஒரு விபத்து நடக்கும் இடத்தில் அதை அவசர அவசரமாக கைத்தொலைபேசியில் பதிந்து சமூக வலைத் தளங்களில் தரவேற்றுவோரும், விபத்து நடக்கும் இடத் தில் முதலில் சமூக ஒற்றுமையான செயற்பாடும் முதலுதவியுமே அவசியம் என்பதை ஏனோ மறந்து விடுகிறார்கள்.*

***24.09.2017***

# மடியில் ஒளிந்திருக்கும் துளி விசம்

*இதை ஒரு கோழைத்தனமான தற்கொலை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு குற்றவாளி நீதி மன்றம் தனக்கு வழங்கிய தண்டனையை ஏற்க மறுத்து உரைப்பது இயல்பு. ஆனால் நீதிமன்றத்திலேயே தண்ட னையை மறுதலித்து, தற்கொலை செய்து கொள்வது என்பது நான் அறிந்த வரையில் புதிது.*

*கடந்த புதன் கிழமை (29.11.2017) நெதர்லாந்தின் Haagநகரில் உள்ள முன்னாள் யுகோஸ்லாவியாவுக்கான சர்வதேசக் குற்றவியல் நடுவர் மன்ற விசாரணையின் போது பொஸ்னியா நாட்டின் முன்னைய இராணுவத் தளபதி ஸ்லோபோடன் பிரல்ஜக் (வயது72) (Slobodan Praljak) விசமருந்தியதைத்தான் இங்கே நான் குறிப்பிடு கிறேன்.*

*திட்டமிட்ட கொலை, மனித நேயமற்ற நடத்தை, பாலியல் தாக்குதல், பொதுமக்களை சட்டவிரோதமாக நாடு கடத்துதல், பொதுமக்களை சட்டவிரோதமான முறையில் கைது செய்தல், சட்டவிரோத சிகிச்சை அளித்தல், பொது மக்களின் சொத்துக்களை அழித்தல்... போன்ற கடுமையான போர்க்குற்றங்களுக்காக 20 வருட சிறைத் தண்டனையை Praljakக்கு எதிராக நீதிபதி வழங்கிய போது 'நான் ஒரு போர்க் குற்றவாளி அல்ல. நான் உங்கள் தீர்ப்பை நிராகரிக்கிறேன்' என்று சத்த மாக அறிவித்து விட்டு டிவி கமராக்கள் படம் பிடித்துக் கொண்டிருக்கும் போதே தன்னிடம் இருந்த நஞ்சை அருந்தினார்.*

*நடப்பது என்ன என்று அறியாமல் நீதிபதி பிற குற்றவாளிகளுக்கு எதிரான தீர்ப்பை வாசிக்க முற்படும் போது, Praljakக்கின் வழக்கறிஞர் தனது வாடிக்கையா ளர் விஷத்தை விழுங்கி விட்டதாக அறிவித்ததுடன் நீதி*

*மன்றத்தில் பரபரப்பு ஆரம்பமானது.*

*அதன்பிறகு மன்றில் நடப்பதை ஒளிப்பதிவு செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்க வேண்டும். அம்புலன்ஸ் வந்ததை தொலைக்காட்சியில் காட்டினார்கள். பின்னர் Praljak மருத்துவமனையில் இறந்து போனதாக அறிவிப்பு வந்தது.*

*மின்துறையில் பொறியியலாளர், நாடக ஆசிரியர், தொலைக்காட்சித் தொடர்களை இயக்கியவர் எனப் பல பின்புலங்கள் Praljak க்கு இருக்கிறது. ஆனாலும் 1992-1995களில் நடந்த போஸ்னியப் போர் அவரை போஸ்னிய நாட்டின் மேஜர் ஜெனரல் ஆக்கிவிட்டது. முன்னாள் சோசலிசக் குடியரசான யுகோஸ்லாவியாவில் இருந்து போஸ்னியா-ஹெர்சகோவினா தனிநாட்டு கோரிக்கையை வைத்து பிரிந்து செல்லத் தீர்மானித்ததை அடுத்து அங்கு உள்நாட்டுச் சண்டை தொடங்கியது. அப்பொழுது குரோஷிய ஆயுதப் படைகளில் இணைந்து கொண்ட Praljak பாதுகாப்பு அமைச்சில் பல பொறுப்புகளில் இருந்திருக்கிறார். குரோஷியன் தேசியபாதுகாப்புச் சபையின் உறுப்பினர், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் படைகளின் குரோஷியன் பிரதேச சபை உறுப்பினர், பாதுகாப்பு அமைச்சின் உயர்பிரதிநிதி என அவரின் பொறுப்புகள் மிக நீண்டது.*

*1992-95 காலகட்டத்தில் நடைபெற்ற போரில், மோஸ்தர் நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக Praljak உள்ளிட்ட போஸ்னிய குரேஷிய இராணுவ அரசியல்வாதிகள் ஆறு பேருக்கு சர்வதேச நீதிமன்றில் 2013ல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்தத் தண்டனையை எதிர்த்து அவர்கள் மேல் முறையீடு செய்திருந்தனர். அவர்களின் மேல் முறையீடு நிராகரிக்கப்பட்டு தீர்ப்பை உறுதி செய்த போதே Praljak விசத்தை தனது முடிவுக்காக எடுத்துக் கொண்டிருக்கிறார்.*

*Praljak கிடம் எப்படி விசம் அடங்கிய போத்தல்*

*வந்தது. அதுவும் மன்றத்துக்குள் அதை அவரால் எப்படிக் கொண்டுவர முடிந்தது என்ற கேள்விகளுக்கு இன்னமும் பதில் இல்லை. ஆனால் என்னிடம் வேறு ஒரு கேள்வி இருக்கிறது. Praljak செய்த போர்க்குற்றங்களை ஒத்த அல்லது அதற்கு மேலான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் எல்லாம் 2009இலும் அதற்கு முன்னரும் சிறீ லங்காவில் நடந்திருக்கின்றன. அதைச் செய்தவர்கள் எப் போது சர்வதேசக் குற்றவியல் நடுவர்மன்ற விசாரணை க்கு வரப் போகிறார்கள்?*

*எங்கள் நாட்டு அரசியல் தெரிந்த ஒருவரிடம் இதைப் பற்றி நான் கேட்ட போது அவர் சொன்னார் 'சதுரங்க விளையாட்டில் நாங்கள் எப்போதும் போர் வீரர்கள்தான். அப்படி ஒரு நிலை பக்கத்து நாட்டால் எப்போதோ ஏற்படுத்தப் பட்டு விட்டது. அவர்கள் நகர்த்தும் பகடைக்காய்களாக நமது அரசியல் தலைகள் இருக்கும் விதமாக அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். என்றாவது ஒருநாள் அதிசயமாக அது நடந்தால் கூட சிறீலங்காவில் நடந்தவற்றைக் கேட்டு நீதிபதிதான் மனமுடைந்து, விசம் அருந்தி, தற்கொலை செய்வாரே தவிர, குற்றம் செய்தவர்கள் சிரித்துக் கொண்டே தெற்கத்திய வீரர்களாக வெளியே வந்து விடுவார்கள்'*

***01.12.2017***

# தனி ஒரு மனிதன் திருந்திவிட்டால்...

*29 வருடங்களுக்கு முன்னால் 'வங்கி ஒன்று கொள்ளையிடப்படுகிறது' என யேர்மனிய ஊடகங்கள் பெரிதாக அலறின. நான் யேர்மனிக்கு வந்து சில வருடங்களாகிப் போன நிலையில் இந்தக் கொள்ளை பற்றிய செய்தி என்னையும் அதன்பால் இழுத்திருந்தது. யேர்மனியின் மூச்சுக்குழாயை இறுக்கி அழுத்திப் பிடித்த அந்த வங்கிக் கொள்ளையும் அதன் பின்னரான பணய நாடகமும் யேர்மனியின் குற்றவியல் புத்தகத்தில் 'கிளாட் பாக் பணயநாடகம்' என்ற பெயரில் கரும் பக்கங்களாக பதிந்து போய்விட்டிருக்கிறது.*

*ஓகஸ்ட் மாதம் 16ந் திகதி 1988 அதிகாலையில் முகமூடி அணிந்த படி டீற்றரும் அவனது நண்பனான ஹன்ஸூம், கிளாட்பாக் என்ற நகரத்தில் இருந்த டொச்ச வங்கியை கொள்ளையிடப் போயிருந்தார்கள். அவர்கள் கொள்ளையிட எதிர்பார்த்த தொகை வங்கியில் இருக்கவில்லை. ஆனாலும் அங்கே இருந்த 120,000 டொச்ச மார்க்குகளை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.*

*பக்கத்துக் கட்டிடத்தில் இருந்த மருத்துவர் ஒருவர் தனது முதல் மாடியில் இருந்து வங்கியில் நடப் பதை அவதானித்து, காலை 8.04க்கு பொலீஸூக்கு தகவ லைக் கொடுக்கும் வரை எல்லாமே அவர்கள் திட்டமிட்ட படி சரியாகத்தான் நடந்து கொண்டிருந்தன.*

*தகவல் கிடைத்ததால் பொலீஸ் வாகனங்கள் வங்கியின் வாசலிலே வந்துநின்றன. இதனால் டீற்றரும் ஹன்ஸூம் வங்கியை விட்டுத் தப்பிக்க முடியாத நிலையில் இருந்தார்கள். அவர்கள் தங்கள் அடுத்த கட்ட நடவடிக்கையாக வங்கிஊழியர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு பேரம் பேச ஆரம்பித்தார்கள்.*

ஏற்கெனவே அவர்கள் எதிர்பார்த்த தொகை வங்கியில் இருக்காததனால் பேரத்தில் கொஞ்சம் அதிக மாகவே கேட்டார்கள். 300,000 டொச்ச மார்க்குகளும் பயணம் செய்ய ஒரு BMW காரும் தங்களுக்குத் தர வேண்டும் என்பது அவர்களது பேரமாக இருந்தது.

இதற்குள் கிளாட்பாக்நகரத்து அரச சட்டத்தரணி சம்பவ இடத்துக்கு நேரடியாக வந்து, 'சரணடையுங்கள். உங்களுக்கான தண்டனையை ஆறு மாதங்களுக்குள் அமைவதாக நான் பார்த்துக் கொள்கிறேன். மேற் கொண்டு தவறுகள் ஏதும் செய்து விடாதீர்கள்' என்று பண்பாக ஒலிபரப்பி மூலம் கேட்டும் பார்த்தார். அவரது கோரிக்கையை டீற்றரும் ஹன்ஸும் கண்டு கொள்ளவே இல்லை.

ஏதாவது வழியில் அவர்களைக் கைது செய்து தங்களது திறமையைக் காட்டிக் கொள்ளலாம் என பொலீஸ்துறையும் அவர்களோடு தொலைபேசியில் உரையாடி, காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தது.

எதுவுமே கைகூடாத நிலையில் இரவு 9 மணி யளவில் டீற்றரும் ஹன்ஸும் கேட்டுக்கொண்டதன்படி பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் உள்ளாடையுடன் மட்டும் சென்று வங்கியின் வாசலில் 300,000 டொச்ச மார்க்குகளை வைத்து விட்டு வந்தார். கூடவே அவர்களு க்கு ஒரு Audiகாரும் வழங்கப்பட்டது.

இரண்டு பணயக் கைதிகளை மட்டும் தங்களது பிடியில் வைத்துக் கொண்டு வங்கியை விட்டு வெளியேறிய டீற்றரும் ஹன்ஸும் நேரடியாக பிறீமன் நகரத்துக்குச் சென்றார்கள். அங்கே ஹன்சின் காதலி யான மரியோனையும் தங்கள் காரில் ஏற்றிக் கொண் டார்கள். பொலீஸ் தந்த காரைத் தொடர்ந்து பயன் படுத்தினால் பின்னால் ஏதாவது பிரச்சனைகள் வந்து விடும் என்ற எச்சரிக்கை காரணமாக, வழியில் துப்பாக் கியைக் காட்டி மிரட்டி ஒரு காரை பறிமுதல் செய்து அதில் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

பார்மஸியில் மருந்து வாங்கி, ரெஸ்ரோறண்டில் ஆறுதலாக இருந்து, அனுபவித்துக் காலையுணவு உண்டு கடையில் பழங்கள் வாங்கி உல்லாசமாகப் போய்க் கொண்டிருந்தவர்கள், காரில் இருந்த வானொலியை இயக்கியபோதுதான் தாங்கள் எந்தவிதமான சூழ்நிலைக் குள் இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

டீற்றரும் ஹன்ஸூம் பயணிக்கும் பாதை, அவர்க ளது நடவடிக்கைகள் எல்லாவற்றையும் பொலீஸ்துறை யிடமிருந்து பெற்று வானொலிகள் நேரடி ஒலிப்பரப்பு செய்து கொண்டிருந்தன. டீற்றரும் ஹன்ஸூம் தாங்கள் கண்காணிக்கப்படுவதைப் புரிந்து கொண்டார்கள்.

தொடர்ந்து காரில் பயணிப்பது பாதுகாப்பாக இருக்காது எனக் கருதி பிறீமன் நகரத்தில் இருந்து புறப் படத் தயாராக இருந்த பஸ் ஒன்றை 32 பயணிகளுடன் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். பிறகு என்ன நினைத்தார்களோ தெரியவில்லை பணயக் கைதி களான வங்கி ஊழியர்கள் இருவரையும், பஸ்ஸில் இருந்த ஐந்து பேரையும் விடுதலை செய்தார்கள்.

அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த பஸ்ஸில் தான் 18வயதான சில்கே தனது நண்பி ஃனெஸ் உட னும் 15 வயதான இம்மானுவேல் தனது ஒன்பது வய தான தங்கையுடனும் பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

பயண நடுவில் நெடுஞ்சாலையில் இருந்த உணவு விடுதி ஒன்றின் கழிப்பிடமொன்றிற்கு ஹன்சின் காதலி மரியோன் செல்லும்போது அவளை பொலீஸார் அதிரடியாகக் கைது செய்தார்கள். கைது செய்யும் பொழுது அவள் போட்ட கூச்சல் டீற்றருக்கும் ஹன்ஸூக்கும் கோபத்தை அதிகப் படுத்தியது. உடனடி யாக மரியோனை விடுவிக்காவிட்டால் முதற் கட்டமாக பணயக் கைதி ஒருவரை சுட்டுவிடப் போவதாக டீற்றர் எச்சரித்தான். மரியோனின் கை விலங்கை பொலீஸ் கழட்டுவதில் ஏற்பட்ட தாமதத்தை வேண்டுமென்றே பொலீஸ்காரர்கள் காலத்தைக் கடத்துகிறார்களெனத்

*தவறாகப் புரிந்து கொண்டு பணயக்கைதியில்ஒருவனான இம்மானுவேலை டீற்றர் சுட்டான்.*

*இம்மானுவேல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த சிறுவன். டீற்றரிடம் இனத்துவேசம் இருந்ததனால்தான் இத்தாலியச் சிறுவனான இம்மானுவேலை முதலாவது ஆளாகச் சுடுவதற்கு தெரிவு செய்திருக்கிறான் என அறிக்கைகள் பின்னர் வந்தன. அவசர உதவி இருபது நிமிடங்கள் தாமதமாகவே கிடைத்ததால் சுடப்பட்டு வீதியில் போடப் பட்ட இம்மானுவேல் இறந்து போனான். பின்னர் நடந்த அவனது உடல் அடக்கத்தின் போது 25,000 யேர்மனியர்கள் கலந்து கொண்டு தங்கள் இரங்கலைத் தெரிவித்தார்கள்.*

*யேர்மனியப் பொலீஸாரை விட ஹொலண்ட் நாட்டுப் பொலிஸார் மென்மையானவர்கள் என தாங்கள் எங்கேயோ கேட்டதை நினைத்து, டீற்றரும் ஹன்ஸூம், ஹொலண்டுக்கு பஸ்ஸை செலுத்தும் படி நடத்துனருக்கு உத்தரவு போட்டார்கள். ஹொலண்ட் நகரத்துக்கு அவர்கள் பயணிக்கும் பொழுது அவர்களைத் தொடர்ந்து சென்ற பொலீஸ் வாகனம் ஒரு லொறி யுடன் மோதியதால் அதில் ஒரு பொலீஸ் இறந்து போனார். இன்னுமொரு பொலீஸ் காயத்துக்கு உள்ளானார்.*

*ஹொலண்ட்டில் டீற்றருக்கும் ஹன்ஸூக்கும் சாதகமாக எதுவுமே அமையவில்லை. 'முதலில் குழந்தை கள், வயதுவந்தவர்களை விடுவியுங்கள். அதற்குப் பிறகு பேசுவதைப் பற்றி யோசிப்போம்' என ஹொலண்ட் பொலீஸ் அறிவித்தது. வேறு வழியின்றி குழந்தைகள், வயதுவந்தவர்களை விடுவித்தார்கள். அதன் பிறகும் எதுவித முன்னேற்றமும் இல்லாததால் சில்கேயையும். ஃபினெஸையும் பணயக் கைதிகளாக வைத்துக்கொண்டு ஏனையவர்களை விடுதலை செய்து விட்டு தாங்கள் பயணிப்பதற்கு ஒரு கார் வேண்டும் என்றார்கள். தாராள மனதுடன் அவர்களுக்கு ஒரு காரைக் கொடுத் தார்கள்.*

*ஆனால் அந்தக் காரில் கண்காணிப்புக் கருவியும் மைக்ரபோனும் பொருத்தப் பட்டிருந்தன. அத்தோடு காரின் வேகத்தை வெளியில் இருந்து தானியங்கிக் கருவிமூலம் கட்டுப்படுத்தும் வகையிலும் அது வடிவமைக் கப் பட்டிருந்தது.*

*ஹொலண்டில் ஆகப் போவது எதுவுமே இல்லை என்றாகிப் போன நிலையில் பணயக்கைதிகள் இருவ ருடனும் யேர்மனி நோக்கிப் பயணிக்க முடிவெடுத் தார்கள். தனது காதலி மரியோனை தனது பக்கத்தில் வைத்துக் கொண்டு ஹன்ஸ் காரை ஓட்டினான். பின் இருக்கையில் இரண்டு பணயக் கைதிகளின் நடுவே டீற்றர் துப்பாக்கியுடன் அமர்ந்து கொண்டான். ஊடகங்கள் அவர்களைப் பின் தொடர்ந்து சந்தர்ப் பங்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் பேட்டி கண்டு நிலைமைகளை அறிவித்துக் கொண்டே சென்றார்கள்.*

*கேர்ளின் நகர மையத்தில் வைத்து மக்கள் திரளாகப் பார்த்துக் கொண்டிருக்க ஊடகங்கள் அவர்களைப் பேட்டிகள் எடுத்தது, பலத்த விசனத்துக்கு உள்ளானது. ஒரு குற்றச்செயல் நடந்து கொண்டிருக்கும் பொழுது குற்றவாளிகளை ஊடகங்கள் பேட்டி எடுப்பது எவ்வளவு பாரதூரமான செயற்பாடு என்பதையும் அது எந்தளவுக்கு பொலீஸ்துறைக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதையும் ஊடகத்துறை பிறகுதான் உணர்ந்து கொண்டது. அதன் பின்னரே தங்கள் தவறுக்காக வருந்தி மன்னிப்புக்கோரி 'இனி, குற்றச் செயல்கள் நடக்கும் போது இப்படி நடந்த கொள்ள மாட்டோம்' என யேர்மனிய ஊடக சம்மேளனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.*

*இரண்டாம் நாள் (18.08.1988) ஹன்ஸ் காரை கேர்ளினில் இருந்து பிரங்பேர்ட் நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தான்.*

*அடுத்து தாங்கள் வெளிநாடு ஒன்றுக்குப் பறப்பதற்கு ஒரு விமானத்தை கேட்கப் போகிறார்களோ*

என எல்லோரிடமும் ஒரு கேள்வி இருந்தது. இந்தக் கேள்வி பொலீஸ்துறைக்கும் வந்திருக்க வேண்டும். அத்தோடு மாநிலத்தின் உள்துறை அமைச்சிடமிருந்து வந்த நெருக்குதல்களும் பொலீஸ்துறைக்குச் சேர்ந்து கொண்டது.

பிராங்பேர்ட்டை நெருங்குவதற்கு முன்னால் அவர்கள் பயணிக்கும் வாகனத்தின் வேகத்தைக் கட்டுப் படுத்தி இன்னுமொரு வாகனத்தை அதனுடன் மோத விட்டு டீற்றரையும் ஹன்ஸையும் கைது செய்வது என பொலீஸ் அதிரடிப்படை திட்டம் தீட்டியது. திட்டத் திற்கான இடத்தையும் தீர்மானித்து ஆயத்தமான நிலை யில் இருக்கும் போதுதான் வேகத்தைக் கட்டுப்படுத்தும் தானியங்கியை தாங்கள் எடுத்துவர மறந்து போனது பொலீஸூக்குத் தெரிந்தது. இதற்குமேல் தாமதப் படுத்தி னால் அது வேறு விளைவுகளை ஏற்படுத்தலாம் எனக் கருதி டீற்றரும் ஹன்ஸூம் பயணித்த கார் வந்து கொண்டிருந்த வேகத்துடனேயே ஒரு வாகனத்தை மோத விட்டார்கள்.

பொலீஸ் திட்டமிட்டபடி டீற்றரும் ஹன்ஸூம் சற்று நிலை குலைந்துதான் போனார்கள். ஆனாலும் அவர்கள் தங்களின் துப்பாக்கிகளை பாவிக்கத் தொடங் கினார்கள். பொலீஸ் தரப்பில் இருந்து மட்டும் 62 தடவைகள் சுடப்படதாக அவர்களின் பதிவேட்டில் இருக்கிறது.

இந்தத் துப்பாக்கிச்சண்டையின் நடுவே கிடைத்த சிறியசந்தர்பத்தில் சில்கேயின் நண்பி ஃனெஸ் காரில் இருந்து இறங்கி ஓடி, தப்பித்துக் கொண்டாள். ஆனாலும் அவளது தோள்பட்டையில் குண்டு பாய்ந் திருந்தது. முடிவில் டீற்றர், ஹன்ஸ், மரியோன் மூவரையும் பொலீஸ் கைது செய்தது. சில்கே? அவள் வாகனத்தில் இறந்து கிடந்தாள். 'ஹன்ஸின் துப்பாக்கிக் குண்டு அவள் உடலில் இருந்தது' என வழக்கு நடக்கும் பொழுது பொலிஸ் தரப்பில் இருந்து அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

*பொலிஸ்துறை இன்னும் சற்றுக் கவனத்துடன் செயற்பட்டிருந்தால் இத்தாலியச் சிறுவன் இம்மானுவெலின் உயிரையும் சில்கேயின் உயிரையும் காப்பாற்றியிருக்கலாம் என்ற காரணத்தால் Nordrhrin-Westfalen உட்துறை அமைச்சர் தனது பதவியை இராஜினாமாச் செய்து கொண்டார்.*

*டீற்றர், ஹன்ஸ் இருவர் மேலும் தொடரப்பட்ட வழக்கு 1991இல் விசாரணைக்கு வந்தது. 117 நாட்கள் நடந்த வழக்கில் டீற்றர், ஹன்ஸ் இருவருக்கும் ஆயுள் தண்டனை (30 வருடங்கள்) யும் மரியோனுக்கு ஒன்பது வருடங்கள் சிறைத் தண்டனையும் நீதிமன்றத்தால் வழங்கப் பட்டன. மரியோனுக்கு இருந்த நோய்கள், அவளுக்குத் தேவைப்படும் மருத்துவ வசதிகள் மற்றும் சிறையில் நடந்து கொண்ட தன்மைகளை வைத்து ஆறு வருடங்களில் அவள் சிறையில் இருந்து விடுதலையானாள்.*

*கொலை செய்யப்பட்ட இத்தாலியச் சிறுவன் இம்மானுவேலைச் சில நாட்களில் எல்லோரும் மறந்து விட்டார்கள்.*

*ஆனால் சில்கேயை யேர்மனியரால் உடனடியாக மறந்து விட முடியவில்லை. அவள் பெயரில் இசைக்குழு ஆரம்பிக்கப்பட்டு பாடல்கள் பல வெளிவந்தன. நடந்து போன பணயநாடகத்தை திரைப்படமாக, ஆவணப் படமாக, தொலைக்காட்சித் தொடராக எல்லாம் எடுத்து வெளியிட்டார்கள். காலப்போக்கில் எல்லோரும் அந்தப் பணயநாடகத்தை மறந்துவிட்ட நிலையில் 29 வருடங்கள் கழித்து மீண்டும் அதை ஊடகங்கள் நினைவு படுத்தியிருக்கின்றன.*

*’சிறையில் நடந்து கொண்ட விதம் மற்றும் உளநிலை அறிக்கை ஆகியவற்றைக் கணக்கிட்டு 2017 நவம்பர் மாதத்தில் தனது தண்டனை முடிந்து டீற்றர் (61வது வயது) விடுதலையாகிறான்’ என சிறை அதிகாரி அறிவித்திருக்கிறார்.*

*வேறு ஒரு பெயரில் புதிய அறிமுகமொன்றுடன் டீற்றரின் வாழ்க்கை அமையப்போகிறது. அப்படியாயின் ஹன்ஸின் விடுதலை?*

*சிறையில் போதைமருந்து வைத்திருந்தது மற்றும் அங்கே நடந்துகொண்ட தன்மைகளை வைத்து அவனது தண்டனைக் காலம் இன்னும் கொஞ்சம் கூடியிருக்கிறது. ஆனாலும் தன்னையும் விடுதலை செய்யுங்கள் என்று மனு அளித்துவிட்டு அவன் காத்திருக்கிறான்.*

*ஒரு மனிதனுக்கு அவனது குற்றச் செயலுக்காக வழங்கப்படும் தண்டனையானது அவனை நல்வழிப் படுத்தி சமூகத்தில் மீண்டும் சேர்ந்து வாழ வைப்பதுதான் என்பதில் மேற்கத்தையவர்களது செயற்பாடு சரியாகத் தான் இருக்கிறது. ஆனால் எங்களது நாட்டில் மட்டும் அது வாழ்நாள் தண்டனையாகிப் போயிருக்கிறது.*

*அதுவும் தரையில் நடக்கும் பொழுது கால்பட்டு எறும்பு, பூச்சிகள் இறந்து விடக் கூடாது என்று மயில் இறகுகள் கொண்டு தரையைக் கூட்டிக்கொண்டு நடந்த வர்களைப் பின்பற்றி வந்தவர்கள், நீண்டகாலங்களாகச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் அப்பாவிகளை கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும்.*

***01.11.2017***


மனஓசை வெளியீடு